தேசமித்

-1-50 THE SWADESAMITRAN WEEKLY Pri



OFFICE OF THE REGISTRAR OF BOOKS [1950] MADRAS

2-74 1-50

50

JL m211, N30 S N5021.51 198557

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டரி ஹவுஸ், :: மவுண்ட்ரோட், சென்னை.

அடியில்கண்ட ரயில்வே பிளாட்பாரங்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன.

ரயில்வே ஸ்டால்கள்

1. விழுப்புரம்.
2. கூடலூர் N.T.
3. கும்பகோணம்.
4. விருதுநகர்:
5. கோயம்பத்தூர்
6. திருவாரூர்.
7. திண்டுக்கல்.
8. திருச்சிகோட்டை.
9. திருச்சி ஜங்ஷன்.
10. கரூர்.
11. மானாமதுரை.
12. தென்காசி.
13. சேலம் மார்கெட்,
14. மதுரை ஜங்ஷன்.
15. ஈரோடு ஜங்ஷன்.
16. திருப்பூர்.
17. மாயவரம் ஜங்ஷன்.
18. விருத்தாசலம்.
19. பொள்ளாச்சி.
20. ஸ்ரீவைகுண்டம்.
21. திருத்துரைப் பூண்டி.
22. பழனி.
23. பரமக்குடி.
24. தாம்பரம்.
25. மதராஸ் பீச்.
26. திருநெல்வேலி.
27. ஓலவக்கோடு
28. செங்கற்பட்டு
29. தூத்துக்குடி

பிராஞ்சு: திருப்பதி.

மேற்படி இடங்களில் எல்லா விதமான இங்கிலீஷ், தமிழ்ப் புத்தகங்களும், தினசரி, வார பத்திரிகைகளும், அமெரிக்கா, இங்கிலாந்து முதலியவிடங்களில் பிரசுரமாகும் வாரப் பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

மானேஜர்,

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டரி ஹவுஸ், மவுண்டுரோடு, சென்னை

இப்பொழுது வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

...சென்னை...

கெயிட்டி & கிரௌன்

மதுரை	—	சிந்தாமணி
கோயம்புத்தூர்	—	தியேட்டர் ராயல்
திருச்சிராப்பள்ளி	—	வெல்லிங்டன்
சேலம்	—	ஓரியண்டல்
திருநெல்வேலி	—	ராயல்
தஞ்சாவூர்	—	யாகப்பா
கும்பகோணம்	—	டயமண்ட்
வேலூர்	—	டாஜ்
காஞ்சீபுரம்	—	கண்ணன்
விழுப்புரம்	—	பாலகிருஷ்ணா
ஈரோடு	—	கிருஷ்ணா
கரூர்	—	ராஜாராம்
திருவண்ணாமலை	—	கிருஷ்ணா
விருதுநகர்	—	நியூ முத்து
மைசூர்	—	நியூ ஆபரா

பெங்களூர் — சிவாஜி, ஸ்வஸ்திக், ரூப் மஹால் மற்றும் ஆந்திரதேச முழுவதிலும்.

டைரக்ஷன்:

சுந்தர் ராவ் நட்கர்ணி

ஸ்டுடியோ - சென்ட்ரல்.

198557
சென்னை 600 008

சுதேசமித்திரன்

பொருளடக்கம்

		பக்கம்.
மனச் சாந்தி	எஸ். டி ஸ்ரீ	5
தேர்த்தட்டு வார்த்தை	வாரன்	9
கலா மண்டபம்		11
பொங்கல் புது வண்டி	பத்மா நாராயணன்	15
ரேகை நிபுணர்கள்	எஸ். ஜே	17
செல்லப்பிள்ளை	நில்லைவாசி	23
ஸங்கீத பாரிஜாதம்	பண்டித கிருஷ்ணமாச்சார்யா	29
அக்பரும் தாடிவாதமும்	எம். எஸ் சுப்பிரமணிய ஐயர்	31
வாழ்க்கைச் சுழல் (தொடர் கதை)	இந்து	35
பழங்கள்	நாராயணய்யா	40
குடும்ப வைத்தியம்	குச்சாமாமா	42
காட்டில் செய்யுள் பாடம் (சிறுவர் கதை)	மணி	47

"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் முற்றிலும் கற்பனையே, அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாரப்பதிப்பு வாழ்க நற்றமிழர்!

Vol XXI] விரோதிஹு தைமீ 9௨ ★ 1950-ஹு ஜனவரிமீ 22௨ No ௫1

ஸர்தாரின் உபதேசம்

வங்காளம், சுதந்திரப் போராட்டத்தில் முன்னணியில் நின்றமாகாணம். ஆனால், சுதந்திரம் கிடைத்த பின் இப்போது தொலலை விளைவிக்கும் பிரதேசமாகக் காணப்படுகிறது. தேசத்தின் பொது அமைதியையும் சாவதானத்தையும் வேண்டுவோர் வங்காள நிலைமை குறித்து கவலை கொள்ளாமலிருப்பதற்கில்லை. ஓயாது பலாத்காரச் செயல்கள் அங்கு மிகுந்துள்ளன. நிரபராதிகள் அனாவசியமாக ஆபத்திற்குள்ளாக்கப்படுகின்றனர். கொலை, கொள்ளை, பஸ், டிராம் முதலியவைகளில் தீ வைத்தல் போன்ற அடாத செயல்கள் அதிகரித்து வருகின்றன. பெரும்பாலும் கம்யூனிஸ்டுகளின் வெறிபிடித்த அக்கிரமச் செயல்களே இந்நிலைக்குக் காரணம். அதிலும் சதிக் கூட்டம் ரகசியமாக நாசவேலைகளில் ஈடுபட்டு வருவதுதான் அதிகக் கவலையையும் ஆபத்தையும் உண்டுபண்ணி வருகிறது. அத்துடன் காங்கிரஸ் அரசியலும் அங்கு பிளவுகளால் பலமற்றுவருகிறது கல்கத்தா அல்லது வங்காளத்துடன்தான் இந்நிலைமை நிற்குமென்று அயர்ந்திருப்பதற்குமில்லை. சட்டம், அமைதியைக் குலைக்கும் சமூகத்துரோகச் செயல்களுக்கு ஓரிடத்தில் இடம் கொடுத்தால் அது மற்ற விடங்களுக்கும் பரவும் சுபாவமுடையது. இதை ஒரு ஸ்தலப் பிரச்னையாகமாத்திரம் அசட்டை செய்வதற்கில்லை. ஆகவே உதவி பிரதம மந்திரி ஸர்தார் படேல் நேரிட இதில் கவனஞ் செலுத்த முற்பட்டு கல்கத்தா சென்றுர். இது முற்றிலும் பொருத்தமாகும் ஸர்தார் எடுத்த பணியைத் திறம்பட முடிக்கும் ஆற்றலும் தீரமும் படைத்தவர். ஸ்தல அதிகாரிகளையும் பிரமுகர்களையும் கலந்து ஆலோசிப்பதில் அவர் கவனஞ் செலுத்தியிருக்கிறுர். அவர் முயற்சியின் காரணமாக வங்காள நிலைமை சீக்கிரத்திலேயே சீர்பட வேண்டுமென்பது எல்லோருடைய ஆவலுமாகும்.

ஸர்தார் படேல் கல்கத்தா செல்லுமுன் இது சம்பந்தமான ஒரு முக்கிய அலுவலை டில்லியில் நிறைவேற்றியிருக்கிறுர். அங்கு கூடிய போலீஸ் அதிபர்கள் மகாநாட்டில் சில முக்கிய கருத்துகளை தெரிவித்திருக்கிறுர். சுதந்திரம் கிடைத்துள்ள இந்த இரண்டு வருஷங்களில் எவ்வளவோ கொந்தளிப்புகளும் கலவரங்களும் நேர்ந்தும் தேசம் திறமையாகவே அவற்றைச் சமாளித்திருக்கிறது. எளிதில் எதிர்பார்க்க முடியாத விசேஷத் திறமையுடனேயே எங்கும் சமாதானம் நிலவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆயினும், மழைவிட்டும் ஆங்காங்கு தூவானம் நின்றபாடில்லை. "மிகவும் நெருக்கடியான காலம் எதிர் நோக்கியிருக்கிறது, உள்நாட்டுப் பாதுகாப்பை நிலை நிறுத்தும் முயற்சியை எவ்விதத்திலும் தளர்த்துவதற்கில்லையென" உதவிப் பிரதம மந்திரி எச்சரிக்கை செய்துள்ளதில் மிகுந்த அர்த்தம் உண்டு

கலவரங்களையெல்லாம் ஒருவாறு அடக்கி குறுகிய பிரதேசத்திற்குள்ளாக ஒடுக்கியிருப்பினும் வெகு சாதுர்யமாகவும் தந்திரமாகவும் சூட்சி செய்து ரகசிய நாசவேலை அதிகம் நடந்து வருகிறது. இவற்றையும் பூண்டோடு களைந்து விட வேண்டுமென்பதைப் போலீஸ் அதிபர்களுக்கு ஸர்தார் படேல் அறிவுறுத்தியிருக்கிறுர். இந்தியாவின் பக்கத்து நாடுகள் சிலவற்றில் ஏற்பட்டுள்ள நிலைமை இங்கும் தலைக்காட்ட இடமளிக்கலாகாது இதற்கு போலீஸ் அதிகாரிகள் மிக ஜரூராக வேலை செய்வதுடன், புதிய ஆபத்துக்களைச் சமாளிக்க புதிய முறைகளையும் கையாளும்படி தைர்யமும் ஊக்கமும் அவர்களுக்கு ஏற்படவேண்டும். இதில் பொது மக்களுக்கும் மிகுந்த பொறுப்பு உண்டென்பதை ஸர்தார் எடுத்துக் காட்டியிருக்கிறுர். ஜனநாயக ஆட்சியென்பது ஒரு போலீஸ் ஆட்சியாக விருப்பதற்கில்லை. போலீஸ் நடவடிக்கைகள் சமூகத்துரோகிகளை ஒடுக்குவதற்கே உத்தேசிக்கப்பட்டவையென்பதைப் பொது ஜனங்களும் உணர்ந்து, அதில் ஒத்துழைக்குமாறு போலீஸ் அதிகாரிகள் நடந்துகொள்ளவேண்டுமென்பதும் அவர்கருத்து. போலீஸார் திறமையாகவும் உண்மையுடனும் நிஷ்பட்சபாதமாகவும் தங்கள் சேவையைச் செய்யும்பட்சத்தில், பொதுமக்கள் மனதை அவர்கள் கவர்ந்துவிட முடியும் என்ற அவரதுஉபதேசத்தை அதிகாரிகள் தக்கபடி பயன்படுத்தினுல்போலீஸுக்கும் மக்களுக்குமுள்ள வேறுபாடும்அகன்றுவிடும்.



சென்ற வாரம் காமன்வெல்த் வெளிநாட்டு மந்திரிகள் மகாநாட்டுக்காக இலங்கை வந்திருந்த பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு இலங்கை வாழ் இந்தியர்கள் ஒரு அன்பு விருந்த வரவேற்பு உபசாரம் நடத்தினர். படத்தில் பண்டிட்ஜி பக்கத்தில் வீற்றிருப்பவர் இலங்கை பிரதம மந்திரி ஸ்ரீ சேனநாயகா.

★

சமீபத்தில் டில்லி மத்திய தந்தி ஆபீஸின் வெளிநாட்டு இலாகாவில் மந்திரி கனம் ரபி அகமது கித்வாய் இந்தியா-ஆப்கானிஸ்தான் ரேடியோ தொடர்பு சர்வீஸை முதன் முதலாகத் துவக்கி வைத்தார்.

★

மனச்சாந்தி

[எஸ்டி ஸ்ரீ]

"அம்மா! உங்களுக்குச் சமாசாரம் தெரியுங்களா?" என்று கேட்டாள் மாட்டுக் கொட்டிலைப் பெருக்கிக்கொண்டிருந்த அஞ்சலை.

புல் தேய்த்துக்கொண்டிருந்த கல்யாணி திடுக்கிட்டவளாய், "எந்த சமாசாரம் டீ?" என்றாள்.

"சுந்தரத்தின் அத்தை புருஷன், பட்டணத்திலே இருந்தாரே. அவரு ஏதோ ஆபீஸ் விஷயமா வடக்கே எங்கேயோ போனாராம். அங்கே திடீர்னு மாரடைப்பாலே செத்துப் போயிட்டாராம்! நேத்து காலையிலே பட்டணத்துக்குத் தந்தி வந்துச்சாம் சுந்தரம் அவுங்க அத்தையையும். அத்தை பொண்ணையும் அழைச்சிண்டு வந்து இங்கே விட்டுவிட்டு இப்பத்தான் பட்டணம் போவுது! அது ஒருவேளைகூட இங்கே தங்கறத்துக்கு இல்லையாம்! இப்போ ஏதோ பரீட்சையாமில்லே? பாவம்! அந்த அம்மாளைப் பார்த்தா பரிதாபமா இருக்குது! அந்தம்மா பொண்ணுக்குக் கல்யாணமாற வயசு? பார்க்கறத்துக்கு கிளி மாதிரி இருக்குது! ரெண்டு பேரையும் விட்டுட்டுப் போயிட்டாரு பாவி மனுஷரு......" என்று சொல்லிவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கச் சென்றாள் அஞ்சலை

"ஐயோ பாவம்!" என்று முணுமுணுத்தது கல்யாணியின் வாய்.

2

கல்யாணி ஆலங்குடி மிராசுதார் சிவராமகிருஷ்ணய்யரின் ஏகப் புதல்வி இரட்டைத் தெருவில் இருந்த அவர்கள் வீடுதான் ஊரிலேயே மிகப்பெரியது

கல்யாணி நல்ல அழகு; அறிவும் கூடச் சேர்ந்திருந்தது. சிறு வயதிலிருந்தே நன்றாகப் படித்துவந்தாள்.

அவள் அவ்வூர் ஆரம்பப்பாடசாலையில் இரண்டாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோதுதான் சுந்தரம் அதில் ஐந்தாவது வகுப்பில் சேர்ந்தான். விவரிக்கமுடியாத ஏதோ ஒருவிதபாசம் கல்யாணியைச் சுந்தரத்திடம் இழுத்தது.

அவன் வீடு ஒற்றைத் தெருவில் இருந்தது அவன் தகப்பனாரும் அவ்வூர்வாசிதான். ஆனால் பல வருஷங்களாக அவர் அவ்வூரில் இல்லை கோயமுத்தூர் விவசாயக் கல்லூரியில் போதகாசிரியராக வேலைபார்த்து வந்த அவர், அப்போது மகாத்மா காந்தியடிகளின் சுதந்திர இயக்கத்தில்சேர்ந்து வேலையை ராஜிநாமாச் செய்துவிட்டு, கிராமத்திலேயேவந்து குடியேறி நிலபுலன்களைப் பார்த்துக்கொண்டு கிராமப்புனருத்தாரண வேலைகளில் ஈடுபட்டார்.

சுந்தரமும், கல்யாணியும் அந்தக் கிராமப் பள்ளிக்கூடத்தில் ஒரு வருஷம்தான் படிக்கமுடிந்தது அக்குறுகிய காலத்துக்குள்ளேயே அவர்களிடையே அன்பு வளர்ந்து பரிணமித்தது.

ஐந்தாவது வகுப்பு தேறினதும், சுந்தரம் இரண்டுமைல் தூரத்திலிருந்த திருச்சியில் ஒரு ஹைஸ்கூலில் சேர்க்கப்பட்டான் ஆயினும் இருவருடைய சிநேகத்துக்கும் ஒருவித பங்கமும் விளையவில்லை.

கல்யாணியின் படிப்பு ஐந்தாவது வகுப்போடு நிறுத்தப்பட்டது வயது ஆக ஆக அவள் மனதின் உள்ளே சுந்தரத்தினிடம் கரைகாண முடியாத அன்பு இருந்தும், வெட்கம் மேலோங்கி நின்று, சிறு குழந்தையாய் இருந்த காலத்தில் சுந்தரத்தினிடம் அவள் பழகியது போல் இப்பொழுது அவனைப் பழகவிடாமல் தடுததுவிட்டது. அதோடு சிறு வயது முதல் அந்நியோந்யமாக இவர்கள் பழகுவதைப் பார்த்திருந்த அவ்வூர் வாசிகள் வேறு இவாகள் இருவா பெயரையும் இணைத்துப் பரிகாசம் செய்துவந்தனா. ஆகையால் இருவராலும் முன்போல் நெருங்கிப் பழகமுடியவில்லை ஆயினும் ஒருவரை மற்றொருவர் ஒரு நாளில் ஒரு முறையாவது பார்க்காவிட்டால் இருவர் மனமும் சங்கடப்படும். இவர்களுடைய அன்பின் ஆழத்தை அறிந்த இவர்களுடைய பெற்றோர்களும் இவர்களைத் தம்பதிகளாக்கிவிட வேண்டும் என்றே எண்ணியிருந்தனர்.

எஸ் எஸ் எல் ஸி தேறினதும் சுந்தரம் சென்னையில் ஏதாவது ஒரு காலேஜில் சேர்ந்து சென்னையிலேயே இருந்த அவனுடைய அத்தை வீட்டில் இருந்துகொண்டு படிப்பது என்று ஏற்பாடாயிற்று.

சுந்தரம் சென்னைக்குப் போவதையறிந்த கல்யாணிக்குச் சிக்கிரத்தில் அவன் ஒரு பட்டதாரியாகி விடுவான் என்ற சந்தோஷம் இருந்தாலும் கூட, நான்கு வருஷ காலம் அவனைப்பிரிந்திருப்பது எவ்வாறு சாத்தியமாகும் என்ற கவலையே அவளை அதிகமாக விரட்டியது

சுந்தரம் சென்னை சென்று மூன்றரை வருஷங்களுக்கு மேலாகிவிட்டன இதற்குள் அவன் பலதடவைகள் ஆலங்குடிக்கு வந்து போனான். எந்தத்தடவையும் கல்யாணியைச் சந்தித்துப் பேசாமல் போனதில்லை அவன் பரீட்சை நெருங்க கல்யாணியின் மனம் பற்பல விதமான இன்பக் கோட்டையெல்லாம் கட்டிக்கொண்டிருந்தது ஒருநாள்

ஒருநாள் வீட்டில் ஏதோ வேலை அதிகமாக இருந்ததால் அன்று கல்யாணி சற்றுத் தாமதித்தே நீர் மொண்டுவர காவிரிக்குப் புறப்பட்டாள் அநேகமாக எல்லாப்பெண்களும் அந்த நேரத்துக்கு நீர்க்குடங்களுடன் வீடு திரும்பிவிட்டனர்

இருட்டும் சமயம் ஆற்றை நெருங்கிக்கொண்டிருந்தாள் கல்யாணி. படித்துறையில் யாரோ இரண்டு ஸ்திரீகள் பேசிக்கொண்டிருக்கும் சப்தம் கேட்டது நடு நடுவே தன் பெயர் அடிபடுவதுபோல் கல்யாணிக்குத் தோன்றவே, அவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று அறியச்சற்றுத் தூரத்திலேயே நின்றுவிட்டாள் கல்யாணி.

"போனவர் போயிட்டார். அதுக்காக எதை நிறுத்திவிட முடியும்?... உன் பெண் கல்யாணத்துக்கு என்ன ஏற்பாடு பண்ணிண்டு இருக்கே?... இது ஒரு குரல்."

''நான் பண்றது என்ன இருக்கு? எல்லாம் அண்ணாதான் பண்ணணும் எனக்கு அவளைச் சுந்தரத்துக்குக் கொடுத்து விடணுங்கிறது; மன்னிக்கும் அதிலே சம்மதம்தான்; நீலாவும் சுந்தரத்தைக் கல்யாணம் பண்ணிக்க இஷ்டப்படறா ஆனா அந்தப்பிள்ளைதான் கல்யாணியைத்தான் பண்ணிக்குவேன்னு ஒத்தைக் காலாலே நிக்கறதாமே! நீலாவுக்கு வேறு வரன்தான் பார்க்கணும் நீலா சுந்தரத்தைக் கல்யாணம் பண்ணிண்டாத்தான் அவள் சுகப்படலாம் இல்லாது போனா அவள் யாருக்காவது இளையாளாக வாழ்க்கைப்பட்டு ஆயுள் முழுக்க கஷ்டப்பட வேண்டியதுதான் எங்கண்ணா என்ன பெரிய பணக்காரனா, வரதக்ஷிணையை ஆயிரம் ஆயிரமாகக் காட்டிக்கொடுக்கிறத்துக்கு?...கல்யாணி அவனைப் பண்ணிக்கலைன்னு ஏற்பட்டாத்தான், சுந்தரம் நீலாவைப்பத்தி யோசிப்பானும்....நீலாவின் தலையெழுத்து எப்படியோ அப்படித்தானே நடக்கும்...'' இது வேறொரு குரல்.

இருவரும் பேசிக்கொண்டே கரையேறினர். கல்யாணி சற்று ஒதுங்கி நின்றுகொண்டாள். இருவரும் வீடு நோக்கி நடந்தனர். கல்யாணி நீர் மொள்ளபடித்துறைக்குச் சென்றாள்

அவள் கைகள் தாமாக வேலை செய்தன; குடத்தைத் தேய்த்தாள்; தண்ணீர் மொண்டாள். இடுப்பில் தூக்கி அதை வைத்துக்கொண்டாள் ஆனால் சிந்தனை எங்கேயோ இருந்தது.

சற்று முன் பேசிக்கொண்டிருந்தது சுந்தரத்தின் அத்தையும், வேறு ஒரு ஸ்திரீயும் என்பது அவளுக்கு நன்றாக விளங்கிவிட்டது.

'நம்மால் நீலா இளையாளாக வாழ்க்கைப்பட்டு துன்பப்படுவதா? இதற்குப்பரிகாரம் ஏதாவது உண்டா?...இத்தனை வருஷங்கள் மனமாற விரும்பி, ஆசையுடன் காத்திருந்த சுந்தரத்தை நீலாவுக்காக நாம் இழந்துவிடுவதா?...சுந்தரத்தை நாம் மணந்தால் அவள் கதி?...சுந்தரத்தை அவள் மணக்கும்படி விட்டுவிட்டால் நம் கதி?...'' இவ்வாறு சிந்தித்தது கல்யாணியின் மனம். ஆனால் ஒரு முடிவுக்கும் அவளால் வரமுடியவில்லை.

பரிட்சைகள் எல்லாம் முடிந்துவிட்டன. காலேஜ் மூடிவிட்டார்கள். சுந்தரம் ஊருக்கு வந்துவிட்டான். கல்யாணியைச் சந்தித்து எவ்வளவோ பேசவேண்டும் என்று விரும்பியது அவன் மனம்.

அன்று அஸ்தமிக்கும் சமயத்தில் அவன் காவிரிக்கரையை அடைந்து, வழக்கமாகக் கல்யாணி நீர் மொண்டு செல்லவரும் படித்துறையை அடுத்தாற்போல் இருந்த ஒரு மாமரத்தடியில் உட்கார்ந்துகொண்டு ஏதோ ஒரு புத்தகத்தைப்படிக்க ஆரம்பித்தான்

சிறிது நேரத்தில் இடுப்பில் குடத்துடன் வந்தாள் கல்யாணி அவள் நடையில் ஒரு மிடுக்கு இல்லை அவள் முகத்தில் புன்சிரிப்பில்லை. அவளிடம் உற்சாகமில்லை.

இதைப் பார்த்த சுந்தரத்துக்குத் தூக்கி வாரிப்போட்டது வந்தவள் நேராகத் தண்ணீரில் இறங்கி நீர் மொண்டு கொண்டு கரையேறினாள். அவள் கண்கள் ஒரு தரம் சுந்தரம் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தன. ஆனால் அவள் அவனருகில் செல்லவில்லை. அவனிடம் பேச முயலவில்லை மௌனமாகத் தலையைக் குனிந்துகொண்டு ஒற்றையடிப் பாதை வழியாக ஊரை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

சுந்தரத்துக்கு அவள் போக்கு மிகவும் விசித்திரமாகப்பட்டது அவன் உடனே எழுந்து 'பரபர'வென்று அவள் பின்னால் சென்று, ''கல்யாணி!'' என்றான். அவள் அவனை ஒரு தரம் திரும்பிப் பார்த்தாள். ஆனால் ஒன்றும் பேசவில்லை மறுபடியும் தலையைக் குனிந்துகொண்டு தன் வழியே நடக்க ஆரம்பித்தாள்.

ஆச்சரியத்தால் சுந்தரம் மறுபடியும் 'கல்யாணி!'' என்று சொல்லிக்கொண்டே வேகமாக அவளைத் தாண்டிச் சென்று அவள் முன்னால் போய் நின்றான். தலையை நிமிர்ந்து சுந்தரத்தைப் பாரத்தாள் கல்யாணி. பல மாதங்களுக்குப் பிறகு சுந்தரம் நேருக்கு நேராகக் கல்யாணியின் முகத்தைக் கண்டான் ஆனால் அதில் வசீகரம் இருந்ததே தவிர பொலிவு இல்லை. மறுபடியும் முகத்தைத் தாழ்த்திக்கொண்டாள் அவள்.

"வழி விடுங்கள்! நேரமாகிறது! வீட்டுக்கு போகவேண்டும்! யாராவது பார்த்தால் ஏதாவது நினைத்துக் கொள்வார்கள்.''

''நினைத்துக்கொள்ள என்ன இருக்கிறது கல்யாணி?...இன்னும் சில நாட்களில் நானும் நீயும்...''

கல்யாணி மறுபடியும் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''நீங்கள் பூடகமாக ஏதேதோ சொல்லுகிறீர்கள்...எங்கள் மாமா பிள்ளைக்கு என்னைக் கொடுக்க எங்க அப்பா ஏற்பாடு செய்கிறா...அப்படி இருக்க இப்போது இந்த நிலையில் நம் இரண்டு பேரையும் யாராவது பார்த்தால் விபரீதம்தான்...''

சுந்தரத்துக்கு இவ்வார்த்தைகளைக் கேட்டதும் ஆச்சரியம், ஆத்திரம், துக்கம் எல்லாம் ஒன்று சேர்ந்து வந்தன.

''என்ன? உன்னை உன் மாமா பிள்ளைக்குக் கொடுக்கப்போகிறார்களா? உன் சம்மதம் இல்லாமலா?...

''நானும்தான் அதற்கு ஒத்துக்கொண்டேன்...''

இவ்வார்த்தைகள் அரைகுறையாகத்தான் அவள் வாயை விட்டு வெளி வந்தன 'எவ்வளவு அபாண்டமான பொய்யைச் சொல்லுகிறாய்' என்று அவள் மனம் அவனை இடித்துக் காட்டியது.

''கல்யாணி நிஜம்தானா இது? அல்லது விளையாடுகிறாயா?...''

''இதில் விளையாட்டென்ன இருக்கிறது?''

''அப்படியானால் நாம் சிறுவயதில் இருந்து பழகியதற்கும், ஒருவருடன் மற்றொருவர் மனம் விட்டுப் பேசியதற்கும் அர்த்தம்...?''

''சிறு வயதில் எவ்வளவோ எண்ணுகிறோம்; அவ்வளவும் நடந்துவிடுகிறதா? நம் பால்ய சிநேகத்தை நீங்கள் வேறு விதமாக எடுத்துக் கொண்டுவிட்டீர்கள்...''

இதைச் சொல்லும்போதே அவள் தொண்டை அடைத்தது வார்த்தைகள் வெளிவர மறுத்தன.

''கல்யாணி! உன் தீர்மானம் முடிவானதுதானா?'' என்று கேட்டான் சுந்தரம்

அவன் கேள்வியில் ஒரு பதட்டம் காணப்பட்டது.

ஒரு நிமிஷம் கல்யாணி யோசித்தாள் மறுவினாடி அவள் தன் ஆசை, ஆர்வம், எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு, 'ஆம்' என்பதற்கடையாளமாகத் தலையை ஆட்டினாள்.

கல்யாணியை ஒருதரம் ஏறஇறங்க விறைத்துப்பாரத்துவிட்டு 'விர்'ரென்று போய்விட்டான் சுந்தரம் அவன் போவதைப் பார்த்த கல்யாணிக்கு அழுகை அழுகையாக வந்தது சுந்தரத்துடன் இனி தன் வாழ்வு எப்போதுமே இணையப்போவதில்லை என்பதைப்பற்றி நினைத்தபோது அவள் மனம் ஒருகணம் விம்மியது. ஆனால் மறுகணம் தன் மனத்திலிருந்து ஏதோ ஒரு பெரும் பாரத்தைக் கீழே இறக்கிவிட்டது போன்ற உணர்ச்சியுடன் வீடுநோக்கி நடந்தாள் அவள்.

* * * *

நீலாவுக்கும் சுந்தரத்துக்கும் விரைவில் மணமாயிற்று. சுந்தரத்துக்குக் கல்கத்தாவில் ஒரு வேலை கிடைத்தது.

அன்று நீலாவும் சுந்தரமும் கல்கத்தாவுக்குக் கிளம்பினர். ஒற்றை மாட்டுவண்டியின் சலங்கைசப்தம் கேட்டு ஜன்னலண்டை வந்தாள் கல்யாணி. வண்டியினுள் உட்கார்ந்து ஆனந்தமாகப் பேசிக்கொண்டு ஸ்டேஷனுக்குச் சென்றுக்கொண்டிருந்த சுந்தரத்தையும், நீலாவையும் கண்டதும் அவள் கண்களிலிருந்து இருநீர் முத்துக்கள் கீழேசிந்தின. ஆனால் அடுத்தகணமே ஒரு ஏழைப் பெண்ணுக்காக மகத்தானதொரு தியாகம், செய்துவிட்ட பெருமிதத்தால் அவள்மனம் சாந்தியடைந்தது.



ஜனவரி 26-ந்தேதி இந்தியா குடியரசானதும் இப் புதிய சின்னங்கள் உபயோகத்துக்கு வரும் (மேல்) விமானப்படையினர் அணிவது (நடு) கடற்படையினர் அணிவது (கீழ்) ராணுவப்படையினர் அணிவது.



61

யோகாரூடன்

☆

ஒருவனுக்கு மனமே பந்து; மனமே விரோதி ஒன்று மனத்தைக் கொண்டு ஒருவன் தன்னை உயர்த்திக் கொள்ளவேண்டும்; அல்லது தன்னைக் கெடுத்துக்கொண்டு தாழவேண்டும் உயர்வதற்கு மனத்தை வென்று பந்துவாக்கிக் கொள்ளவேண்டும் என்று கண்ணன் முன்னே சொன்னார் அல்லவா?

பந்துவான மனம் ஒருவனுக்கு எவ்வித உதவி செய்கிறது? எவ்வாறு அவனை உயர்த்துகிறது? என்பது அடித்தபடியாகச் சொல்லப்படுகிறது.

சீதம் அழல்இன்பம் துன்பம்
 சிறப்பு இகழ்வின்

மீதமைவு சேர்ந்துமிக
 வென்றமனம்—போதம்

திகழ்ந்தவவன் நெஞ்சில்
 தெளிவுறவே நிற்கு

நிகழ்ந்து உயிர்பரமா நேர்ந்து.

(இ-ள்) சீதம் அழல்—குளிர்ச்சி வெப்பம் இவற்றிலும் இன்பம் துன்பம் சுக துக்கங்களிலும், சிறப்பு இகழ்வின்மீது மான அவமானங்களிலும், அமைவு சேர்ந்து—சமமாய்ப் பாவித்து) அடக்கம் பொருந்தியவனாய் மனம் மிக வென்று—மனத்தை நன்றாக ஜயித்து, போதம் திகழ்ந்த அவன் ஞானம் பிரகாசிக்கின்ற ஒருவனுடைய, நெஞ்சில்—மனத்தில், பரமா உயிர்—சிறந்த ஆத்மாவின் நிஷ்டை தெளிவுறவே நிகழ்ந்து நன்றாக நடந்துகொண்டே, நேர்ந்து நிற்கும்—சாச்வதமாக நிலைத்திருக்கும்.

ஜிதாத்மந: ப்ரசாந்தஸ்ய
பரமாத்மா ஸமாஹித:
 2 3 2
சீதோஷ்ண ஸுக து:கேஷு
 2
ததா மாநவமாநயோ:

(இ-ள்) சீத உஷ்ண ஸுக து:கேஷு— குளிர்ச்சி வெப்பம் இன்பம் துன்பம் இவைகளில் ததா—அவ்வாறே, மாந அவமாநயோ:—மான அவமானங்களிலும், ஜித ஆத்மந:— ஜயித்த மனமுடையவனாய், ப்ரசாந்தஸ்ய அடங்கிச் சமமாய் இருக்கின்றவனுடைய (மனதில்). ஆத்மா பரம் ஸமாஹித:—ஆத்ம நிஷ்டை நிலையாக இருந்துகொண்டிருக்கும்

'மனம் மிகவென்று(ஜிதாத்மன:)' என்ற தொடருக்கு 'ஆழ்ந்த பக்தியால்பகவத் ஸ்வரூபத்தை உணர்ந்து என்று பொருள் கொள்வோரும் உண்டு அமைவு சேர்ந்து (ப்ரசாந்தஸ்ய)' என்பதற்கு 'தன் முயற்சி இன்றி மனதை சீதோஷ்ணம், சுக துக்கம், மானவமானம் ஆகிய இந்திரியத்திற்கு விஷயமாகிற உலகப் பொருள்களினின்று விலக்கித் திருப்பும் நிலை' என்று கொள்ளலாம்.

'உயிர் பரமா தெளிவுறவே நிற்கும் (பரமாத்மா ஸமாஹித:) என்பதற்கு சங்கரரும் ஸ்ரீதரரும்கூறியதின் ஸாராம்சம்:—'இத்தன்மை வாய்ந்தவனது ஹிருதயத்தில் பரமாத்மாவானவர் பிரகாசித்துக்கொண்டேயிருக்கிறார்'.

இத்தகையவனையே யோகத்தின் உச்சத்தை எட்டியவன் என்றும் யோகத்தின் பலன்களைப் பூரணமாய் அடைந்தவன் என்றும் சொல்லலாம். அவனே யோகாரூடன் என்று சொல்லப்படுகிறான் இவ்வத்தியாயம் நான்காவது சுலோகத்தில் யோகாரூடனுடைய தன்மைகளைக் கண்ணன் ஏற்கனவே குறிப்பாகச் சொல்லியிருக்கிறார். அவற்றையே அடுத்து வரும் இரண்டு சுலோகங்களால் மேலும் விளக்குகிறார்.

ஞான விவேகத்து
 நன்குகந்தார் தன்மையனா

யான புலன்வென்று
 அமர்யோகி—தானேட்டில்

கல்கனகத் தொத்தியல்வான்
 காட்சியினால் தக்கானென்
 றெற்கமறும்

சொல்சேரும் உற்று

(இ-ள்) ஞான விவேகத்து—ஞான விக்ஞானங்களைப் பெற்று, நன்கு உகந்தார் நன்கு திருப்தியடைந்தவனாயும் தன்மையனாய்—(விகாரமின்றி.) ஞான வடிவான ஆத்மாவில் நிலைத்தவனாயும், ஆன புலன் வென்று அமர யோகிதான் தேகத்தாலான இந்திரியங்களை ஜயித்து யோகத்தில் பொருந்திய தான் ஓடு கல் கனகத்தில்—மண் கல் பொன் என்பனவற்றில் ஒத்து இயல்வான் சமமான நினைப்புடையவன், காட்சியினால் உற்று—யோகத்தில் சித்திபெற்று ஒற்கம் அறும்—குறைவில்லாத, தக்கான் என் சொல் சேரும் யோகாரூடன் என்ற பெயரைப் பெறுகிறான்.

ஜ்ஞான விஜ்ஞான த்ருப்தாத்மா
 2 3
கூடஸ்தோ விஜிதேந்த்ரிய:
 3
யுக்த இத்யுச்யதே யோகீ
ஸமலோஷ்டாச்ம காஞ்சந:

(இ-ள்) ஞான விக்ஞான த்ருப்த ஆத்மா—ஸ்வரூப ஞானத்தாலும் விசேஷ ஞானத்தாலும் திருப்தியடைந்த மனத்தனாய், கூடஸ்த: (ஞானமே வடிவமான) ஆத்மாவிலிருப்பவனாய், விஜிதேந்த்

ரிய:— இந்த்ரியங்களை ஜயித்தவனாய், ஸமலோஷ்ட அச்ம்காஞ்சந:—மண் கல் பொன் என்பனவற்றில் ஸம பாவனையுடையவனை, யோகீ—யோகியானவன், யுக்தஇதி—யோகாருடன் (தக்கவன்) என்று, உச்யதே—சொல்லப்படுகிறான்.

'பகவத் ஸ்வரூபத்தை யறிவது ஞானம் அது பகவத் விஷயமான சிரவண (கேட்டல்) மனனாதி (தியானம் முதலியவை)களால் உண்டாகிறது. விக்ஞானம் என்பது பகவானின் மகிமைகளை விசேஷமாயறிவது: அல்லது சிரவணாதிகளால் ஏற்படும் ஞானத்தின் மூலமாகக் கிட்டும் பகவத் தரிசனம்' என்று ஞான விக்ஞானங்களுக்கு உரை செய்வோருண்டு விக்ஞானம் என்பது பாடலில் விவேகம் என்று பாடலில் கொள்ளப்பட்டது.

ராகவேந்திரர் 'பகவானை வேதங்களைக்கொண்டு சர்வோத்தமன் என்று அறிவதும், பகவான் மகிமைகளை வேதங்களால் அறிவதும் முறையே ஞானம் விக்ஞானம் எனப்படும் என்கிறார்.

ராமாநுஜர்:—ஞானமென்பது ஆத்ம சொரூப ஞானம் விக்ஞானமாவது எல்லாக் கிரியைகளையும் நடத்துவது பிரகிருதியே அன்றி ஆத்மாவுக்குச் சம்பந்தமில்லை என்று அறிவது

மண் முதலிய சகல வஸ்துக்களையும் அவற்றின் சுபாவப்படி அறிவது என்றும் அவ்வாறு அறியும் ஞானம் ஐந்து என்றும் அவை பேதக்ஞானங்கள் என்றும் த்வைத சித்தாந்தத்தில் சொல்லப்படுகின்றன. அவ்வைந்துவிதபேத ஞானங்களும் மோக்ஷ ஏதுவாகின்றன.

பேதங்களாவன (1) ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் உள்ளபேதம் (வேற்றுமை) (2) ஜீவன்களுக்குள்ளிருக்கும் பரஸ்பரபேதம் (3) ஜீவனுக்கும் ஜடத்துக்கும் (பிரகிருதிக்கும்) உள்ள பேதம் (4) ஜடபரஸ்பரபேதம் (5) ஜட ஈசுவரபேதம்

மண் கல் பொன் இவற்றின் ஸ்வபாவத்தை உள்ளபடி அறிதல்என்று இக் கீதாச் சுலோகத்தில் சொல்லியது ஜடபர ஸ்பரபேதத்தில் சேரும்.

மண்ணை மண்ணாகவும் பொன்னைப் பொன்னாகவும் அவ்விதமே மற்றுமுள்ள ஜடவஸ்துக்களை அவற்றின் சுபாவப்படி யறிதலே சமமான ஞானம்; அவ்வாறின்றி மண்ணைக் கல்லாகவும் கல்லைப் பொன்னாகவும் வேறுபட உணர்வது விபரீதஞானம்.

உயர்ந்தது தாழ்ந்தது இரண்டையும் சமமாய் எண்ண வேண்டும் என்ற நோக்கத்தோடு கண்ணன் இச் சுலோகத்தை வெளியிட்டாரோ அல்லது மேற்கூறிய சித்தாந்தத்திற்கிணங்க வெளியிட்டாரோ அதை அவரவர் சிந்தித்துத்தான் பொருந்துமாறு உணரவேண்டும்

வெட்ப தட்பங்களையும் சுகதுக்கங்களையும் வேற்றுமையின்றிச் சமமாய்ப் பாவிக்க ஞானியான ஜனகர் சில பயிற்சிகளை மேற்கொண்டிருந்தார் என்று புராணக்கதைகளுண்டு. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சவரனையும் (பவுனையும்) ஓட்டையும் (சமமாகப் பாவித்து) ஒன்றாகக் கங்கையில் எறிந்தார்' என்று அவர் சிஷ்யர்கள் இன்றளவும் சொல்லிவருகின்றனர்.

யோகருடனின் வேறு தன்மைகளை மேலும் கூறுகிறார்.

நன்னெஞ்சன் தோழன்
பகைவன் நயப்பறியான்

பன்னு நடுவோன்
பழிவெறுப்போன்-தன்னளவில்

உற்றார் உயர்கருமர்
பாவிகளால் ஒத்தமனம்

பெற்றான் மிகத்தக்கான் பின்

நல்நெஞ்சன்—(தனக்கு) நன்மை விரும்புவோன். தோழன்—மித்திரன், பகைவன்—விரோதி நயப்பு அறியான்—(தன்னிடம் விருப்பு வெறுப்பில்லாத) உதாஸீனன் பன்னு நடுவோன்—சொல்லப்படும் மத்தியஸ்தன்; பழிவெறுப்போன்—பழிக்கத்தக்க துவேஷமுடையவன், தன் அளவில் உற்றார—தனது அளவற்ற பந்துக்கள், உயாகருமர்—சாதுக்கள், பாவிகளால் பாவி முதலிய எல்லாரிடமும்; ஒத்த மனம் பெற்றான்—சமமான மனோநிலையை அடைந்தவன், மிக தக்கான்—சிறந்த யோகாருடன் ஆகிறான்.

3
ஸுஹ்ருந் மித்ரார்யுதாஸீந

4 2 3 3 4
மத்யஸ்த த்வேஷ்ய பந்துஷு

4
ஸாதுஷ்வபி ச பாபேஷு

3 4
ஸமபுத்திர் விசிஷ்யதே

(இ-ள்.) ஸுஹ்ருத்—ஸுஹ்ருத்து, அரி—அனர்த்தம் விரும்புவோர். மித்ர—ஸமவயாதன தோழர் உதாஸீந—உறவு பகை யிரண்டுக்கும் காரணமில்லாமையால் இரண்டும் அற்றவர். மத்யஸ்த ஸுபாவமாகவே இரண்டும் அற்றவர், த்வேஷ்ய—சுபாவமாகவே பகைப்பவர். பந்துஷு—உறவினர் இவர்களிடமும். ஸாதுஷு அபி—ஸாதுக்களிடமும், பாபேஷு ச—பாபிகளிடத்தும் ஸம புத்தி:—ஸம புத்தியுடையவன். விசிஷ்யதே—விசேஷ அதிகாரியாகச் சொல்லப்படுகிறான்.

இவ்விரு சுலோகங்களில் சொல்லப்பட்டவை யோகாருடன் தன்மைகள்.

கலா மண்டபம்

டைரக்ஷன் - II

[டைரக்டர் க. வேம்பு]

நடிகர்களும்-டைரக்டரும்

கதைக்கு தக்க நடிகர்களை, டைரக்டர் கற்பனை செய்து வகுத்துள்ளபடி தோந்தெடுக்கிறார். பின் அவாகளுக்கு தன் மனதில் உருவாக்கப்பட்டிருக்கும் உத்வேகத்தை பாயும்படியாக பேச்சு நடை நொடி, பாவனைகளில் கொண்டு வர, பலமுறை ஒத்திகை செய்து தான் நினைத்தபடி ஆட்டி வைக்கிறார். அவருடைய வேஷம் என்ன? கதையில் அவர் தொழில் எப்படிப்பட்டது? என்ன செய்ய வேண்டும்? என்பதையெல்லாம் சொல்லி அவாகளை நடிக்கச் செய்து,

'ஏக்-தின்-நிஷானி' என்ற படத்தில் திரிலோக் கபூர்.

குறிப்பிட்டபடி நடிப்பு வராவிட்டால் தான் அந்த பாகத்தை செய்து காட்டும் திறமை டைரக்டருக்கு அவசியமாகிறது; இல்லையானல் அவர் நினைத்ததை, திரையில் பார்க்கமுடியாது. இந்தக் கட்டத்தை—பழைய நாட்களில் ஒரு நாடக வாத்தியாருக்கு எவ்வளவு பொறுப்பு உண்டோ—அவ்வளவும் இருப்பதாக ஒப்பிடலாம்,

ஆர்ட் டைரக்டரும்—டைரக்டரும்

தோந்தெடுக்கப்பட்டகதை எந்தக் காலத்தில் நடந்தது என்பதற்கு தகுந்தாற்போல, அந்தக் காலத்திய கலாசாரம், மதாசாரம், இவைகளின் பழக்கத்தில் இருந்த அரங்கம் (Sets). அதை அலங்கரிக்கும் விதம், அவற்றிலிருக்கவேண்டிய படங்கள், பண்டங்கள் இவைகளை ஆர்ட் டைரக்டருக்குமனதில்பதியவைத்து தன் கற்பனைக்கு என்ன வேண்டும் என்பதை அவரிடம் இருந்து பெறுவதற்கு நுண்ணிய ஆராய்ச்சியும்கூட விடாமல், நிர்ணயிக்கும் ஆற்றலும். டைரக்டருக்கு வேண்டியதாகிறது. கதையில் எத்தனை செட்டுகள்?' என்னென்ன பண்டங்கள்?, எங்கெங்கு அமைக்கப் படவேண்டும்?, என்பனவற்றை ஆர்ட் டைரக்டருக்கு விளக்கி, அவரது கலைதிறத்தையும், பிரதிபலிக்கக் கூடிய அரங்கங்களை நிர்மாணம் செய்வதற்கும் டைரக்டர் உதவுகிறார்.

கதா பாத்திரங்களின் உடையலங்காரத்திற்கு, ஆடைகள், அணிகலன்கள் முதலானவைக்கு ஆர்ட் டைரக்

பின்னலைப் பார்க்காதே. பின்னால் பார்!—'நமது யுத்தம்' என்ற படத்தில் கிஷோர் குமாரும் அவர் ஜோடியும்.

யாரை நினைத்தோ பரவசம்!—'நஸ்ராணு' என்ற படத்தில் சசிகலாவும் நிருபராயும்.

'நமது இந்தியா' என்ற சரித்திரப் படத்தில் அர்ஜுனனாக நடிக்கும் ஜெய்ராஜ்.

டர் கொடுத்த குறிப்புகள், தன் கற்பனையில் உருவாகியுள்ளபடி தயாராகி உள்ளனவா? என்றும், அதில் ஏதேனும் மாறுதல் இருந்தால், தன் விருப்பங்களுக்கு ஏற்றபடி மாற்றி அமைத்துத்தரவும், கவனிக்கும் பொறுப்பும் டைரக்டருடையதே. உடையலங்கார நிபுணர் அதன்படி அழகுபடுத்துகிறார்.

நடிகர்களின் வேஷம் என்ன?. எப்படியிருந்தால் பொருத்தமாய் இருக்கும்?, ஒவ்வொருவருடைய குணாதிசயமும், அவர்களது தோற்றத்திலேயே விளங்கும்படி செய்ய மேக்—அப் நிபுணருடன் கலந்து, ஒரு நடிகருக்கு மேக்-அப் ஒரே தினுசுதானா? அல்லது மாறுதல்கள் உண்டா?, அப்படியானால் எத்தனை மாறுதல்கள் என்பன போன்றதை கலந்தாலோசித்து முடிவு செய்கிறார்கள் இதிலும் பெரும்பகுதி பொறுப்பு டைரக்டருடையதுதான்.

சங்கீத டைரக்டரும்—டைரக்டரும்

கதையை சங்கீதம் மூலமும் பெருகிட கதையில் வரும் சம்பவங்களையெல்லாம் எடுத்து, எங்கெந்த இடங்களில் பாட்டுகள் அமைக்க வேண்டும்?, எத்தனை பாட்டுகள்?, எவ்வித உருக்கம்பெற்றதாயிருக்கவேண்டும்?, என்பனவற்றை சங்கீத டைரக்டருக்கு விளக்கிக் கூறி, அவரது மனதில் நிகழ்ச்சிகளை பதிய வைத்து இசை ஒலிக்கவேண்டிய ராக லக்ஷணங்களையும், வரையறுக்கிறார் பின் சம்பவங்களுக்கு வேண்டிய கருத்துகளுக்கிணங்க பாட்டுகள் அமைக்கப்பட்டவுடன், இடைகளில் எவ்வளவு நேரம் பின்னணி கீதம் வேண்டும்?, ஏன் வேண்டும்?, என்பதையும் அவருக்கு தெளிவாக்கி, அதைப் பெற வேண்டிய ஞானமும் டைரக்டருக்கு தேவையாகிறது சங்கீத டைரக்டர் தயாரித்துள்ளது, தன் கற்பனைக்கு பொருத்தமாய் இருக்குமா, என யோசித்து, தன் எண்ணங்களுக்கு குறைவாக இருந்தால், காரணம் என்ன என்பதையும். எப்படி இருந்தால் பொருத்தமாய் இருக்கும் என்பதையும், சொல்லவேண்டிய ஆற்றலும் டைரக்டருக்கு வேண்டும்.

படப்பிடிப்பும்—டைரக்டரும்

படம் எடுக்கப்படுமுன் டைரக்டர் வசன கர்த்தா, ஒளிப்திவாளர், ஒலிபதிவாளர், ஆர்ட்-டைரக்டர், மேக்-அப் நிபுணர், உடை அலங்கார நிபுணர், இவர்கள் எல்லோரும் விவாதித்து ஒரு முடிவு செய்துகொள்ள வேண்டும். பின்பு டைரக்டர் என்ன முறையில் படத்தை ஜனங்களுக்கு காட்ட விரும்புகிறார் என்பதை SCRIPT தயாரிக்க வேண்டும். அதன் பிரதிகளை மேற்சொன்ன நிபுணர்களுக்கு கொடுக்கவேண்டும். இவ்விதம் செய்வதால் அவர்கள் டைரக்டருக்கு என்ன வேண்டும் என்பதை முன் கூட்டியே தெரிந்துகொள்ள ஏதுவாகிறது. இதன் பின்னர்தான் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

டைரக்டர் தனது கற்பனை படத்துக்கு எத்தனை ஷாட்டுகள்?., எங்கெந்த விதமான ஷாட்டுகள்?., எத்தனை லாங் ஷாட்?., எத்தனை மிட் ஷாட்?., எத்தனை குளோஸ்-அப்?, என்பதை எல்லாம் முன் கூட்டியே நிர்ணயித்து வைத்துக்கொண்டு, ஒவ்வொரு நாளும், தான் எடுக்கப் போகும் காட்சிகளை, பள்ளிக்கூட வாத்தியார் படித்துக்கொண்டு போவதுபோல் தயார் செய்து கொண்டு, தான் அந்த மயமாகி, அவர் எதிர்பார்க்கும் அளவு நடிகர்கள் நடிக்கிறார்களா என்பதையும் கவனிக்கவேண்டும்.

நடிகர்கள் தான் குறிப்பிட்டபடி செய்யவில்லை என்றால், திரும்பவும் எடுக்கவும், அவர்களை உற்சாகப் படுத்தவேண்டும். காட்சிகளை எடுக்கும்போது சில தவிர்க்கமுடியாத இடைஞ்சல்கள் உண்டாகும். உதாரணமாய் ஒரு குறிப்பிட்ட நடிகர் குறிப்பிட்ட இடத்தில் வந்து நிற்காவிட்டால், ஒளிப்பதிவாளருக்கு கஷ்டம். குறிப்பிட்ட பக்கம் பார்த்து பேசாவிட்டால் ஒலிப்பதிவாளருக்கு கஷ்டம் இந்தமாதிரி சங்கடங்களும். இன்னும் பல சங்கடங்களும் வரும். இவைகளைத் தடுக்க உடன் யுக்தி தெரியவேண்டும் குறிப்பாய் டைரக்டருக்கு எல்லா வேலையும் தெரிந்து இருக்கவேண்டும். தெரிந்து இருந்தால்தான் சௌரியம். உதாரணமாய் கேமிரா எப்படி வேலை செய்கிறது என்பதை கேமிராமேன் தெரிந்து கொள்ளவேண்டியதில்லா விட்டாலும், டைரக்டருக்குத் தெரியவேண்டும்.

படம் ஷூட்டிங் ஆரம்பிப்பதற்கு முன் எத்தனை வெளியில் எடுக்க வேண்டிய காட்சிகள் இருக்கின்றன என்றும், எந்த இடங்களுக்குப்போய் எடுத்தால் கதையில் வரும் காட்சிகளுக்கு சோபை உண்டுபண்ணும் என யோசித்து, கேமிரா மேனுடன் அந்த இடங்களுக்கு முன்கூட்டி சென்று பார்த்து, எப்பொழுது அங்கு படம் எடுக்க தகுதியாய் இருக்கும் என்று தெரிந்து, அதற்கு தகுந்தால்போல், தன் அலுவல் திட்டத்தை சரிசெய்துகொள்ளவும் வேண்டும்.

படம் பிடிக்கும் காலையில் நடிகர்கள் சரியாய் நடிக்கின்றார்களா? ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு நிபுணர்கள் ஓ. கே சொல்லும்வரை, டைரக்டருக்கு தன் கூண்டில் உயிர் இருக்கும் எனச் சொல்லமுடியாது; ஏனென்றால் தன் நம்பிக்கை இழந்தல்ல. மறுபடியும் அந்த ஷாட்டை எடுக்கவேண்டிவந்தால், தன் திருப்திக்கு தகுதியாக அமையுமா என்பதுடன், நடிகர்கள் குறித்தமாதிரி மறுபடியும் செய்ய முடியுமா, என்பதுதான். ஏராளமாக ரீடேக் வந்தால், பண நஷ்டமும் வரும், இதன் மூலம் திட்டத்தை தாண்டிய சிலவும் வந்துவிடுமே என்னும் கவலைதான். ஆனால் உண்மையில் மனப் பூர்வமாய் எந்த டைரக்டரும் நன்றாக இல்லாத ஒன்றை, நன்றாய் இருப்பதாய் சொல்லமுடியாது; மறுநாள் எடுத்ததை போட்டுப் பார்த்தால் குட்டு வெளியாகிவிடும்.

ஒலிப்பதிவும்—டைரக்டரும்

சப்தத்தினாலேயும் உணர்ச்சிகளை உண்டுபண்ண முடியும். இதனால் டைரக்டர் முன் கூட்டி தன் கற்பனைக்குட்பட்டவைகளை ஒலிப்பதிவாளரிடமும் சொல்லி, கதையில் வரும் சம்பவங்களையும், எடுத்துச் சொல்லி, எங்கெந்த காட்சியில் என்ன விதமான உணர்ச்சிகளை உண்டுபண்ண வேண்டும்?" இதை எப்படி உண்டுபண்ணலாம் என்றும், அதற்கு அவா ஏதாவது வசதிகள் வேண்டுமென்றால், அதையும் செய்து கொடுக்கவேண்டும். உதாரணமாய் பதினாயிரக்கணக்கான வீரர்கள் சண்டை செய்கிறார்கள் என்றால் அதற்கு எப்படி சப்தம் உண்டு பண்ணுவது?" என்றும், ஏகப்பட்ட குதிரைகள் ஓடினால் எப்படி அதற்கு சப்தம் கொடுப்பது? தனிப்பட்டவர் கத்தி சண்டை செய்கின்றனர்; இவை போன்ற பல அம்சங்களில் ஒலிப்பதிவாளர் தன் யோசனைகளை சொல்வார் எப்படிச் செய்தால் தன் கல்பனைக்கு சிறப்பாகும் என்பதைத் தீர்மானிக்கவேண்டிய பொறுப்பும் டைரக்டரைச் சேருகிறது; எப்படிச் செய்தால் சௌகர்யம் என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

எடிட்டிங்கும்—டைரக்டரும்

படம் எடுக்கப் பாடுபடுவதைப் போலவே படத்தை எடிட் செய்யும் போதும் டைரக்டருக்கு கஷ்டம் இருக்கத்தான் செய்கிறது ஏனென்றால் இந்த கட்டத்தில்தான் பலருடைய உழைப்பும். கற்பனையும் வீன்போகாமல் பாதுகாக்கப்பட வேண்டும். உதாரணமாக, ஒரே காட்சி இரண்டு மூன்று தினுசாய் எடுத்திருப்பதாய் வைத்துக்கொள்வோம். ஒரு பெரிய லாங் ஷாட், அதையே மிட் ஷாட், அதையே குளோஸ்—அப், மூன்றினும் எடுத்திருக்கலாம், இதில் லாங் ஷாட்டை அதிகம் உபயோகித்தால் ஆர்ட் டைரக்டருக்கு நலம்; மிட் ஷாட்டை உபயோகித்தால் டைரக்டருக்கு

நலம்; குளோஸ்—அப்பை உபயோகித்தால் நடிகருக்கு நலம் ஆகையால் எல்லோருடைய நன்மைக்கும், படத்தின் நன்மைக்கும் உத்தேசித்து மூன்றுவித ஷாட்டுகளையும் கலந்து உபயோகித்தால் டைரக்டர், நடிகர்; ஆர்ட் டைரக்டா, பட்ப் பிடிப்பாளர் யாவருக்கும் நலமாகும்.

ஒரு குறிப்பிட்ட இடம்வரை லாங் ஷாட்டை உபயோகிப்பதால் அரங்க நிர்மாணத்தையும், மிட் ஷாட்டை உபயோகிப்பதால், நடிகர்கள் உணர்ச்சியுடன் நடிக்கும் நகர்வுகளையும், குளோஸ்—அப் உபயோகிப்பதால் கதாபாத்திரங்களின் பாவம், காமராமேனின் சாமாத்தியம், டைரக்டரின் கற்பனை உத்வேகம் யாவற்றையும் காணலாம். ஜனங்கள் மனதில் உணர்ச்சிகளை தட்டிவிடுவதுடன், சம்பந்தபட்ட தொழிலாளர் யாவர்க்கும் நல்ல பெயரும் கிடைக்கும் எடிடிங் சரியாக இல்லாவிட்டால், நல்ல படத்தையும் குட்டிச்சுவராக்கிவிடலாம்; ஆகவே ஒழுங்காக வேலையை பரிமளிக்கச் செய்வது டைரக்டருக்கு பெரும் பொறுப்பாகும். ஆகையால் தான் எடுத்தபடம் டைரக்டர் தானே எடிட் செய்யவேண்டும் அல்லது எடிட்செய்யும்போது எடிட்டருடன் கூட இருந்து, தான் எடுத்திருக்கும் ஷாட்டுகளின் விபரத்தைசொல்லி. பாவங்களையும், பிரதி பாவங்களையும்; நன்கு உபயோகப்படுத்த வேண்டும். உதாரணமாய் ஒரு நடிகர் பேசிக்கொண்டே போவார்., ஆனால் அவர் முகம் தெரியாமல் மற்ற நடிகர்களின் பாவத்தின்மூலம் அதை பிரதிபலிக்கும்படி வெட்டுவதும் ஒட்டுவதும், டைரக்டர் அருகில் இருந்து செய்தால். அவரது நினைப்பின்படி படத்திற்கு வேகம்கொடுக்க முடியும்.

எடிட் செய்து பார்க்கும்போது ஒரு குறிப்பிட்ட காட்சியையோ, ஷாட்டையோ போடாமல் செய்தால் நலமாகும் என்று எடிடர் சொன்னால். அது ஏன் போடவேண்டும் என்பதை அவருக்கு எடுத்துச் சொல்லி அணியாக்கவும், அல்லது அவர் சொல்வதுபோல் செய்வதால் கதைக்கு சோபயாகும் எனக் கண்டால் தாராளமனப்பான்மையுடன் சம்மதிக்கவும் வேண்டும்.

எங்கெந்த கட்டங்களில் காட்சி தோற்றம் (Fade in) எங்கெந்த கட்டத்தில் காட்சி மறைவு (Fade out), எங்கெந்த கட்டத்தில் காட்சியோடு காட்சி கலப்பு (Dissolve). எந்த கட்டத்தில் காட்சி துடைப்பு (ipe), என்பனவற்றை விவரம்சொல்லி, அவைகளை தயார்செய்ய ரசாயன இலாகாவுக்கு அனுப்பவேண்டும். தயாராகி வந்ததும் அந்தந்த இடங்களில் பொருத்தி, கதை ஆரம்பத்துக்கு முன்னால் நிர்மாணத்தில் பங்கெடுத்துக் கொண்ட நிபுணர்களின் ஜாபிதாவையும் படமாக்கிச் சேர்த்து, படப்பிரதி (Copy) எடுக்கும்படி செய்யவேண்டும்.



உலகைக்கு முன் ஒரு ஒய்யாரப் பாவை—'நமது இந்தியா'வில் நளினி ஜஸ்வந்த் நன்கு நடித்திருக்கிறாம்.

பின்னணிகீதமும்—டைரக்டரும்

எடிடிங் பூர்த்தியானதும் எடுக்கப்படும் முதல் பிரதியை, சங்கீத டைரக்டர், ஒலி, ஒளி இரசாயன இலாகா நிபுணர்களுக்கு போட்டுக் காட்டி, ஏதாவது சீர்திருத்த வேண்டியிருந்தால் திருத்தம் செய்து கொண்டு விடுகிறார். பின்பு எங்கெந்த இடங்களுக்கு பின்னணிகீதம் வேண்டும்? எப்படியிருந்தால்பொருத்தமாய் இருக்கும்? என, சங்கீத டைரக்டருடன் ஆலோசித்து. அவர் தயாரிக்கும் பின்னணிகீதம் சப்த ஜாலங்கள் ஆகியவற்றை தன் கருத்துக்கு உகந்ததாய் தேர்ந்தெடுத்து, தன் கற்பனை சித்திரத்தின் சப்தப்பூர்வமான வர்ணங்களைப்பூச வேண்டியிருக்கிறது. இந்த கட்டத்தில் ஒலிபதிவாளர் டைரக்டருக்கு வலதுகை போன்று விளங்குகிறார்.

சென்ஸாரும்—டைரக்டரும்

இத்தனை கஷ்டங்களையும் பட்டு தயாரித்து, படத்தை சென்ஸார் போர்டார்களுக்கு போட்டுக் காட்டுகிறார். சென்ஸார் போர்டார் ஏதாவது குற்றம் குறையெனச் சொல்லி சில கட்டங்களை வெட்டிவிடச் சொன்னால். டைரக்டரின் கற்பனையில் கை வைக்கப்படுகிறது. இவ்வளவு வரை கூடச் சேர்ந்து தொழில் செய்த நிபுணர்களோடு விவாதிக்கவாவது முடிகிறது; ஆனால் சென்ஸார் மெம்பர்களோடு வாதித்தும் பயனில்லை. வாதத்தை ஒப்புக்கொள்வதும் இல்லை கூசாமல் வெட்டிவிட்டு, கற்பனை கோவிலைக் கட்டி, அதைத் தன் கையாலேயே கட்டபாறையில் தட்டியது போலவும் ஆகிறது.

துணைவர்களும்—டைரக்டரும்

டைரக்டருடன் இவ்வளவுக்கும் பிரியாத மனைவியைப்போல் துணையாய் நின்று சுக துக்கங்களில் பாடுபடுவது உதவி டைரக்டரும், புரொடக்ஷன் மானேஜரும் தான். டைரக்டர் தன் வேலையை சரியாய் வேறு இடைஞ்சல் இல்லாமல்செய்ய குறித்தபடி செட்டில் வரும் நடிகர்கள், காட்சி ஜோடனைக்குரிய உபபண்டங்கள், இவைகளை டைரக்டரின் மேற்பார்வையில் நிர்ணயிக்கப்பட்டு, அதன் விபரங்களை புரொடக்ஷன் நிர்வாகிகளுக்கு அறிவித்து உதவி டைரக்டர் கூடவே துணை புரிகிறார். இவா அறிவித்த பண்டங்கள். ஆட்கள் முதலானவற்றை அவர்கள் விருமபிய விதத்தில், குறிப்பிட்ட காலத்தில் சேகரித்து கொடுத்து புரொடக்ஷன் மானேஜர் துணை புரிகிறார்.

நமது பம்பாய் கடிதம்

நமது நிருபர் ஸ்டுடியோக்களை சுற்றி வருகிறார்

பம்பாயிலுள்ள படமுதலாளிகள் வெகு நாட்களாக, என்னை தங்கள் ஸ்டுடியோக்களுக்கு வரும்படி வற்புறுத்திக்கொண்டிருந்தனர். அவர்கள் விருப்பத்தை பூர்த்தி செய்யலாமே என்று சென்றவாரம் முழுவதும், ஒவ்வொரு ஸ்டுடியோவாக போயிருந்தேன்.

முதலில் பம்பாயிலிருந்து இருபது மைல்களுக்கு அப்பால் உள்ள மலாடு என்னுமிடத்திலுள்ள பம்பாய் டாக்கீஸ்காரர்களின் ஸ்டுடியோவுக்கு ஒருநாள் சென்றிருந்தேன். பம்பாய் டாக்கீஸின் "மஹால்" என்னும் படம் இப்பொழுதுதான் அங்குபூர்த்தியாகியிருந்தது அஷோக்குமார், மதுபாலா, விஜய லக்ஷ்மி இவர்கள் இப்படத்தில் முக்கிய பாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள். பம்பாய் டாக்கீஸ்காரர்கள் தற்சமயம் இரண்டு படங்களை தயாரித்து வருகிறார்கள் ஒன்றின் பெயர் "ரஜனி" மற்றொன்று "நிஷாசார்" "ரஜனி"யில் ஸுமித்திர தேவியும் அஷோக்குமாரும் காதலர்களாக நடிக்கிறார்கள் ஷூட்டிங்கு செய்யும் இடத்திற்கு நான் சென்றதும், அஷோக்குமார் என்னை அன்புடன் வரவேற்று, கைகுலுக்கி, இப்படத்தை டைரக்டு செய்யும் நிட்டின் போஸுக்கு அறிமுகம் செய்வித்தார் "நிஷாசார்" என்னும் படத்தில், நளினிஜஸ்வந்தும், ஒரு புதிய நடிகரான ஸாஜன் என்பவரும் முக்கிய பாத்திரங்களில் நடிக்கிறார்கள்.

இந்த ஸ்டுடியோவில், இப்பொழுது, மற்றொரு பெரிய படமொன்று தயாராகி வருகிறது அதாவது மோட்வானேயின் "நமது போராட்டம்" (Our Struggle) என்பதுதான் இந்தியாவின் சுதந்திரத்திற்காக, இந்த தேசத் தொண்டர்கள் நடத்திய போராட்டத்தை இப்படத்தில் தெளிவாக பார்க்கலாம். இந்தியாவின் மகோன்னத நிலைமையை இப்படத்தில் வெகு அழகாக சித்தரித்திருக்கிறார்கள். இதில் நடிப்பவர்கள் எல்லோரும் புதிய நடிக நடிகைகள். அஷோக்குமாரின் தம்பி, கிஷோர் குமார் என்பவர் இதில் ஒரு முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார். சிவராஜ், மன்ஜு, ஷேகர், பரசுராம், புஷ்பா, ஷார்தா முதலியவர்கள் மற்ற பாத்திரங்களில் நடிக்கிறார்கள். பனி மஜும்தார் என்பவர் டைரக்ட்டு செய்து வருகிறார்.

பிறகு, பிலிமிஸ்தான் ஸ்டுடியோவுக்குப் போனேன் அங்கு, ஒரு கொட்டைகையில், இக்கம்பெனிக்காரர்களின் "ஸமாதி" என்னும் படத்தை, ரமேஷ் ஸாய்கால் என்பவர் டைரக்ட் செய்துகொண்டிருந்தார் பர்மாவில், ஸுபாஷ்சந்திரபோஸின் ஆதிக்கத்தின் கீழ் நடந்த ஐ என் ஏ. ஸோல்ஜர்களின் செயல்களை, ஒரு ஸ்வாரஸ்யமான கதையின் மூலம், இப்படத்தில் காண்பிக்கிறார்கள் இதில், நளினி ஜஸ்வந்து, அஷோக்குமார், ஷியாம், குல்டீப் முதலியவர்கள் நடிக்கிறார்கள். நான் சென்றபோது நளினி ஜஸ்வந்தைக் கண்டேன். இப்படத்தில்தான் கதாநாயகியாக நடிப்பது தனக்கு மிகவும் சந்தோஷத்தை கொடுப்பதாக என்னிடம் சொன்னாள். இதே ஸ்டுடியோவில், மற்றொரு இடத்தில் இக்கம்பெனியின் "நிர்தோஷ்" என்னும் படம் தயாராகி வருகிறது அங்கு சென்றதும், ஒரு பெரிய ரயில் வண்டி தென்பட்டது. ஸ்டுடியோவிற்குள், ரயில் வண்டி எப்படி வந்தது என்று ஆச்சரியப்பட்டு, அதற்குக் கிட்டேபோய் அந்த ரயில் வண்டியை தொட்டுப் பார்த்தேன் ரயில் வண்டி உடனே ஆட தொடங்கிற்று பிறகுதான் எனக்கு, அது ஒரு காகிதத்தால் செய்த வண்டி என்ற உண்மை விளங்கிற்று. இவ்விடத்தில், எனது நண்பர் ஷியாமை சந்தித்தேன். அவரும் ரெஹானு என்பவளும் இதில் காதலர்களாக நடிக்கிறார்கள் நஜாம் நக்வி என்பவர் டைரக்ட்டு செய்து வருகிறார்.

இந்த ஸ்டுடியோவிலிருந்து, அந்தேரி என்னுமிடத்திலிருக்கும் எம் அண்டு டி ஸ்டுடியோவுக்குச் சென்றேன் இங்கு, இக்கம்பெனியாரின் "நிஷானு" "நிராலா" என்னும் இரண்டு படங்கள் தயாராகி வருகின்றன "நிஷானு"வில் அஷோக்குமார் மதுபாலா, கிதாபலி, யாகுப், நவாம், துர்காகோட்டே முதலியவர் நடிக்கிறார்கள். "நிராலா"வில், தேவ் ஆனந்து, மதுபாலா, மசஹர்கான், துர்காகோட்டே, இன்னும் அநேக ஆண்களும் பெண்களும் நடிக்கிறார்கள்.

நான் சென்றபொழுதுஇந்த ஸ்டுடியோவில் பால் ஜில்ஸ் என்பவர் "நம் இந்தியா" என்னும் படத்தை டைரக்ட்டு செய்துகொண்டிருந்தார். அவர் ஷூட்டிங்கு செய்யும் இடத்திற்கு நான் சென்றதும் அவர் என்னை வரவேற்று அங்கு இருக்கும் பாத்திரங்களுக்கு என்னை அறிமுகம் செய்விப்பதாக சொன்னார். உடனே அங்கிருப்பவர்கள் எல்லேரும் கல்லென்று சிறித்தார்கள். ஏனென்றால், அங்கிருந்தவர்கள் எல்லோரும் எனக்கு ஏற்கனவே அறிமுகமானவர்களே அவர்கள் யாரென்றால் பிரிதிவிராஜ், ஸுரேந்திரா, தேவ் ஆனந்து, பிரேம்நாத், நளினி ஜயவந்து, யஷோதர, கட்ஜு, வாஸ்த்தி, கே. என் ஸிங்கு, சம்புமித்திரா, டிசபதி மித்ரா, துர்கா கோட்டே எல்லோரும் இப்படத்தில் நடிக்கிறார்கள்.

மினுமஸானி எழுதியிருக்கும் புத்தகத்தைத் தழுவி எடுக்கப்படும் இப்படம், இந்தியாவின் புராண வைபவங்களைப்பற்றியும், சரித்திரத்தைப்பற்றியும், தற்கால வாழ்க்கையைப்பற்றியும் தத்ரூபமாக எடுத்துக் காண்பிக்கிறது ஒரே சமயத்தில், இப்படத்தை ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் எடுக்கிறார்கள்.

அந்தேரியிலிருந்து, பரேல் என்னும் இடத்திற்கு வந்தேன். இங்கே தான் கர்தார் ஸ்டுடியோ இருக்கிறது. ஸ்டுடியோவிற்குள் புகுந்ததும் அப்படத்தின் முதலாளியான், பெயர் பெற்ற டைரக்டர், ஏ ஆர் கர்தார் என்பவரைக் கண்டேன். நான் சென்றபொழுது, அவர் ஒரு வேலையும் செய்யாமல் சாதாரணமாக உட்கார்ந்திருந்தார் "என்ன, டைரக்டர், ஏன் சும்மா உட்கார்ந்திருக்கிறீர், படம் ஒன்றும் தயாரிக்கவில்லையா,' என்று கேட்டேன். அதற்கு அவர் 'நான் என்ன செய்வேன். சுரையாவையும், ராஜ கபூரையும் வைத்துக்கொண்டு, "தாஸ்தான்" என்னும் படத்தை ஆரம்பித்தேன் ஆனால், கதர் நாயகியாக நடிக்கும் சுரையா உடம்பு சரியில்லாமல் படுத்திருப்பதால், என்னுடைய புரோகிராமெல்லாம் கெட்டுப்போய் விட்டது," என்று பதில் சொன்னார். சுரையாவுக்கு சீக்கிரத்தில் உடம்பு சரியாகவேண்டுமென்று ஒருபிரார்த்தனையை, அவர் முன்னால் செலுத்தி விட்டு, அங்கிருந்து வெளியே வந்தேன்.

இந்த ஸ்டுடியோவிற்கு அருகாமையில் இருக்கும் ராஜ்கமல் ஸ்டுடியோவிற்கு என்னை அறியாமலேயே என் கால்கள் இழுத்துச் சென்றன அங்கு பிரபல டைரெக்டர ஷாந்தாராம், "தஹேஜ்" என்னும் படத்தை தயார் செய்து கொண்டிருந்தார். இப்படத்தில் நடிக்கும் அவருடைய மனைவி, ஜயஸ்ரீயையும், கரன் திவான் என்பவரையும் கண்டேன். பிரதிவிராஜும் இதில் நடிக்கிறார் வரதக்ஷிணை என்னும் கெட்ட வழக்கத்தைப்பற்றியும், அதனால் உண்டாகும் கேடுகளைப்பற்றியும், இப்படத்தில் சித்தரித்திருக்கிறார்கள் ஷாந்தாராம்எப்பொழுதும்பெரியபிரச்னைகளைப்பற்றியே மிகவும் திறமையாக படமாக தயாரிக்கிறார். பட முதலாளிகள் எல்லோரும், அவரை பின்பற்றினால் அவர்களுடைய படத்தின் மேன்மை அதிகரிக்கும்.

—தி. மா. ராமச்சந்திரன்.

பொங்கல் புது வண்டி

★ **பத்மா நாராயணன்** ★

"சாமீ, எங்கே போகணுங்க?"

"தெற்கு மாசி வீதிக்கு, என்னப்பா கேட்கிறாய்?"

"ஒண்ணரை ரூபாய் கொடுங்க, சாமீ!"

"அடேயப்பா, இந்தோ இருக்கிற தெருவுக்கா ஒண்ணரை ரூபாய்?"

"என்னங்க சாமீ, இந்தோவா இருக்குது? அதுவும் ஒருமைல் தூரம் இல்லேங்களா? இந்த நடுராவிலே மார்கழிமாசத்துக் குளிரிலே, குதிரை இழுக்க வேண்டாமா, சாமீ, சரி, ஒண்ணேகால் ரூபாய்தான், ஏறுங்க."

"அதெல்லாம் முடியாது ஒரு ரூபாய்தான் கொடுப்பேன். சம்மதமா? இல்லாவிட்டால் நடந்து விடறேன். இதோ"

"சரி சரி, ஏறுங்க சாமீ."

சினிமாவில் இரண்டாவது ஆட்டம் பார்த்துவிட்டுவந்த ஒருபெரியவரைத் தன் வண்டியில் ஏற்றிக்கொண்டு, குதிரையை வேகமாகத் தட்டிவிட்டான் குதிரை வண்டி கோவிந்தன் தெற்கு மாசி வீதியை அடைந்ததும், அவர் கொடுத்த ஒரு ரூபாயைப் பெற்றுக்கொண்டு, நேராக ஜங்ஷனுக்கு வண்டியைத் திருப்பினான். அப்போதுதான் தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ஜங்ஷனில் வந்து நின்ற சமயம். 'கொல்'லென்று பிரயாணிகள் பிளாட்பாரத்தை விட்டு வெளியே வந்தார்கள். புதுமணம் செய்து கொண்ட இளந் தம்பதிகள் அவன் வண்டியில் ஏறவே மேலும் ஒரு ரூபாய் சம்பாதித்தான் கோவிந்தன். காலை எட்டு மணிக்குள் இன்னும் இரண்டு 'சவாரிகள் கிடைத்தன. ஆக அன்றிரவு வருமானம் ரூபாய் மூன்றரை.

விடிந்து சரியாக எட்டு மணிக்கு வண்டியைத் தன் முதலாளியின் லாயத்தில் அவிழ்த்துவிட்டு, அவரிடம் போய் நின்றான் கோவிந்தன்.

"நாலு நாள் வாடகை பாக்கி கிடக்கிறது தவறிய நாட்களுக்குத் தினசரி வட்டி அணா ஒன்றும் சேர்த்துக் கொண்டால் சுமார் ஐந்துரூபாய் ஆகிறது. இன்றைக்கு அது இது என்று 'சால்ஜாப்பு' சொல்லாமல் பூராவும் கொடுத்துவிட்டுத்தான் போகணும், தெரிந்ததா?" என்று கண்டிப்பாகக் கூறினார் வண்டியின் சொந்தக்காரரான அந்த முதலாளி 'இண்ணைக்கி ஒரு ராவு பொறுங்க ரெண்டு மூணு நாளாகவே 'சவாரி' ரொம்பக் கம்மிங்க இண்ணைக்கி எப்படியும் பார்த்து நாளைக்காலையில் அம்புட்டும் கொடுத்துடறேன்.' என்று கெஞ்சினான் கோவிந்தன்.

'நிதம் நிதம் இதே பஞ்சப் பாட்டுத்தான் என்னிடம் எண்பது வண்டிகள் இருக்கிறதே மற்ற வண்டிக்காரன்களெல்லாம் அண்ணண்ணைக்கி வாடகையை ஒழுங்காகக் குடுக்கலையா? உனக்கு ஒருத்தனுக்குத்தான் 'சவாரி' கம்மியோ, அதெல்லாம் முடியாது. கையில் என்ன வச்சிருக்கே. அதைக் குடுத்துட்டுப் போயிடு நாளை பாக்கியைத் தரலாம்.' என்று அவன் மடியைத் தொட்டார் முதலாளி.

'இந்தா மடியில் கிடியில் கை போடாதே வேணுமின்னுக் கேளு இந்தா மூணரை ரூபாய் பாக்கியை நாளை வாங்கிக்க நான் கஞ்சியில்லாம பட்டினியாவது கிடக்கிறேன். எப்படியும் தைவரைக்கும்தானே. பொங்கலிருந்து எனக்கு நானே முதலாளி அப்புறம் உன்முகத்திலேயே முழிக்கிறதில்லே.' என்று ஆத்திரத்தில் மரியாதை விகுதிகளையும் மறந்து பொழிந்து தள்ளிவிட்டான் கோவிந்தன். மடியிலிருந்த பணத்தை அவர்முன் வீசி எறிந்துவிட்டுக் குதிரையைப் பிடித்துக்கொண்டு வீட்டை நோக்கி விரைந்தான் அவன். செல்கையில். முதலாளி 'சீ நாயே, நித்யச் சோற்றுக்குத் தாளம் போடும் உனக்கு வாய்வேறு? பொங்கலுக்குச் சொந்த வண்டி வாங்கிடப் போறாரே. ஐயா. பார்க்கலாமே" என்று ஏளனம் செய்தான்

வீட்டிற்குச் சென்றதும், குதிரையைத் தட்டிவிட்டான்; உடலையெல்லாம் பிடித்துவிட்டான்; காணமும் புல்லும் போட்டுத் தண்ணீரைக் காட்டிவிட்டு, "பஞ்சகல்யாணி, போய் மணலில் புரளுபோ பொங்கலன்றுதான் நம்ப ரெண்டு பேருக்கும் விடிவு காலம்," என்று ஆசையுடன் தட்டி, எதிரேயுள்ள மணற்பொட்டலுக்கு அதை விரட்டிவிட்டான் தானும் குளித்துவிட்டு மனைவி செல்லத்தைக் கூப்பிட்டுப் பழையது சாப்பிட்டான் வெற்றிலையை வாயில் ஒதுக்கியவாறே. "ஏ செல்லம், அந்த உண்டியலைக் கொண்டா," என்று சொன்னான். "அது இப்போ எதுக்கு?" என்றாள் செல்லம் "நீ கொண்டுவந்து உடைச்சு எவ்வளவு ரூபாய் சேர்ந்திருக்குது பார்," என்று கோவிந்தன் கேட்கவே, "ஐயோ இப்பவே உடைப்பாங்களா பொங்கலுக்கு நாலு நாள் முந்தி உடைச்சாப் போகுது" என்றாள் செல்லம் "அந்த முதலாளிப் பய முகத்திலே கண்டிப்பா பொங்கலிலிருந்து முழிக்கப் போறதில்லே மாரியாத்தா அறிய சத்தியம்" என்று ஆத்திரத்துடன் சொன்னான். மேலும், 'வண்டி இருநூறு ரூபா ஆகுது. எண்ணிப் பார்த்துப் பத்தல்லேன்னு சரிக்கட்டணும் பாரு கொண்டா உண்டியலை" என்று உத்தரவிட்டான். உண்டியலில் 148 ரூபாய்கள் சேர்ந்திருந்தன அந்த ஏழை தம்பதிகளுக்கு அது ஒரு லட்சத்துக்குச் சமானமாகப் பட்டது இருவரும் அதைப் பத்திரமாக மறுபடியும் உண்டியலில் வைத்துப் பூட்டி விட்டார்கள்.

2

குதிரை வண்டி கோவிந்தனுக்கு அது பரம்பரைத் தொழிலல்ல. அவனுடைய தகப்பனைப் பெற்ற பாட்டனார். கிராமத்தில் தனக்கிருந்த இரண்டு காணி நிலத்தை உழுது விவசாயியாக ஜீவனம் செய்து வந்தார் அவர் காலமானதும் கோவிந்தனின் தகப்பனார் அதே விவசாயத்தை மேற்கொண்டார். பிறகு சில வருஷங்கள் மழையின்மை காரணமாக அந்தப் பிராந்தியத்தில் பஞ்சம் ஏற்பட்டு, அதன் விளைவாக

பலவிதக் கடன் தொல்லைகளுக்கு உட்பட்ட அவா தன் நிலங்களை விற்கவேண்டி வந்துவிட்டது பிறப்பை நாடி சமீபத்திலிருந்த மதுரைக்கு மனைவியையும், தன் ஒரே மகன் கோவிந்தனையும் அழைத்துக் கொண்டு போட்டிருந்த மேல் துண்டுடன் புறப்பட்டு வந்துவிட்டார்.

சிலநாள் வேலைக்காக அலைந்து கடைசியில் ஒரு பெரிய மனிதர் வீட்டில் எடுபிடி வேலை செய்ய அமர்ந்தார் அதனின்றும் குடும்பத்தை எப்படியோ உடலில் உயிர் மட்டும் ஒட்டிக்கொண்டிருக்கும்படி காப்பாற்றி வந்தார்

கோவிந்தன் தர்மப்பள்ளிக்கூடத்தில் இரண்டு வகுப்புகள் வாசித்துவிட்டு நின்றுவிட்டான். அவனுக்குப் படிப்பு ஓடவில்லை ஆகையால் அவனையும் ஏதாவது சம்பாத்தியத்தில் ஈடுபடும்படி தூண்டினார் அவன் தந்தை இருவரும் சேர்ந்து முயற்சித்துப் பார்த்தும் அவனுக்கு எங்கும் வேலை கிடைக்கவில்லை

மில்லில் கொண்டுபோய்ச் சேர்க்கலாம் என்று நினைத்தார். ஆனால் அங்கு நிர்வாகத்தின் ஆதரவு பெற்ற ஒரு சங்கத்தினிடம் அவன் ஒருகுறிப்பிட்ட அரசியல் கட்சியை 'மனோ வாக்குக் காயங்களால்' சிறிதேனும் ஆதரிக்கவில்லை என்ற அத்தாட்சிப் பத்திரம் பெற்றால்தான் மில்லில் இடம் கிடைக்கும் என்று தெரிய வந்தது மேற்படி அத்தாட்சிக்கு 100 ரூபாய் 'கள்ள மார்க்கட்' தட்சிணையுடன் மனுச் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது 100 ரூபாய்க்கு எங்கு போவது? ஆகையால் அந்த யோசனையைக் கைவிட வேண்டியதாயிற்று

சில வருஷங்கள் சென்றன கோவிந்தன் தன்னுடையபதினெட்டு வயது காளைப் பருவம் வீணாகிறதே என்று நினைத்து ஒரு நூதன சம்பாத்தியத்தில் இறங்கினான் அது தான் சினிமாக்கொட்டகைகளில் கூட்டத்தை முண்டியடித்துக்கொண்டு மொத்தமாக டிக்கட்டுகள் வாங்கி. டிக்கட்டு ஒரு அணா அல்லது இரண்டணா அதிகம் வைத்து வெளியில் விற்பது அப்போது அவன் படும் அடியும் உதையும் சொல்லி முடியாது இருந்தாலும் நிச்சயவருமானம் கிடைக்கும் போது யார்தான் விடுவார்கள்? சில மாதங்களிலேயே அதற்கும் முற்றுப் புள்ளி வைக்கும்படி நேர்ந்தது காரணம், சினிமாவில் போலீஸ் பாராவும், ஜனங்களின் 'கியூ'' வரிசை பழக்கமும்தான்,

ஒரு வேலையும் இல்லாமலிருந்தால் வயிறு கேட்குமா? நாளடைவில் அவன் தந்தையும் பொறுமையிழந்தார் அவனை ''தடியன்போல் சம்பாதித்தியம் இல்லாமலிருந்தால் சோறு கிடையாது. எங்கேயாவது மூட்டை தூக்கு போ என்று சொல்வது சகஜமாகிவிட்டது

ஒரு நாள் தந்தை கோவிந்தனைச் சண்டையிட்டு வெளியே துரத்தினார் கோபம், அவமானம், விரக்தி-இவை வசப்பட்டவனாய், கோவிந்தன் மதுரையின் ஒரு நாற்சந்தியில் வாயில் விரலைக் கடித்துக்கொண்டே நின்றான் திடீரென ஓர் அபூர்வ யோசனை தோன்றிற்று கையை உதறினான் ஓடினான் ரயில்வே ஜங்க்ஷனுக்கு. டிக்கட் வாங்கும் ஜன்னலருகே நின்றுகொண்டான் கூட்டத்தில் ஏமாந்தவனைப்பார்த்து 'ஜேப்படி'த்தான்; எடுத்தான் ஓட்டம் அந்தப் பர்ஸில் ஏழு ரூபாய்களும் சில்லரையும் இருந்தன நேரே வீட்டிற்குப் போனான் ''அப்பா இதோ பார் பணம்,' என்று காட்டினான் 'அட பாவி ஏதுடா'' என்றார் கடன் வாங்கினேன்'' என்று புளுகி விட்டு அப்பால் நகர்ந்தான் 'திருடியிருந்தால் அகப்பட்டுக்கொள்வாய் பயலே'' என்று கோபத்துடன் எச்சரித்தார்.



முதல் வெற்றி முற்றிலும் வெற்றி என்று நினைத்து கோவிந்தன் மேலும் மேலும் 'ஜேப்படித் தொழிலில் ஈடுபட்டான் பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டுக்கொண்டான் அதன் பயனாக மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை யடைந்தான்

சிறையைவிட்டு வெளியே வந்ததும் கோவிந்தனுக்குக் கலியாணம் காத்து நின்றது பெண் கொடுத்தது வேறு யாருமல்ல அவனுடைய சொந்தத் தாய் மாமன்தான் மதுரைக்கு வந்ததும், அவனுக்குத் தாய் இறந்துவிட்டாள் இறக்கும் தருவாயில் தன் தங்கைக்கு அளித்த வாக்கை நிறைவேற்றும்பொருட்டே, தன் மகளைக் கோவிந்தனுக்கு அவர் விவாகம் செய்வித்தார். மாஜி கைதிக்கு வேறு யார் பெண் கொடுப்பார்கள்?

மாமன் ஏழையாயிருந்தும் மருமகனுக்கு 400 ரூபாயில் ஒரு குதிரை வாங்கிக்கொடுத்து, தினசரி வாடகைக்கு எத்தனையோ முதலாளிகள் வண்டி கொடுப்பார்களென்றும், அதை வைத்துக்கொண்டு குதிரை வண்டியோட்டி மானமாகப் பிழைக்கும்படியும் அவர் ஏற்பாடுசெய்தார். பணம் வந்தால் சொந்த வண்டி வாங்கிக்கொடுப்பதாகவும் சொல்லியிருந்தார்.

3

புதுவாழ்வு ஆரம்பித்தான் கோவிந்தன். பசுங்கிளிபோன்ற மனைவியையும் பிழைப்புக்கு ஒரு வழியையும் சேர்த்துவிட்ட மாமனை வாயார வாழ்த்தினான்.

தினமும் சராசரி நாலுரூபாய் வருமானம்வரும் அநேகமாக மாதமெல்லாம் அவன் நைட் சவாரிதான் விடுவதுவழக்கம் இரவு எட்டுமணிக்கு வண்டிபிடித்து காலை எட்டுமணிவரை சுற்றுவான் ஏனெனில், பகலில் குதிரைவண்டிகளுக்கு அவ்வளவு வருமானம் வராது நகரின் மூலை முடுக்குகளெல்லாம் 'ஸிட்டி பஸ்' ஓடுகிறது கோவிந்தனுக்குத் தன் வருமானத்தையெல்லாம் தொலைத்து, ஏழைமக்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளும் அந்த நாகரிகத்தின் சின்னத்தை சின்னபின்னம் செய்துவிடலாமா என்று தோன்றும்.

சுமார் ஒருவருஷம் பறந்தோடிச் சென்றது தைவந்தால் கலியாணமாகி ஓராண்டு பூர்த்தியடைகிறது. எப்படியும் தைப்பொங்கலுக்குள் தனக்கென்று ஒரு சொந்தவண்டி வாங்கி, சவாரியைத் துவங்கிவிட வேண்டுமென்று சங்கல்பம் செய்து கொண்டான் அப்போதுதான் வண்டிக்கென ஒதுக்கும் தினசரிவாடகை ஒருரூபாய் மிஞ்சுவதுடன் யாருக்கும் அடிமையல்ல என்று தலைநிமிர்ந்து நடக்கலாமென்று கோவிந்தன் எண்ணினான் அதை நிறைவேற்றும்பொருட்டுத் தன் மனைவியைச் சென்ற ஏழெட்டு மாதங்களாகவே தினசரிஒருரூபாயை உண்டியலில்போட்டு வரும்படியும், எப்படியும் அடுத்தபொங்கலுக்குள் புது வண்டி வாங்கப் பணம் சேர்க்க வேண்டுமென்றும் வற்புறுத்திக் கொண்டேயிருந்தான்.

பொங்கலுக்கு இன்னும் பதினைந்து நாட்கள்தானிருந்தன. அப் பெருநாளை அவன் திருநாளாகவே கொண்டாடிவிடவேண்டுமென்று திட்டம் போட்டிருந்தான். தான் அன்புடன் வளர்க்கும் 'பஞ்சகல்யாணி'' க்குப் பொங்கலே தீனி என்பது அத்திட்டத்தின் முக்கிய அம்சம்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் முன் சொன்னபடி வண்டி முதலாளிக்கும் கோவிந்தனுக்கும் வாக்குவாதம் முற்றி, தன் சங்கற்பத்தைப் புதுப்புத்துக்கொண்டான். தன்னிடம் சேர்ந்திருந்த 148 ரூபாய் தவிர பாக்கி ஐம்பது ரூபாய் இருந்தால்தான் வண்டி வாங்கமுடியும்.

மறுநாள் ஆண்டவன் அவனுக்கு ஒரு விபத்தைக் கொடுத்துவிட்டார். எந்த ஸிட்டி'பஸ்'ஸின்மேல் அவனுக்குக்கோபமோ, அதுவே அவனுடைய வண்டியில்மோதி, அவனைத் தூக்கி எறிந்ததோடு, வண்டிச் சக்கரம் ஒன்றையும் நொறுக்கிவிட்டது நல்லகாலமாக குதிரை நுகத்தடியிலிருந்து உருவிக்கொண்டு தூர ஓடிவிட்டதால் அது தப்பியது கோவிந்தனுக்கு சொல்பகாயங்கள் போலீஸார் புலன்விசாரித்து. கோவிந்தன் தவறாக வண்டி ஓட்டியதால் விபத்து நேர்ந்ததுஎன்று தீர்ப்புக் கூறிவிட்டனர்

வண்டியின் முதலாளி கோவிந்தனை வேறு புதுச் சக்கரம் செய்து போடும்படி தொல்லைப்படுத்தினான் வேறு வழியின்றி, உண்டியல் பணத்தில் ஐம்பது ரூபாய் செலவு செய்து, வண்டியைப் புதுப்பித்துக் கொடுத்துவிட்டான். ஆகையால். அவனுக்குத் தன் வாழ்வின் மகா சங்கல்பமாகிய பொங்கல் புது வண்டியைப் பற்றிய கவலை அதிகமாகிவிட்டது இப்போது நூறு ரூபாய் பற்றாக் குறையாக யிருந்தது

ஒரு யோசனை தோன்றிற்று மனைவியை கிராமத்துக்கு அனுப்பி. மாமனிடம் நூறு ரூபாய் வாங்கி வரும்படி செய்வதுதான் அது ஆனால், அவள் இரண்டொரு தினங்களில் திரும்பிவந்து' ''என் அப்பா இப்போது சோற்றுக்கே திண்டாடுகிறார், எனக்குப் பொங்கல் சீராக யாரிடமோ இரண்டு ரூபாய் கடன் வாங்கிக்கொடுத்தார்.'' என்று சொல்லிக்கொண்டு திரும்பி வந்துவிட்டாள். இப்போது என்னதான் யோக்கியனாக இருந்தாலும், 'மாஜி கைதி' யாகிய அவனை நம்பி யாரதான் கடன் கொடுப்பார்கள்? சமூகம் அவனுக்கெனத் தன் மனதில் ஓர் இடத்தை ஒதுக்கி வைத்திருந்தது

தைப் பிறக்க இன்னும் மூன்றே நாட்கள்தானிருந்தன. புது வண்டி வாங்குவது, அல்லது குதிரையையும் விற்றுவிட்டு, தொழிலையேவிட்டு விடுவது என்பதே கோவிந்தனின் மந்திரமாக இருந்தது.

4

வட்டிக் கடன் கொடுக்கும் வட நாட்டைச் சேர்ந்த ஹிரலால் சேட்டின் தாழ்வாரத்தில் கோவிந்தன் உட்கார்ந்திருந்தான். ''நூறு ரூபாய் கேட்கிறீரே, என்ன ஈடு வைப்பீர்?'' என்றான் சேட். ''என்னிடம் ஒன்றும் இல்லையே. நம்பிக் கொடுங்கள். நாலு மாதத்தில் அடைத்து விடுகிறேன்'' என்றான் கோவிந்தன் ''குதிரை உம்முடையதுதானே?''

'ஆம்'

'அதை ஈடு வையுமே.'

'அதுதானே என் தினசரி ஜீவனோபாயம் அதை உம்மிடம் விட்டுவிட்டால், நான் எப்படி உம் கடனை அடைப்பது?'

'ஓகோ. அதுவா. குதிரை என் வீட்டிலேயே கட்டிக் கிடக்கட்டும் தினமும் 12 மணி நேரம் அதை உம் உபயோகத்துக்கு விடுகிறேன். காலை எட்டு மணி அடித்ததும் என் வீட்டில் கொண்டுவந்து கட்டிவிடும் தீனிச் சிலவு உம்முடையது. 100 ரூபாய்க்குத் தினசரி வட்டி கால் ரூபாயும், என் குதிரைக்கு வாடகை ரூபாய் ஒன்றும் ஆக ஒன்றேகால் ரூபாய் தினந்தோறும் காலை பத்து மணிக்குள் எனக்குக் கட்டிவிட வேண்டும்''

''அடேயப்பா நல்லது நான் வருகிறேன். உங்க கருணைக்கு ரொம்ப வந்தனம்''

இவ்வாறு சொல்லிவிட்டு கோவிந்தன் அவரிடமிருந்து தப்பி வீடு சேர்ந்தான் ஏமாற்றத்துடன்

வீடு திரும்பும்போது அவனுக்கு ஒரே வழி தென்பட்டது அது கொஞ்சம் மனத்தாங்கலுக்கு இடம் கொடுக்குமேயானாலும். பணக்காரர்களின் பேராசையிலிருந்து தப்ப அது ஒன்றே வழி. கடைசியும் சுலபமுமான உபாயம் அது ஒன்றே.

வீட்டையடைந்த கோவிந்தன் தன் மனைவி செல்லத்தை அருகே அழைத்தான். ''என்ன பணம் கிடைத்ததா? என்று ஆவலுடன் கேட்டாள். 'இல்லை'' என்று தலையசைத்துவிட்டு, அவள் கழுத்தை உற்று நோக்கினான் என்ன ஆச்சரியம்! காலையில் பார்த்த அந்த ஒரே நகை அதுதான் அவள் தகப்பன் கலியாணத்தில் போட்ட ஒற்றைவட மூன்று பவுன் சங்கிலி— அதைக்காணவில்லை ''எங்கே, சங்கிலி?'' என்று கோபமும், தாங்கலும் கலந்த குரலில் கேட்டான்.

வந்தவர்:—வீடு கட்டி முழுசா 2 வருஷம் ஆகலே அதுக்குள்ளே காரையெல்லாம் உதிர ஆரம்பிச்சுடுத்தே ஓய்!

கிரஹஸ்தர் :—அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேக்கறேள்! தெரியாத்தனமா இந்த ரூமிலே ஒரு மிருதங்க வித்வானை குடித்தனம் வெச்ச அனர்த்தம் தான் இது.

''அவசரப்படாதீங்க. இதோ இருக்குது என்று சொல்லி மடியிலிருந்து எடுத்து சிரித்துக்கொண்டே அவன் கையில் வைத்தாள். ''அதையேன் கழற்றினாய்?'' என்று அவன் கேட்டதற்கு, ''உங்களுக்கு எங்கே கடன் கொடுப்பாங்க இந்தக் காலத்திலே. அதுவும் ஈடு இல்லாமே. என்று நினைத்து என் சங்கிலியையாவது பாங்கில்' வைத்து நூறு ரூபாய் வாங்குவீங்கன்னு கழட்டி வச்சுக்கிட்டேன்.'' என்று ஆசையுடன் கூறினாள். அவளுடைய குரலில் சிறிதேனும், ஏமாற்றமாவது, மனத்தாங்கலாவது தொனிக்கவில்லை. கோவிந்தனுக்குப் பரம சந்தோஷம். தன் புதுப் பொங்கலின் சங்கல்பம் ஈடேறிவிட்டது என்று குதூகலித்தான்.

* * * *

பொங்கல் நாளன்று புது வண்டிக்கு, வாழை மரம், மஞ்சள் செடி முதலியன கட்டி, சந்தனம் குங்குமம் முதலியன இட்டு அலங்கரித்து. வயிறு வெடிக்கப் பொங்கல் தின்ற ''பஞ்ச கல்யாணி''யை அதில் பூட்டி, அவ்வூர் மாரியம்மன் கோவிலைப் பலமுறை வலம் வந்தான் கோவிந்தன். வண்டிக்குள் உட்கார்ந்திருந்தது அவனுடைய அருமை மனைவி செல்லமும், வயது சென்ற தந்தையும்தான் என்பதைச் சொல்லவா வேண்டும்?



ரேகை நிபுணர்கள்

எஸ்.ஜே.

பெரிய கடைத் தெருவில் மோஹன விலாஸ் காப்பி ஹோட்டலுக்கு அடுத்தாற்போல் உள்ள இடத்தைக் கூர்ந்து கவனித்தால் 'ரேகைசாஸ்த்திர நிபுணர் ஆறுமுகம்' என்ற எழுத்துக்களைத் தாங்கிய ஓர் அட்டையைக் காணலாம் தமிழில் மற்றொரு ரகரம் இருக்கிறது என்றுகூட ஆறுமுகத்துக்குத் தெரியாது. ஆனால் ரேகை சாஸ்திர சம்பந்தமான உண்மைகள் முழுவதும் தனக்கு 'அத்துபடி' என்ற நம்பிக்கை அவனுக்கு உண்டு அவனிடம் கையை நீட்டிவிட்டால் போதும், உடனே பூர்வஜன்மங்களையெல்லாம் எடுத்துரைக்கும் மகரிஷி போல் கண்களை மூடிக்கொண்டுபேச ஆரம்பித்துவிடுவான்; அவன் உண்மையில் நம் கை ரேகையைப் பார்த்துவிட்டுத்தான் இப்படியெல்லாம் சொல்லுகிறனே. அல்லது கை ரேகையையும் கூட ஞான திருஷ்டியிலேயே பார்த்துவிடுகிறனே என்ற சந்தேகம் நமக்கு எழும். தனக்கு மிக நம்பிக்கையானவர்களிடம் ஆறுமுகம் இமயமலைப் பிரதேசத்தில் தவம்செய்யும் ரிஷி ஒருவர் அவன் ஏழ்மையால் கஷ்டப்படுவதைக்கண்டு இரங்கி அவனிடம் இந்த சாஸ்திரத்தை உபதேசித்ததாகச் சொல்லுவான். தவிர ரிஷி ஒரு நிபந்தனையும் வாங்கிக்கொண்டாராம் அது என்னவென்றால், இந்த ரேகை சாஸ்திரத்தால் கிடைக்கும் வரும்படியில் தன் வயிற்றுச் செலவுக்குப் போக மீதியுள்ளதைப்பழனி ஆண்டவர் உண்டியில் போட்டுவிடவேண்டும் இதுவரை ஆறுமுகம் எந்தப் பழனி ஆண்டவர் உண்டியிலும் காசு போட்டதை யாரும் பார்த்தது கிடையாது. இன்னும் ரொம்ப நம்பிக்கைக்குப் பாத்திரமானவாகளிடம் ஆறுமுகம் தனக்கு இந்த வித்தையில் புலமை ஏற்பட்டதற்குக் காரணம் கனவில் பழனி ஆண்டவர் வந்து தனக்கு ரேகை சாஸ்திரத்தை உபதேசித்து அருளியதுதான் என்று சொல்லுவான்,

ஆறுமுகம் பாரபட்சமற்ற மனிதன் காலணு தட்சிணை கொடுப்பவர்களுக்கெல்லாம் அவன் சொல்லும் ஆருடத்தில் துன்பம் மிகுதியாகவும், இன்பம் கொஞ்சமாகவும் கலந்திருக்கும் அரையணு கொடுத்தவர்களுக்கு இன்பமும் ஓரளவு துன்பமும் கலந்திருக்கும் ஓரணுவோ அதற்கு மேலோ கொடுத்தவர்களுக்கு இன்பத்தின்மேல் இன்பம் வந்து குவியும். ஆறுமுகத்தைக் குற்றம் சொல்லிப் பிரயோஜனம் இல்லை நம் ஜனங்கள் வருங்காலத்து இன்பங்களைப்பற்றி அறிவதற்காகக் காசு கொடுக்கிறார்களே யொழிய துன்பங்களைப்பற்றித் தெரிந்து கொள்வதற்காக அல்ல அவன் உள்ளதை உள்ளபடியே சொல்லுவது என்று ஆரம்பித்தால், 'பிஸினஸ்'ஸில் மண்விழுந்து விடும் என்னதான் பழனி ஆண்டவர் உபதேசித்தால்கூட பொய்க்கலப்பில்லாமல் நிஜத்தையே இந்த உலகத்தில் சொல்லிவிட முடிகிறதா?

மோஹன விலாஸ் ஹோட்டலில் நாலு இட்டலிகளையும் காப்பியையும் சாப்பிட்டுவிட்டு முதலாளிக்கு ஒரு கும்பிடுபோட்டு விட்டு ஆறுமுகம் வெளியேறினன். ஆறுமுகத்துக்கு அந்த ஹோட்டலில் ஒரு சலுகை உண்டு. சமீபத்தில்தான் அவன் அந்த ஹோட்டல் முதலாளிக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எதிர்பாராத வகையில் ஏகப்பட்ட பணம் வந்து சேரவேண்டும் என்றும், இல்லாவிட்டால் தன் ரேகை சாஸ்திரத்தை மோஹன விலாஸின் புழக்கடையிலேயே எறிந்துவிட்டுப்போய் விடுவதாகவும் சொல்லியிருந்தான். எப்படியும் அவன் குறிப்பிட்ட அந்த நாள் தாண்டும் வரையில் அந்த ஹோட்டலில் அவனுக்குச் செல்வாக்கு இருக்கத்தானே செய்யும்?

மோஹன விலாஸுக்குப் பக்கத்துக் கடையில் கொஞ்சம் வெற்றிலை, சீவல் இரவலாக வாங்கிக்கொண்டு ஒரு பழைய மட்டையில் இரவல் பொடி பெற்றுக்கொண்டு கொஞ்ச தூரத்திற்கப்பால் இருந்த ஒரு முனிசிபல் பள்ளிக்கூடத்தின் சுவரோரமாய் ஒரு துண்டை விரித்துக் கொண்டு உட்கார்ந்தான். "ரேகை சாஸ்த்திற நிபுணற் ஆறுமுகம்" என்ற எழுத்துக்களைத் தாங்கிய அட்டையின் மீது படிந்திருந்த தூசிகளைத் தட்டிவிட்டு தெருவில் போவோர் கண்ணில் படும்படி அட்டையை வைத்தான். பக்கத்தில் பைக்குள் வைத்திருந்த ஒரு ருத்ராக்ஷ மாலையை எடுத்துக் கழுத்தில் போட்டுக் கொண்டான் ஒரு பழனி ஆண்டவர் படத்தை மேல் துண்டால் துடைத்துவிட்டுச் சுவரில் சாத்தி வைத்தான். கொஞ்சம் விபூதியை எடுத்து நெற்றியிலும், மார்பிலும் பூசிக்கொண்டு, கண்களை மூடிக்கொண்டு (அல்லது, பாதிக் கண்களை மூடிக் கொண்டு,) 'தியானத்தில்' அமர்ந்தான் மூடப்படாத பாதிக்கண் மூலம் 'கிராக்கி' ஏதேனும் வருகிறதா என்று கவனித்துக் கொண்டிருந்தான்.

விரைவில் ஒரு கிராக்கி வந்து சேர்ந்தது "ரேகை பார்க்கிற ஐயா! கொஞ்சம் என் கையைப் பார்க்கிறீங்

களா?" என்று கேட்டான் தன் வருங்காலத்தில் கவலை உடைய ஒரு வழிப் போக்கன்.

"அப்பனே! பழனி ஆண்டவன் திருவருள் உனக்குப் பூரணமாய் இருக்கிறது" என்று தன் நன்றியறிதலைத் தெரிவிக்கும் பொருட்டுக் கூறினன் ஆறுமுகம். அந்த மனிதனுடைய கையில் ஓர் இரண்டணு நாணயத்தைப் பார்த்த பிறகு ஆறுமுகத்தின் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

"அப்பனே! உனக்குக் கொஞ்ச நாட்களாக ஏதோ சரீரபாதை இருக்கிறது. [அந்த வழிப்போக்கன் பக்கத்து முனிசிபல் ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு பாட்டில் மருந்து வாங்கிக்கொண்டு போவது வெளிப்படையாகத் தெரிந்ததால் இதைக்கண்டு பிடிக்கப் பழனி ஆண்டவன் அருள் அதிகமாகத் தேவையில்லை]...அது விரைவில் சுகமாகும் தவிர உனக்குக் கேடு நினைத்துக் கொண்டிருக்கிறன் ஒரு எதிரி. அவனை வேல் தாங்கிய ஆண்டவன் விரைவில் தொலைத்து விடுவார்"

வழிப்போக்கன் ஒரு கேள்வியைப் போட்டான் 'நான் மனதில் ஒன்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். அது நடக்குமா, நடக்காதா?"

ஆறுமுகம் கை ரேகையை ஒரு முறை பார்த்தான். பிறகு கண்ணை மூடிக்கொண்டான். அவனுடைய உதடுகள் அசைந்துகொண்டிருந்தன. பழனி ஆண்டவனுடன் அவன் பேசிக் கொண்டிருப்பதாக வந்தவன் நினைத்தான். ஆனல் உண்மையில் ஆறுமுகம் அந்த மனிதனைத் தான் திட்டிக்கொண்டிருந்தான். 'கேட்கிற கேள்வியை வெளிப்படையாகக் கேட்காமே இப்படிக் கேட்டா என்ன செய்து தொலைப்பது? இவன் மனசிலே என்னத்தை நெனச்சிருக்கானே, யார் கொண்டது?" என்று முணு முணுத்துவிட்டு, "அப்பனே! அது பண விஷயம். இன்னும் இரண்டு மாசத்திலே உனக்குச்சாதகமாக முடியும்னு வேலாயுதம் சொல்ருரு" என்று தன் ஊகத்தைக்கூறி வந்தவனின் முகத்தைக் கவனித்தான்.

வந்த மனிதனுக்குத் திருப்தி ஆகிவிட்டது. அந்த இரண்டணு நாணயத்தைப் பக்கத்திலிருந்த உண்டியில் போட்டுவிட்டுச் சென்றுன்.

முதல் ஆசாமிக்குக் கை ரேகை பார்த்துக்கொண்டிருந்தபோதே பக்கத்தில் கூட்டம் கூடிவிட்டது. நாலைந்துபேர், ஏழெட்டு பேர் ஆகிப் பத்துப்பேர்களுக்கு மேல் கூட்டம் சேர்ந்துவிட்டது. ஆறுமுகம் ரொம்ப 'பிஸி'யாக இருந்தான். சிவப்பு முண்டாசும், கறுத்த மீசையும் கொண்ட ஒருவன், பஞ்சத்தில் அடிபட்டவனைப்போல் இளைத்திருந்த ஒரு மனிதன், மேற்படி பஞ்சத்திற்குக் காரணமானவனைப் போல் தோன்றும் பருமனுன ஒரு மனிதன், இன்றே நாளையோ என்றிருக்கும் ஒரு கிழவன் முதலியவர்கள் தங்கள் பாக்கிய வரிசைகளைப்பற்றி ஆறுமுகத்தின் திருவாய்மொழி மூலம் அறிந்துகொண்டார்கள். கூட்டத்திலிருந்த மீதிப்பேர் வேடிக்கை பார்ப்பதற்காகவே நின்றுகொண்டிருந்தனர். பிறருடைய பாக்கியங்களைப் பற்றித் தெரிந்துகொள்வதில் அவர்கள் அதிக சிரத்தை காட்டினர். அவர்கள் தங்கள் நலனைக் கோருத மகானுபாவர்கள் என்பது அவர்கள் தம்முடைய பாக்கியங்களையும் அறிந்துகொள்ள முயலாததிலிருந்தே தெரிந்தது அவர்களில் சிலர் காசுகொடுத்து ரேகைபார்க்கும் மற்றவர்களுக்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு ரேகை சாஸ்திரக்காரனிடம் குறுக்குக் கேள்விகள் போட்டார்கள்.

வெயிலின் கடுமை அதிகமாகவே, ஒவ்வொருவராகக் கூட்டத்தை விட்டுக் கலைய ஆரம்பித்தனர் ஆறுமுகத்துக்கு இன்றைக்கு இரண்டுரூபாய் கிடைத்துவிட்டது. 'போதும்; இனிமேல் ஆசைப்படக்கூடாது' என்று தோன்றியது அவனுக்கு. தன் மூட்டை முடிச்சுகள் எல்லா

வற்றையும் கட்டிக்கொண்டு தான் வழக்கமாகத் தங்கும் சத்திரத்தை நோக்கிப் புறப்பட்டான்.

இரண்டு பர்லாங்கு தூரம் சாலையில் நடந்த பிறகு நிழலடர்த்தியாக இருந்த ஓரிடத்துக்கு வந்து சேர்ந்தான் சாலையில் ஓரிடத்தில் பத்துப் பதிணைந்து பேர் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். ஆறுமுகம் தன்னுடைய மூட்டையை ஒரு மரத்தின் மறைவில் வைத்துவிட்டு, முண்டாசு கட்டிக்கொண்டு கூட்டம் நின்ற இடத்தை நோக்கிச் சென்றான். நெருக்கியடித்துக்கொண்டு கூட்டத்திற்குள் பிரவேசித்தான் "ரேகை நிபுணர்" என்ற எழுத்துக்களைத் தாங்கிய அட்டைக்குப்பக்கத்தில் ஒருவன் உட்கார்ந்திருந்தான் கூட்டத்திலிருந்த ஒவ்வொருவராக அவனிடம் கை ரேகையைக் காட்டிக்கொண்டிருந்தார்.

ஆறுமுகம் ஏதோ யோசனையில் ஆழ்ந்தான். அந்த சமயத்தில் தூரத்தில் ஒரு கழைக் கூத்தாடியின் குழல் சப்தம் கேட்கவே கூட்டம் விரைவில் கலைந்தது. ஆறுமுகமும் ரேகை நிபுணரும் தனித்திருந்தார்கள் ஆறுமுகத்தைக்கண்டதும் அந்த ரேகை நிபுணரின் முகத்தில் அசடு வழிந்தது. ஆறுமுகம் அதன் காரணத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. கைரேகைக்காரனைக் கண்டதும் ஆறுமுகத்துக்கும் தன் எதிர் காலத்தைப்பற்றி அறியவேண்டும் என்ற ஆசை தோன்றியது.

"அப்பனே! என் கை ரேகையைப் பார்த்துச் சொல்லுகிறாயா?" என்று கேட்டான் ரேகை நிபுணன். அவனுடைய கையைப் பிடித்து கொண்டபோது ஆறுமுகம் அவனுடைய முகத்தை உற்று நோக்கினான். அந்த முகத்தை எங்கேயோ பார்த்திருப்பதாக அவனுக்கு ஞாபகம் வந்தது. ஆனால்...எங்கே?

அந்தக் கறுத்த மீசை, பெருத்த கீழ் உதடு, ஆறுமுகத்துக்குச் 'சட்'டென்று ஞாபகத்திற்கு வரவில்லை ஆனால் பக்கத்தில் அவிழ்க்கப்படாமல் வைத்திருந்த சிவப்பு முண்டாசைக் கண்டவுடன் அவனுக்கு ஞானோதயம் ஏற்பட்டது. காலையில் ஆறுமுகத்தினிடம் வந்து ரேகை பார்க்கும்படி கேட்டுக் கொண்ட சிவப்பு முண்டாசுக்காரன்தான் இந்த ரேகை நிபுணன்! இதென்ன வெட்கக்கேடான நிலைமை! காலையில் தன்னிடம் கைரேகையைக் காட்டிய அதே மனிதனிடம் தன் கைரேகையைக் காட்டுவதென்றால்! ஆறுமுகம் தன் அசட்டுத்தனத்தை மறைப்பதற்காக, "அப்பனே! பழனி ஆண்டவன் அருள் உனக்கு எப்படி இருக்கிறதென்று பார்ப்பதற்காகத்தான் கையை உன்னிடம் காட்டினேன் பழனி ஆண்டவன் உனக்கு ரேகை சாஸ்திரத்தை உபதேசிக்காவிட்டாலும் பணம் சம்பாதிக்கும் வழியை நன்றாக உபதேசிக்கிறான்!" என்றான்.

"எல்லாம் அவ்விடத்தில் கற்றுக் கொண்டதுதான்!" என்று சிரித்தான் ரேகை நிபுணன்.

ஆறுமுகம் கிளம்புவதற்காக எழுந்தான்.

"அப்பனே, பழனி ஆண்டவா! காசு போடாமல் ஏமாற்றுகிற வேலையைப் பழனி ஆண்டவன் ஒருவனிடம்தான் காட்டலாம். இந்த ஐயாமுத்துவிடம் காட்டமுடியாது காலையிலே உனக்குப் போட்ட ரெண்டணாவைப் போட்டுவிட்டுப் போ!" என்றான் ரேகைவிற்பன்னன்.

ஆறுமுகம் இரண்டணாவை எறிந்து விட்டுத் தன்வழியே சென்றான்.

அசோகா
காலணா பாக்கெட்டுகள் எங்கும் கிடைக்கும்...
ASOKA MILD SCENTED

சக்தி ஆருடம்!
☆
(பிரபல ஆருட சாலை)
பல மேன்மையான நற்சாட்சிகள் பெற்றது
1 வருஷ பலன் ரூ. 5.
ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1.
சக்தி கவசம் ரூ. 7-8-0.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
வி பி பி தனி
ஜாதகம் OR கடிதம் எழுதும் நேரம் தேவை.
சக்தி ஹோம்,
விருத்தாசலம் P. O. (S. I.)

சேலம்
மூன்று தாமரை
பீடிகளை உபயோகித்து, சந்தோஷமடையுங்கள்
S.A.H
Estd: 1920
Rgd. No. 2221.
Prop: S. அஹமத் உசேன்,
கோட்டை, சேலம் S.I.R.

சமீபத்தில் டில்லிக்கருகே "கல்வி மேளா" நடந்தபோது கிராம நாடகத்தில் கலந்து கொண்ட குழந்தைகள். இதை இந்தியக் கல்வி இலாகா மந்திரி சபை ஏற்பாடு செய்தது.

படத்தில் காணப்படும் மூன்று பசுக்களும் ஸாஹிவால் பசு எனப்படும். வலது கோடியில் நிற்கிறதே அதன் பெயர்தான் 'மூடினி' என்பது. நடுவேயிருப்பது அதன் பெண் 'பிப்' என்ற பெயருள்ள பசு. "பிபி" என்ற பசு இடது கோடியில் நிற்கிறது இவை அனைத்தும் ராணுவப் பண்ணையில் உள்ளவை. 'மூடினி'க்கு வைசிராய் கோப்பை பரிசு கிடைத்தது.

செவிட்டைப் போக்க ஆராய்ச்சி-டாடா மெமோரியல் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் ஸிர்ஸத் செவிட்டை நிவர்த்திக்க சில நூதன முறைகளைக் கண்டு பிடித்திருக்கிருர்கள். அவர் தமது முறைகளை அமெரிக்க டாக்டர்கள் மகாநாட்டில் விளக்கிய போது இப்படம் எடுக்கப்பட்டது மேற்படி இந்திய டாக்டரின் முறைகளை அமெரிக்க டாக்டர்கள் மகாநாடு மிகவும் மெச்சியதாம்.



ஜாரியா நிலக்கரி சுரங்கக்காரர்களுக்கும் புதிதாகக் கட்டித் தரப்பட்டுள்ள வீடுகளின் தோற்றம் இந்திய சர்க்கார் சாதனையில் இதுவும் ஒன்று.

செல்லப்பிள்ளை

தில்லைவாசி

தகப்பன் வரவை ஆவலோடு எதிர்பார்த்து வாயிற்படியில் உட்கார்ந்திருந்தான் முருகன். அப்பன் வந்தவுடன் சினிமாவுக்குப் போகலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு சாயந்திரம் முதற்கொண்டு அம்மா, என்னை சினிமாவுக்கு அழைச்சிகிட்டுப் போம்மா'' என்று தாயைத் தொந்ரதவு பண்ணிக்கொண்டிருந்தான், அழுது பிடிவாதம் பிடித்தான்

'அப்பா வந்ததும், சினிமாவுக்குக் கூட்டிக்கிட்டு போகச் சொல்றேன். நீ சாப்பிடுடா'' என்று காமாட்சி முருகனுக்கு சமாதானமாக சொல்லி வைத்தாள் கணவன் திரும்பி வருவதற்குள் அவன் தூங்கிப்போய்விடுவான் என்ற நினைப்பில் அவள் அப்படி சொல்லிவிட்டாள் பையனும் அதையே பிடித்துக்கொண்டு விட்டான். "சினிமாவுக்குப் போகலாம்'' என்ற நம்பிக்கையோடுதான் அவன் சாப்பிட்டான்.

நீ போய்த் தூங்குடா. அப்பா வந்ததும் எழுப்பி, உன்னை சினிமாவுக்கு அழைச்சுப் போகச் சொல்றேன்'' என்று அவள் சொல்லிப் பார்த்தாள் முருகன் ஏமாறுபவனாய் இல்லை. "எனக்குத் தூக்கம் வரலை அம்மா'' என்று சொல்லி வாயிற்படியில் வந்து உட்கார்ந்துவிட்டான். அப்பொழுது இரவு எட்டு மணி.

''ஊரிலிருந்து இந்த ஜனங்கள் உத்சவத்திற்கு வந்தாலும் வந்தாங்க இப்படிபிள்ளையைச் சினிமாப்பயித்தியமா அடிச்சுவிட்டுப்போயிட்டாங்க! நல்ல ஜனங்கள்! புதிதாய் ஆனையைப் பார்த்த மாதிரி, ஒவ்வொரு நாளுமா சினிமா பாாப்பாங்க. இவனையும் கூடவே அழைத்துப் போனதில்லே தொல்லையாய் முடிந்து விட்டது சினிமாப் பார்க்கணும், சினிமாப் பார்க்கணும் என்று கழுத்தையறுக்கிருன். இவனுக்கு டிக்கட்டுக்கு காசு வேண்டியதில்லை, ஆனல், அழைச்சிப்போறவங்களுக்குநாலணு காசு வேண்டுமே. அத்துடன் வேலை வெட்டி இல்லாம, சினிமாப் போய்ப் பாாக்க முடியணுமே. இதெல்லாம் யாரால் முடியும் இந்த வீட்டில்?'' என்று காமாட்சி அலுத்துக்கொண்டாள்.

அந்த வருஷம் உத்சவத்திற்கு காமாட்சியின் அண்ணனும், அண்ணியும், இன்னும் இரண்டு பேர்களும் கிராமத்திலிருந்து வந்திருந்தார்கள். ஒரு வாரம் முனுசாமியின் வீட்டில் தங்கியிருந்தார்கள் வந்தவர்கள் கோயிலுக்குப் போனாகள். சாமி பார்த்தார்கள். ஊரைச் சுற்றிப் பார்த்தார்கள். சினிமாக் கொட்டகைகள் அவர்கள் கண்ணில் பட்டன. அதே சமயம் ஊரில் நான்கு கொட்டகைகள் இருந்தது அவர்களுக்கு நல்லதாய்ப் போயிற்று. ஒவ்வொரு நாளும் சினிமாவுக்குப் போனார்கள். பாாத்த படத்தையே திரும்பத் திரும்பப் பார்த்தார்கள் அப்பொழுது ஐந்து வயசுகூட நிரம்பப் பெருத முருகனையும் கூடவே அழைத்துப் போனார்கள் அவனுக்கும் டிக்கட்டுக்குக் காசு கொடுக்க வேண்டுமென்றிருந்தால், அப்படி அழைத்துக்கொண்டு போயிருப்பார்களா என்பது சந்தேகம்தான்

முதல் நாள் காமாட்சி, தன் மகன் முருகன் அவர்களுடன் சினிமாவுக்குப் போவதைத் தடைசெய்யவில்லை ''பாவம், பிள்ளை போய்வரட்டும். அவனை யார் அழைத்துக்கொண்டு போய் சினிமா காட்டப் போகிருர்கள்?'' என்ற நினைப்பு அவளுக்கு. இரண்டாவது நாளும் அவள் ஒன்றும் மறுப்பு சொல்லவில்லை.

மூன்ரும் முறையாக முருகன் அவர்களுடன் கிளம்பும்போதுதான், "அவனை இங்கேயே வீட்டுவிட்டுப் போ, அண்ணே. நீங்கள் இருக்கிற வரைக்கும் அவனை அழைச்சுப் போய் வந்து விடுறீங்க. பிள்ளை இதே நினைப்பு வைத்துக்கொண்டு விடுவான். ஒவ்வொரு நாளும் சினிமாப் பார்க்கணும், சினிமாப் பார்க்கணும் என்று எங்களைத் தொந்தரவு பண்ண ஆரம்பித்து விடுவான். அப்புறம் எங்களுக்குக் கஷ்டம்தான் "அவர் பாவம் வேலை செய்து அலுத்துப் போய் வீட்டுக்கு வருகிருர். சாப்பிட்டுவிட்டு அசந்து தூங்கிப் போயிடுருர். எனக்கும் வேலை ஒழியமாட்டேன் என்கிறது. எங்களால் சினிமாவுக்கு அவனை அழைத்துப்போக முடியாது'' என்று அவள் சொல்லிப் பார்த்தாள். அவர்கள் கேட்கவில்லை. பிடிவாதமாக அவனை அழைத்துப் போனார்கள் அதற்கேற்றுப்போல் முருகனும் பிடிவாதம் பிடித்தான். அதற்குமேல் காமாட்சியினல் என்ன செய்ய முடியும்?

முருகனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியோ சொல்லி முடியாது இத்தனை நாளும் வீட்டில் அடைந்து கிடந்தவனுக்கு, இப்பொழுது ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்கும், கோயிலுக்குப் போவதற்கும், சினிமா பார்ப்பதற்கும் நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. அவனுக்கு சாப்பாட்டில்கூட அவ்வளவு கவனம் செல்லவில்லை ''எப்பொழுது மாமாவும், அத்தையும் வெளியில் செல்வார்கள்? நாமும் கூடவே போவோம்'' என்று அவன் எதிர்பார்த்திருப்பான் ஆவலோடு, "அவர்கள் இங்கேயே இருந்துவிட்டால், தினமும் வெளியில் போகலாம், சினிமாப் பார்க்கலாம்'' என்ற நினைப்பு முருகனுக்கு.

மாமாவைப் பார்த்து. "நீங்கள் இங்கேயே இருந்து விடுங்களேன், மாமா!'' என்று கஷ்டநஷ்டங்கள் இன்னதென்று அறிய முடியாத நிலையில் இருந்த அந்தச் சிறுவன் சொல்லி மகிழ்ச்சியினல் குதித்தான். முருகனின் கள்ளங்கபடமற்ற இந்த செய்கையைப் பாாத்த அவர்களுக்கும் ஒரே மகிழ்ச்சி.

கடைசியில், அவர்கள் ஊருக்குக் கிளம்பினுர்கள். முருகனும் ''நானும் ஊருக்குப் போகிறேன்'' என்று தன்னுடைய புதுச் சொக்காயைப் போடும்படி தாயைக் கட்டாயப் படுத்தினுன். அவளும், அவன் ஊருக்குப் போகாவிட்டாலும், சொக்காயாவது போட்டிருக்கட்டுமே என்று அதை அவனுக்குப் போட்டாள் அவர்களுடன்கூட ஊருக்குப் போவதற்கு முருகனும் கீழே இறங்கிவிட்டான் முனுசாமி அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். பையனே பெருத்த குரலில் அழத் தொடங்கிவிட்டான். அவன் ஓயவேயில்லை. "அவர்களுடன் கூடப் போனுல், அங்கேயும் குஷியாக இருக்கலாம், சினிமாத் தவருமல் பார்க்கலாம்'' என்று அந்த சின்னஞ் சிறிய நெஞ்சு எண்ணியதோ, என்னவோ?

அவர்கள் போய், வெகு நாழிகைக்குப் பிறகுதான் அவன் ஓய்ந்தான். அதுவும் முனுசாமி, 'நான் உன்னை இன்னைக்கு சினிமாவுக்கு அழைச்சு

கிட்டு போறேன்' என்று சொன்ன பிறகு தான் அவன் ஓய்ந்தான்

பொழுதுவிடிந்தது. பொழுது போனல். 'சினிமாவுக்குப் போகணும்' சினிமாவுக்குப் போகணும்' என்று பிடிவாதம் பிடித்து அழுதான் முருகன் என்ன சொல்லியும் அவனை சமாதானப்படுத்த முடியவில்லை அவன் அழாமல் இருப்பதற்காக ஐஸ்கிரீம் கேக்கூட வாங்கிக் கொடுத்தார்கள். ஐஸ்கிரீம் கேக் தீர்ந்ததும், மீண்டும் 'சினிமா, சினிமா' என்று அடம்பிடித்தான் ஒவ்வொரு நாளும் அவனை அழைத்துப் போவதாகச் சொல்லி ஏமாற்றிக்கொண்டே வந்தார்கள் முனுசாமியும், காமாட்சியும் பையனும், மாமாவைப்போல் அப்பாவும் சினிமாவுக்கு அழைத்துப் போவார் என்று எதிர்பார்த்து ஏங்கிப் போய்விடுவான்.

* * * *

முனுசாமிக்கு இஞ்சினியர் ஆபீசில் 'பங்கா' இழுக்கும் வேலை. அதற்கு அவனுக்கு மாதம் இருபது ரூபாய் சம்பளம் அவனுக்கு இந்த ஒரு வேலை மட்டுமல்ல மற்ற ஆபீஸ் வேலைகளுடன், ஆபீசர் வீட்டு வேலையையும் சேர்த்து செய்தாகவேண்டும் பம்பரம்போல் நாள்பூராவும் சுற்றியலையவேண்டும் நல்லவேளை! இந்த கஷ்ட ஜீவனத்தில் அவனுக்கு குழந்தை குட்டிகள் அதிகமில்லை முருகன் ஒரேபிள்ளை. அவனுடைய செல்லக் குழந்தையும்கூட.

அவனுடைய குறைந்த சம்பளத்தில் அவனல் அடிக்கடி சினிமா பார்க்க முடியுமா? அதற்கும் அவனுக்கு ஓய்ச்சல் ஒழிவுதான் ஏது?

தன் மனைவி வீட்டு ஜனங்கள் வந்து போனதிலிருந்து முனுசாமிக்கு 'ஏண்டா அவர்கள் உத்சவத்திற்கு வந்தார்கள்?' என்று ஆகிவிட்டது ஒன்றும்தெரியாமல் சும்மாக்கிடந்தமுருகனுக்கு சினிமாப்பார்க்க ஒரு ஆவலைக் கிளப்பி விட்டுவிட்டுப்போய்விட்டார்கள் என்று அவர்கள்மேல் அவனுக்கு ஒரே எரிச்சல்.

முனுசாமிக்குமட்டும், மகனை சினிமாவுக்கு அழைத்துக்கொண்டுபோய் காட்டவேண்டுமென்று ஆசையில்லையா? ஆசையிருந்தாலும், அடிக்கடி போய்வரத்தான் முடியுமா? அதற்குக் காசு வேண்டாமா? காசு இருந்தாலும். வேலையின்றி ஓய்வு நேரம் கிடைக்க வேண்டாமா? பாவம், வீட்டில் சாப்பிடும் நேரந் தவிர, அவன் வாங்கும் இருபது ரூபாய் சம்பளத்திற்காக ஆபீஸில் பழியாய்க்கிடக்க வேண்டியிருந்ததே

மகனை ஒருதரமாவது சினிமாவுக்கு அழைத்துப்போய் வந்துவிடுவது என்றுகூட அவன் முயன்று பாாத்திருக்கிறன். அதற்கேற்ற நல்ல சந்தாப்பம் அவனுக்கு வந்து வாய்க்கவில்லை.

* * * *

அன்றிரவு முனுசாமி இஞ்சினியர் ஆபீசிலிருந்து வீடு வந்து சேர்ந்தான் வழக்கம்போல் முருகன் அவனுக்காகக் காத்து வாயிற்படியில் உட்கார்ந்திருந்தான். தகப்பனைக் கண்டதும் "அப்பா சினிமாவுக்குப் போகணும், இன்னைக்கி அழைச்சிகிட்டுபோ, அப்பா"



என்று முருகன் செல்லமாகக் கேட்டுக்கொண்டே அவனை வந்து பிடித்துக்கொண்டான்.

"ஆகட்டுமடா, கண்ணு. நாளைக்கு அழைச்சிகிட்டுபோறேன். நீ போய்த் தூங்குடா" என்று முனுசாமி மகனுக்கு சமாதானமாகச் சொல்லிப் பார்த்தான் முருகனே அவனை லேசில் விடவில்லை. பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தான். அழுது அழுச்சாட்டியம் செய்தான். முனுசாமியும் ஆனமட்டும் அவனுக்குச் சொல்லிப் பார்த்தான். பையனே ஒன்றையும் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. அவனுடைய குறி சினிமாவின் மேலேயே இருந்தது

முனுசாமியின் பொறுமை எங்கோ பறந்து போய்விட்டது. அவனுக்கு எரிச்சலும், கோபமும் அதிகமாகி விட்டன மகனைப் பாாத்து கையை ஓங்கினன். ஓங்கின கை நிற்கவில்லை. முருகன் முதுகில் பலமாக அடி விழுந்துவிட்டது

அடிமேல் அடியாக நாலைந்து தரம் அவனை அறைந்துவிட்டான் முனுசாமி. நைவிரல்நள் அப்படியே பதிந்து போயின. முருகன் அடி பொறுக்க முடியாமல் அலறி அலறி

அழுதான். அதற்குள், காமாட்சி முருகனின் அலறலைக்கேட்டு உள்ளேயிருந்து ஓடிவந்தாள். அவளுக்கு விஷயம் புரிந்துவிட்டது. மகனைத் தூக்கிக்கொண்டாள். முனுசாமியும் அவளைத் தொடர்ந்து உள்ளே வந்தான் அவன் கோபம் தணிந்ததாய்த் தெரியவில்லை

'ஏன், இப்படி குழந்தையைப் போட்டு சாகடிக்கிறீங்க சிறிது, அதுக்குஎன்ன தெரியும்? சினிமா சினிமா என்று வாதனைபண்ணுது ஏதாவது சாக்குபோக்கு சொல்லிக்கிட்டிருந்தால். போச்சு படாத இடத்தில் பட்டுவிட்டால் என்ன ஆகும், என்று காமாட்சி கணவனைக் கடிந்துகொண்டாள்.

'நல்ல பிள்ளை! இப்படியா அடம் பண்ணும்? ஒரு சமயா சந்தர்ப்பம் தெரியறதில்லை' என்று அவன் கோபமாகப் பேசினன். காமாட்சி மகனை சமாதானப்படுத்திக்கொண்டிருந்தாள்.

'சரி. சரி. எனக்கு நாழியாகிறது. சாப்பிட்டுவிட்டு மறுபடியும் வேலைக்குப் போகணும். இன்னைக்கி ஆபீசில் பெரிய துரை வந்திருக்கிறர். 'பங்கா' இழுத்து இழுத்து கைசோர்ந்து போச்சு ராத்திரி பூராவும், பெரிய துரை தூங்குகிற அறையில் இருக்கிற 'பங்கா'வை இழுத்தாகவேண்டும்' என்று அவன் அலுத்துக்கொண்டான்.

அவன் ஜன்மத்தில் அன்றுபோல் அவன் என்றும் வேலை செய்ததில்லை. அவனைப் பிழிந்து எடுத்துவிட்டார்கள். அத்துடன்தான் முடிந்ததா வேலை? மறுபடியும் இரா பூராவும் 'மொட்டு, மொட்டு' என்று விழித்து, பங்காவை இழுத்தவண்ணம் உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டும். அடேயப்பா! என்னவேலை!

இதெல்லாம் சேர்ந்துதான் அவன் கோபத்தைக்கிளப்பிவிட்டது செல்ல மகனை, கண் மூஞ்சித் தெரியாமல் அறைந்து அடித்துவிட்டான் என்றைக்கும்போலத்தான், "சினிமாவுக்குப் போகணும்" என்று பிடிவாதம் பிடித்து அழுதான். இத்தனை நாளும் மகனுக்கு ஏதாவது ஒரு சாக்குபோக்கு சொல்லி சும்மாயிருக்கும் முனுசாமி. அன்று ஏனே மகனை அப்படி அடித்துவிட்டான்? அன்று ஏதோ சந்தர்ப்பப் பிசகாய்ப் போய்விட்டது வேலை அலுப்பினல், தன் பொறுமையை இழந்துவிட்டான் அவன்.

அரக்க. பரக்க. மனைவி. போட்டதைச் சாப்பிட்டுவிட்டு, ஆபீசைப் பார்க்க ஓடினன் முனுசாமி. அதற்குள் முருகன் தூங்கிப் போய்விட்டான்.

அன்றிரவு பூராவும் முனுசாமிக்கு ஆபீசில் இருப்புக்கொள்ளவில்லை. மனசிலும் நிம்மதி ஏற்படவில்லை ஏதோகடமைக்கு பங்காவை இழுத்தவாறே இருந்தான். "குழந்தை இப்போ, எப்படியிருக்கானே? பச்சைக் குழந்தை! அது என்ன செய்யும்? நம்ப வறுமையும், கஷ்டமும் அதுக்கு எங்கே தெரியப்போகிறது? மூர்க்கத்தனமாய், இப்படிபோட்டு அடித்துவிடுவேனு? ராத்திரியில், எங்கு விழித்துக்கொண்டு குழந்தை பயத்தினல் அலறுமோ?" என்ற கவலை அவனைப் பற்றிக்கொண்டது. "பொழுது எப்போது விடியும், வீட்டுக்குப்போய் முருகனைப் பார்ப்போம்" என்ற நினைப்பிலேயே அவன் உட்கார்ந்திருந்தான்.

பொழுது விடிந்து, காலை எட்டு மணிக்குமேல்தான் அவனல் வீட்டுக்குப் போக முடிந்தது

வழக்கம்போல் முருகன் தகப்பனுக்காக வாயிற்படியில் உட்கார்ந்து காத்துக்கொண்டிருக்கவில்லை. முனுசாமி ஆவலோடு உள்ளே போனன். முருகன் ஒரு பாயில் படுத்திருந்தான். காமாட்சி கவலையோடு அவன் அருகில் உட்கார்ந்திருந்தாள் முருகன் உடம்பு கனலாய் காய்ந்துகொண்டிருந்தது

இரவு பூராவும் முருகன் தூங்கவேயில்லை. தூக்கத்திலேயே அலறி அலறி அழுது எழுந்து உட்காாந்துவிட்டான் காமாட்சிக்கு ஒரே பயமாய்ப் போய்விட்டது. என்ன இருந்தாலும், அவன் முருகனை அப்படி அடித்து இருக்கவேண்டியதில்லை. அவன் அடித்த அடியில் பையன் பயந்து போய்விட்டான். அவன் உடம்புக்கு வந்துவிட்டது. இப்பொழுது காமாட்சியல்லவா அவஸ்தைப்படுகிறுள்?

19557

இப்படி அவன் மனைவி கவலையோடு கூறிக்கொண்டே போனள். அது அவனிடம் குற்றம் கண்டு பிடிப்பது போலவுமிருந்தது.

முனுசாமி வேதனையடைந்தான். அவன் முகத்தில் சோக ரேகை படர ஆரம்பித்தது கவலை அவன் மனதைக் கவ்விக்கொண்டது வாழ்க்கையில் தான் செய்த பெரிய தவறை உணர்ந்துவிட்டவன்போல் அவன் காணப்பட்டான் 'மகனையடித்து, பயங் காட்டி விட்டதினல்தான், அவனுக்கு ஜ¯ரம் வந்துவிட்டது" என்று அவன் வருந்தினன்.

தான் செய்த அந்தத் தவறுக்கு அவன் எத்தகைய பெரிய தண்டனையையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தான் "முருகன், முன் போலவே சிரித்து, விளையாடி நல்லபடியாக இருக்கணும்' என்பதுதான் அவனது ஒரே நோக்கமாக இருந்தது அப்பொழுது அதற்காக அவன் எதையும் செய்வதற்கு சித்தமாயிருந்தான்.

வைத்தியரைக் கொண்டு வந்து காண்பித்தான் ஒரு வாரம் ஆபீசில் லீவு வாங்கிக்கொண்டு, மகன் பக்கத்திலேயே இருந்தான். ஊண், உறக்கம் வெறுத்து, மகனின் உடம்பு தேறவேண்டுமே என்று அவன் துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தான். அவன் வேண்டாத தெய்வங்களில்லை.

கடைசியில் கடவுள் அவன் வயிற்றில் பாலை வார்த்தார். முருகன் உடம்பும் சரியாயிற்று.

அதன் பிறகு முனுசாமி தன் ஒரே மகன் முருகனுக்குக் கொடுத்த செல்வம் கொஞ்ச நஞ்சமல்ல. காமாட்சி மகனைப் பார்த்து ஒரு சொல் கடுமையாகச் சொல்லிவிட்டாலும், அவளைக் கண்டித்தான். மகனின் விருப்பத்தை ஓரளவாகிலும், அவன் பூர்த்தி செய்ய முயன்றுன்.

தந்தை காட்டும் பிரியத்தைக் கண்டு மகனுக்கோ ஒரே மகிழ்ச்சி. தாய்க்கு அதைவிட அதிக மகிழ்ச்சி.



சமீபத்தில் புது டில்லியில் நடந்த உலக மத சமத்வ காங்கிரஸ் வைபவத்தில் கவர்னர் ஜெனரல் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் பேசிக்கொண்டிருக்கிருர்.

(கீழ்) திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் ஆதரவில் ஷை மகாநாடு சில நாட்களுக்கு முன்பு குமரி முனையில் நடைபெற்றது (இடது) மகாநாட்டு பந்தலின் ஒருபகுதி. (வலது) மகாநாட்டு தலைவர் ஸ்ரீஎல் கிருஷ்ணசாமி பாரதி

கைத்தொழில் நிரம்பிய நகரம்

☆

இப்போது, எங்கு பார்த்தாலும் "புஷ்கோட்" மோகம் அதிகம் பரவியிருக்கிறதல்லவா? இந்த புஷ் கோட் தைப்பதற்கு "லினன்" துணிதான் ரொம்ப ஏற்றது அயரிஷ் லினன் என்ருல் எல்லோருக்கும் நன்கு தெரியும் இவ்வுலகப் பிரசித்தி பெற்ற லினன் தயாரிக்கும் தொழிற் சாலைகள் பெல்பாஸ்ட் நகரத்தில் தான் இருக்கின்றன.

வட அயர்லாந்தின் தலைநகரும் பிரிட்டனிலுள்ள முக்கிய துறைமுகங்களில் ஐந்தாவதுமான பெல்பாஸ்ட் நகரம் இன்று ஒரு பெரிய தொழிற்சாலை நகரமாக விளங்கி வருகிறது 200-வருடங்களுக்கு முன் செம்படவர்கள் கிராமமாக இருந்து வந்த இந்த பெல்பாஸ்ட் இன்று இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த நகரமாக விளங்கி வருவதற்கு அதன் மக்களே காரணம் 1860 வருடம் 20 000 மக்களேயிருந்த பெல்பாஸ்டின் இன்றைய ஜனத்தொகை ஐந்து லட்சமாகும்

கடலுக்கருகில் அமைந்திருப்பதை தவிர வேறு யாதொரு விதமான இயற்கை நன்மைகளையும் பெற்றிரா்த பெல்பாஸ்டின் முன்னேற்றம் இதர நாடுகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாகும். பெல்பாஸ்டில் நிலக்கரி போன்ற மூல, கச்சாப் பொருள்களில்லை அப்படியிருந்தும் அதன் மக்கள் சலியா உழைப்பினுலும், விடா முயற்சியாலும் தங்கள் ஊரை செல்வம் நிரம்பிய 'சொர்க்க நகரமாக' அபிவிருத்தி செய்துள்ளனர்.

இன்று பெல்பாஸ்டில் பிரிட்டனிலேயே மிகப் பிரம்மாண்டமான லினன் ஆலைகளும், மிகப் பெரிய கப்பல் கட்டும் துறையும், மிகப் பெரிய டிஸ்டிலரியும். கயிறு, வடம் தயாரிக்கும் தொழிற் சாலையும் இருக்கின்றன.

லினன் ஆலைகளும், கப்பல் கட்டும் துறையும்தான் பெல்பாஸ்ட் நகரத்துற்கு ஜீவநாடியாக விளங்கி வருகின்றன. அமெரிக்க உள் நாட்டு யுத்தம் காரணமாக உலக பஞ்சு சப்ளை தடைப்பட்டபோது உதவிக்கு வந்த பெல்பாஸ்டின் லினன் ஆலைகள் அதுமுதல் உலகிலேயே மிக நேர்த்தியான லினன் ஆடைகள் தயாரித்து வருகின்றன.

பிரிட்டனின் கப்பல் கட்டும் தொழிலிலும் பெல்பாஸ்ட் முக்கியத்துவம் வகிக்கிறது. அநேக உலகப் பிரசித்திபெற்ற கப்பல்கள் இங்கு கட்டப்பட்டுள்ளன உலகிலேயே மிகப் பெரியதாக இருந்துவரும் ஹார்லண்டு அண்ட் உல்ப் கப்பல் கட்டும் ஸ்தாபனம் இங்குதான் அமைந்திருக்கிறது. கப்பல் கட்டும் துறைக்கு அருகாமையில்தான் வடம் தயாரிக்கும் தொழிற்சாலையும் உள்ளது. இது உலகிலேயே மிகப் பெரியதாகும்

இவைகளைத்தவிர இன்று பெல்பாஸ்டில் வேறு பல தொழில்களும் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. கப்



பெல்பாஸ்ட், வட அயர்லாந்து துறைமுகம் அநேகம் கப்பல்கள் இங்கிருந்து உலகின் சகல பகுதிக்கும் போகின்றன. அத்தோடு இது மிக அழகான ஊர். முழுதும் விவசாயப் பகுதி. அவ்வூரின் தோற்றம்.

பல்கட்டும் துறைக்கருகில் கடல் விமானங்கள் கட்டப்பட்டு வருகின்றன. பெல்பாஸ்டின் லினன் ஆலைகள் பல புதுவித செயற்கை ஜவுளிகளைத் தயாரித்து வருகிறது.

பெல்பாஸ்ட் நகரத்தின் இயற்கைச்செல்வம் அதன் மக்கள்தான். உலக முன்னேற்றத்திற்கு உதவி செய்துள்ளவர்களும், அமெரிக்காவுக்கு 13 ஜனாதிபதிகளை அளித்துள்ளவர்களும். பிரிட்டிஷ் ராணுவத்தில் பெரும் பதவிகள் வகிக்க கிட்டத்தட்ட ஏகபோக உரிமையை அனுபவிக்கிறவர்களுமான இம்மக்கள் இருக்கையில் பெல்பாஸ்டின் எதிர்காலம் ஜகஜ்ஜோதியாய்த்தான் விளங்கிவரும் என்பதில் ஐயமுண்டோ?

அட்டைப்படம்

☆

சிறு குழந்தைகளுக்கு வரும் முடக்குவாதத்தை அடியோடு ஒழித்துக்கட்ட அமெரிக்காவில் நிதி திரட்டி வைத்தியக் கட்டிடம் கட்ட அரும்பாடு பட்டார்கள். இதற்கு மூலகாரணமாயிருந்தவர் ரூஸ்வெல்ட். ஜார்ஜியாவிலுள்ள மேற்படி வைத்தியசாலையின் தோற்றத்தை அட்டையில் பாருங்கள்.

A. B. C. Talks.	1	4	0
ராமானுஜதர்சனம்	1	0	0
தீனதயாளு	0	12	0
பாலகங்காதர திலக்	0	8	0
ஸ்வராஜ்யம்	0	8	0
சங்கராச்சாரியார்	0	5	0
ஸ்ரீராம ஜனனம்	0	4	0

தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்:

"சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட்ரோட், மதராஸ்.



பெல்பாஸ்டிலுள்ள "ஸிடி ஹால்." 1900 வருஷம் இது திறந்து வைக்கப்பட்டது



உலகிலேயே மிகப் பெரிய கப்பல் கட்டும் இடமாக விளங்கும் பெல்பாஸ்ட் துறைமுகக் காட்சி.



हृद्यनाहत चक्रेऽस्मिन्ननिलानलयोगतः ।
आहतस्तत्र नादः स्यादिति शास्त्रे प्रकीर्तितम् ॥

ஹ்ருத்யனாஹத சக்ரேஸ்மிந்
3
நனிலானல யோகத:।
3
ஆஹதஸ்தத்ர நாத: ஸ்யா
8
திதி சாஸ்த்ரே ப்ரகீர்த்திதம்॥
3

நாத உற்பத்தி

இதயத்திலுள்ள அனாஹத சக்கரத்தில் வாயு, அக்கினி இவைகளின் செயற்கையால் 'ஆஹதம்' என்ற நாதம் உண்டாகின்றது என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

कण्ठे विशुद्धचक्रं स्यात् सहस्रारं तु मूर्धनि ।
मन्द्रमध्यमताराख्या भवेयुस्तेषु तु क्रमात् ॥

கண்டே விசுத்த சக்ரம் ஸ்யாத்
2 3 4
ஸஹஸ்ராரம் து மூர்த்தநி।
3 4
மந்த்ர-மத்யம-தாராக்யா
3 4 2
பவேயுஸ்தேஷு து க்ரமாத்॥
4

கழுத்தில் 'விசுத்தி' என்ற சக்கரமும், தலையில் 'ஸஹஸ்ராரம்' என்ற சக்கரமும் உள்ளன. மேற்கூறப்பட்ட இருதயம், கழுத்து, தலை என்ற மூன்று ஸ்தானங்களிலிருந்து, முறையே மந்த்ரம், மத்யமம், தாரம் என்ற நாதங்கள் பிறக்கின்றன.

श्रुतयः स्युः स्वराभिन्नाः श्रावणत्वेन हेतुना ।
अहिकुण्डलवत्तत्र भेदोक्तिः शास्त्रसम्मता ॥

ச்ருதய: ஸ்யு: ஸ்வராபின்னா:
4
ச்ராவணத்வேந ஹேதுநா।

அஹிகுண்டலவத் தத்ர
3
பேதோக்தி: சாஸ்த்ர ஸம்மதா॥
4 3

सर्वाश्च श्रुतयस्तत्तद्रागेषु स्वरतां गताः ।
रागहेतुत्व एतासां श्रुतिसंज्ञैव सम्मता ॥

ஸர்வாஸ்ச ச்ருதயஸ்தத்த
த்ராகேஷு ஸ்வரதாம் கதா:।
3 3 3
ராகாஹேதுத்வ ஏதாஸாம்
3
ச்ருதிஸம்ஞைவ ஸம்மதா॥

சுருதிகளின் தோற்றம்

காதுகளால் கேட்கப்படுவது காரணமாக சுருதிகளும் ஸ்வரங்களும் ஒன்றேயாகும். ஆயினும், அவைகளுக்கு சாஸ்திரங்களில் கூறப்படும் வேற்றுமை, 'அஹி'—'குண்டலி' இவை போன்றதாகும். எல்லா ச்ருதிகளும் அந்த அந்த ராகங்களில் ஸ்வரங்களாக அமைகின்றன. அவை ராகங்களுக்கு காரணமாகாதிருக்கும்போது அவற்றிற்கு 'சுருதி' என்ற பெயரே மிகவும் பொருத்தமானது.

அதாவது:—அஹி, குண்டலி இவ்விரண்டு சொற்களும் பாம்பு என்ற ஒரே பொருளை உணர்த்துகின்றன. ஆயினும் சர்ப்பம் சாதாரணமாக இருக்கும்போது, 'அஹி' என்ற சொல்லாலும், அதே சுருண்டு வளைந்து கிடக்கும்போது 'குண்டலி' என்ற சொல்லாலும் வழங்கப்படுகிறது. அதுபோன்று 'சுருதி'-'ஸ்வரம்' இவ்விரண்டு சொற்களும் ஒரே பொருளையுணர்த்துபவையாயினும், ராகங்களுக்குக் காரணமாகவிருக்கும்போது 'ஸ்வரங்கள்' என்றும் இராகங்களுக்குக் காரணமாகாமலிருக்கும்போது 'சுருதிகள்' என்றும் சாஸ்திரங்களில் வழங்கப்படுகின்றன.

केशाग्रव्यवधानेन बह्वयोऽपि श्रुतयः श्रिताः ।
वीणायां च तथा गात्रे सङ्गीतज्ञानिनां मते ॥

கேசாக்ரவ்யவதானேந

3 4
பஹ்வ்யோபி ச்ருதய: ச்ரிதா:।

3
வீணையாம் ச ததா காத்ரே

2 3
ஸங்கீத க்ஞானிணும் மதே॥
3

ஸங்கீத அறிஞர்களின் கருத்துக்கிணங்க வீணையிலும், காத்ர வீணையிலும் (உடலிலும்) கூந்தல் நுனியிழை யளவு வேற்றுமையுள்ள நுட்பமான எண்ணற்ற சுருதிகள் உள.

मध्ये पूर्वोत्तरावद्धवीणायां गात्र एव वा ।
षड्जपञ्चम भावेन श्रुतीर्द्वाविंशतिं जगुः ॥

மத்யே பூர்வோத்தராபத்த

4 3 3 4
வீணையாம் காத்ர ஏவ வா।

3
ஷட்ஜ பஞ்சமபாவேன

3 4
ச்ருதீர்த்வாவிம்சதிம் ஜகு:॥
3 3

22-சுருதிகள்

இருபக்கமும் மேருவும் மெட்டும் கொண்ட வீணையிலும், காத்ர வீணையிலும் ஷட்ஜ-பஞ்சமம் இவைகளின் நிலைமையால் சுருதிகள் 22 என்று அறிஞர் கூறுவா.

द्वाविंशति श्रुतीनां च व्यवहारप्रसिद्धये ।
तासां नामानि वक्ष्येऽहं नारदीयानुसारतः ॥

த்வாவிம்சதிச்ருதீனும் ச

3
வ்யவஹார ப்ரஸித்தயே

3 4
தாஸாம் நாமாநி வக்ஷ்யே ஹம்

நாரதீ யானுஸாரத:
3

இருபத்திரண்டு சுருதிகளின் விவரத்தை அறிவதற்கு நாரதரின் மதத்தைப் பின்பற்றி அவற்றின் பெயர்களைக் கூறுகிறேன்.

तीव्रा कुमुद्वती मन्दा छन्दोवत्यस्तु षड्जगाः ।
दयावती तु रेञ्जया रञ्जनी रक्तिकेत्यपू ॥

தீவ்ரா குமுத்வதீ மத்தா

3 3
சந்தோவத்யஸ்து ஷட்ஜகா:।

2 3 3
தயாவதீ து ரேர்ஞேயா

3
ரஞ்ஜநீ ரக்திகேத்யமூ॥

रौद्री क्रोधेति गान्धारे वज्रिकाऽथ प्रसारिणी ।
प्रीतिश्च मार्जनीत्येताः श्रुतयो मध्यमाश्रिताः ॥

ரௌத்ரீ க்ரோதேதி காந்தாரே

3 4 3 4
வஜ்ரிகா தப்ரஸாரிணீ।

2
ப்ரீதிஸ்ச மார்ஜநீத்யேதா:

ச்ருதயோ மத்யமாச்ரிதா:॥
4

क्षिती रक्ताच सन्दीपिन्यालापिन्यथ पञ्चमे ।
मदन्ती रोहिणी रम्येत्येतास्तिस्रस्तु दैवते ॥

க்ஷிதீ ரத்தா ச ஸந்தீபிந்யா

3
லாபிந்யத பஞ்சமே।

2
மதந்தீ ரோஹிணீ ரம்யேத்

3
யேதாஸ்திஸ்ரஸ்து தைவதே॥
4

उग्रा च क्षोभिणी चद्वे निषादे वसतः श्रुती ।
इत्युक्ताः सप्तसु प्रोक्ताः स्वरेषु श्रुतयो बुधैः ॥

உக்ரா ச க்ஷோபிணீ ச த்வே

3 2
நிஷாதே வஸதா: ச்ருதீ

3
இத்யுக்தா: ஸப்தஸு ப்ரோக்தா:

ஸ்வரேஷு ச்ருதயோ புதை:॥
3 4

ஸப்த ஸ்வரங்களின் சுருதிகள்

தீவ்ரா, குமுத்வதீ, மந்தா, சந்தோவதீ இந்நான்கு சுருதிகளும் ஷட்ஜத்தை (ஸ)ச் சேர்ந்தவை தயாவதீ, ரஞ்ஜநீ, ரக்திகா இம்மூன்று சுருதிகளும் ரிஷபத்தை (ரி)ச் சேர்ந்தவை.

ரௌத்ரீ க்ரோதா இவ்விரண்டும் காந்தாரத்தின் சுருதிகளாகும். வஜ்ரிகா, ப்ரஸாரிணீ ப்ரீதி, மார்ஜநீ இந்நான்கும் மத்யமத்தின் சுருதிகளாகும். க்ஷிதி, ரக்தா, ஸந்தீபிநீ, ஆலாபிநீ இந்நான்கும் பஞ்சமத்தைச் சேர்ந்தவை மதந்தீ ரோஹிணீ, ரம்யா இம்மூன்றும் தைவதத்தைச் சேர்ந்த சுருதிகளாகும் உக்ரா, க்ஷோபிணீ இவ்விரண்டு சுருதிகளும் நிஷாதத்தைச் சேர்ந்தவை. இவ்வாறு ஸப்தஸ்வரங்களிலும் 22 சுருதிகள் அறிஞர்களால் கூறப்பட்டுள்ளன.

குஞ்சி அழகு என்பர். கூந்தல் நேர்த்தி என்று சொல்லுவர் ஆண்மக்களின் தலைமயிரே குஞ்சி எனப்படும் பெண் பாலாரின் தலை மயிரே கூந்தலாம் குஞ்சியையும் கூந்தலையும் நம் தமிழ்ப் புலவரும் சரி. வடமொழி வித்துவான்களும் சரி வெகு பிரமாதமாக வர்ணித்துளர்.

குஞ்சியையும் கூந்தலையும் கருமையாக்கி வளர்ப்பதற்குரிய வாசனைத் தைலங்களும் மூலிகை வகைகளும் கொஞ்சமா, நஞ்சமா? அத் தைலத் தயாரிப்பும் வர்த்தகமும் முன்னம் தடபுடல் பட்டன இப்போதோ குஞ்சி வளர்ப்பும் கூந்தல் பெருக்கும் ஒரு பாரமாகிவிட்டன. "கிராப்" காலமல்லவா இது!

இனி, தலைமயிருக்கிருந்த மோகம் அவ்வாருக, மீசைக்கிருந்த யோகமும் மோகமும் எப்படி? முன்னுளிலோ நீண்ட மீசை, முறுக்கு மீசை, கெய்ஸா மீசை என்பன மிகப்பிரசித்தம். மீசைக்கும் தைலம் தடவி, அதனை முறுக்கிவிட்டு அதன் நுனியில் எலுமிச்சம் பழத்தைத் தொங்கவிட்டாலும், விறைப்பாக இருக்கும் நிலையும் மலையேறிவிட்டது

இப்போதோ நறுக்கு மீசைக்கே மௌஸ் ஜாஸ்தி நீண்ட மீசை என்பது காணுடகமாகிவிட்டது! நறுக்கு மீசையை ஹிட்லர் மீசை என்றும் அழைத்து வந்தனர். ஹிட்லர் மறையவே. அப்பெயரும் மறைந்துவிட்டது ஆனாலும் நறுக்கு மீசையே இப்போது நானிலத்தைப் பிடித்தாட்டுகிறது

குஞ்சி, கூந்தல். மீசை இவற்றினுக்கு ஒப்ப. ஒரு காலத்திலே தாடியும் ராஜரீகம் செய்யா நின்றது மேனுடுகளிலே முன்னம் தாடி மிகவும் மகிமையுடன் விளங்கிற்று. அப்பாலோ, அரசரில் சிலர் அத் தாடிமீது அருவருப்புக்கொள்ளவே தாடிமோகம் தணியலாயிற்று.

நமது தேசத்திலே யோகியரும் முனிவரரும், சாமியார்களும் தம்பிரான்களும் தாடி வளர்த்துத் தகவு எய்தினர். உலக விஷயத்தைத் துறந்து; உயா நிலையை எய்த விரும்பினேரே தாடி வளர்த்தல் வழக்கம் தெய்வங்களுக்கு முடிகொடுக்க விரும்புவோரும், தாடி மீசை வளர்த்தல் உண்டு

தாடி வளர்ப்பவனைக்கண்டால், ஏதேனும் விரதம் உண்டோ. ஜப தபங்களில் சிரத்தை பிறந்துவிட்டது போலும், என்று பிறர் கேட்பது ஸகஜம் தாடியும் மீசையும் ஒருவனது தோற்றத்தை ஏற்றமாக்கும் என்பர் சிலர் வயிற்றை எட்டுமளவு தாடி வளர்ப்போரும் இருந்தனர்

மீசையை நீளமாக வளர்ப்போர் அதனை சதா முறுக்கிக்கொண்டேயிருப்பர். முறுக்கு நேராக இருக்கிறதா என்று கண்ணுடியில் பார்த்தும் மகிழ்வா தாடி வளர்ப்போரோ அதனை எப்போதும் உருவிக் கொண்டேயிருப்பதைப் பார்க்கலாம்.

நீண்ட மீசைப் பிரியரையும், தாடிப் பிரியரையும் மற்றவரிடமிருந்து வேறுபடுத்தவே, மீசைப் பேர்வழி, தாடிக்காரன் என்று கூறப்படுவது வழக்கமாம். இயற்கையிலேயே மீசைக்கும் தாடிக்கும் ஒரு கறுப்பும் மினுமினுப்பும் உண்டு. அவற்றை மேன்மேலும் செயற்கையால் மேனிபடுத்துவதும் சர்வ சாதாரணம்.

குஞ்சியினும் கூந்தலிலும் பலவகையான மக்களை வெவ்வேறு வடிவாக்கிச் சூட்டுதல் உண்டு ஆனல் மீசைக்கோ தாடிக்கோ பூச்சூட்டுவது கிடையாது சூட்டவகையில்லை, இடமுமில்லை, தாடிக்குப் பூச்சூடலாமா என்று ஒரு பழமொழியுண்டு. இது நிற்க.

நமது தேசத்திலே இந்நாளில் முகம்மதியரிலே பலர் தாடி வளர்த்து வருகின்றனர் தாடிவளர்த்தல் மதக் கடமை. நபிகள் நாயகத்தின் கட்டளை என்பர் தாடி வைத்திருப்போரைக் கண்டால் சரி இவர் முகம்மதியர் என்று சாதாரணமாக நினைக்க நேரும். எனவே முகம்மதியருக்கு ஓர் அடையாளம் தாடியே. அதுவும் வைதிக முகமதியருக்கு மேனுட்டு நாகரிகம் வந்து நம்மையெல்லாம் குவிந்து கொண்டதே போல், முகம்மதியரிலும் சிலரைச் சூழ்ந்துள்ளது. ஆதலின். தாடி வளர்த்தலை முகம்மதியரில் சிலர் கைகழுவி வருகின்றனர். நறுக்கு தாடியே கொள்கின்றனர்.

மதச்சின்னமாக, அதாவது மத அடையாளமாக, தாடியிருந்த காலமொன்று உண்டு ஆங்கில ஆட்சி இங்கே ஏற்படுவதன் முன்னம், ஓர் ஆயிரம் வருஷ காலம் முகம்மதியரின் ஆட்சி நடைபெற்று வந்தது. அப்போது மதத்திற்கு உரிய வெளித்

தோற்றமான அடையாளத்தில் எல்லாரும் பெரும்பிடிப்புக்கொண்டிருந்தனர்.

முகம்மதியரிடே ஒரு சாரரான மொகலாயரின் காலத்தில் பிரசித்தி பெற்ற சக்கரவர்த்தி அக்பர் பாதுஷா. அக்பரின் சாயா படத்தைப்பாருங்கள். தாடி காணப்படாது. தாடி வளர்ப்பதில் அவனுக்கு நம்பிக்கை இல்லை. தாடியைக் கொண்டு, முகம்மதியரெனக் கொள்வதிலும் அவனுக்குப்பிரியம் கிடையாது.

ஆனால், முகம்மதிய மதப் பெரியார்கள் எல்லாரும் தாடி வளர்ப்பில் தணியா மோகமும், தெவிட்டா இன்பமும், குறையாத பற்றும் கொண்டுகுலவினர். தாடிகொள்ளாத முகம்மதியனை பிரஷ்டன் என்றும் கருதிவந்தனர். எனவே தாடி வளர்ப்பு அவ்வினத்தாருக்குள்ளே அடிபிடி கட்டாயமாயிற்று.

அது கண்டு, அக்பர் பாதுஷா அருவருப்பு மிகுந்தான்; தாடி வளர்ப்பைப் போக்கிவிட வேண்டும் என்றும் சங்கணம் பூண்டான். புதிய சமரஸ மதமொன்று காணவும் முயன்ருன். மனத் தூய்மையே முக்கியம், மதச் சின்னம் முக்கியமன்று என்றும் பேசி வந்தான்

சக்கரவர்த்தியானாலும் என்ன? மக்களைத் தட்டிக் கொட்டி, அவர்களின் மனத்தைப் பண்படுத்தினுல்தான். சீர்திருத்தம் பலனளிக்கும், அனர்த்தம் விளைக்காது என்பதை அவன் நன்குணர்ந்தவன் தாடி வளர்ப்பதைத் தன் மட்டில் அவன் நிறுத்திக் கொண்டான் அது கண்டு முகம்மதியருக்கு மனப்புண் உண்டாயிற்று.

அப்புண்ணை ஆற்ற வேண்டுமே. அவனைச் சுற்றிலும் பற்பல மதத்தின் மேதாவிகள் இருப்பர். பேரறிஞரும் இருப்பார். பொழுது போக்கினுக்காக அச்சபையிலே தாடிப் பேச்சு, தாடித் தர்க்கம் கிளம்பும். மேலும் மேலும் அதனைக் குத்திக் கிளப்பி வருவான் விகடகவி வீரபாலன்.

தாடி எதற்கு? அதனைச் சிரைத்துவிடுதலே மேல் என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு நாள் தர்க்கம் தொடங்கியது. முகம்மதியப் பெரியார் பலரும் அது கேட்டு மனங்கொதித்தனர் மண்டி எழுந்தனர்; காரசாரமர்கப் பேசக் கிளம்பினர் திருக்குர் ஆன் என்னும் வேதநூலிலிருந்து மேற்கோள் எடுத்துக் காட்டினர். மூர்க்கமாகவும் பேசலாயினர். உதாரணமாக.—

"தாடி வளர்த்தல் இஸ்லாம் மதச் சின்னம் நபிகள் நாயகம் அதனை வலியுறுத்தியிருக்கிருர். அவர் வாக்கே தேவவாக்கு அவ்வாக்கினை மீறி நடத்தல் ஆகாது. மீறி நடத்தல் ஆகாது மீறி நடந்தால் மாபாவம் நேரும் அப்பாவத்தினுக்குப் பிராயச் சித்தம் கிடையாது ஆதலின், தாடி வளர்த்தே யாக வேண்டும்."

அவ்விதம் முகம்மதியர் பேசப் பல கலையும் கற்றறிந்த சாரார் பேசியதின் சாரம் இது:- அரேபியா தேச வழக்கம் தாடி வளர்த்தல் அது மிகவும் உஷ்ணப் பிரதேசம். கோடையிலே அங்கு அவை காற்று வீசும். மணற்காற்றும் பிரமாதமாகத் தோன்றும் அப்போது சுடு மணலை வாரி வந்து நம் முகத்திலும் மார்பிலும் கொட்டும். கொட்டவே தொண்டையும் மார்பும் கோளாறு கொள்ளும்.

"தவிர, மாரி காலத்திலே அங்கே குளிர் மிக மிக அதிகமாயிருக்கும். அக்குளிரோ தாங்க முடியாது அக்குளிரினுல், தொண்டையிலும் மார்பிலும் உள்ள கிரந்திகள் குந்தகம் அடையும். எனவே இயற்கையின் விபரீதத்தை மதித்து உடலின் நலத்தைத் தழுவி, தாடி வளாத்தல் நலமென்று அந்த அரேபியாவிலே கொள்ளப்பட்டது.

"அரேபியரின் நன்மையை உத்தேசித்தே நபிகள் நாயகம் தாடிவளர்க்கச் சொன்னுர் இந்தியாவிலே அவர் மதம் பரவிற்று. ஆனது பற்றி அரேபியா தேசத்திற்கு உகந்த ஆசாரம் இந்தியாவிலும் கையாளப்படவேண்டும் என்பதில்லை. காலதேச வர்த்தமானத்துக்கு ஏற்றவாறு மாறுதல் ஏற்படுதல் வேண்டும்."

ஒரு சாரார் அவ்விதம் பேசவே கிறிஸ்தவக் கத்தோலிக் பாதிரிமாரும்—இவர்களும் தாடி வளாப்போர் ஆவர் தாடி வளர்ப்பை ஆதரித்து அதனைக் கைவிட முடியாதென்று பிரமாதமாகப் பேசி வந்தனர் வாதமும் தர்க்கமும் ஓய்வதாக இல்லை அக்பரின் கருத்து கைகூடுவதாகவும் தோன்றவில்லை.

பாாத்தான் விகட கவி வீரபாலன் பொறுக்கவில்லை அவனுக்கு அவன் பேசியது:—"பாதுஷாவே! தாடி வளர்ப்பில் எவ்வளவோ சங்கடம் உண்டு தாடியைத் தினம் உருவிக் கொடுக்க வேண்டும் இல்லையேல் சிக்கு ஏற்பட்டுவிடும் மிக நீளமாக வளாந்துவிட்டால் நுனியிலே முடிச்சுப் போட வேண்டும். வாய்ப் பக்கமுமா குடுமி கொள்வது?

"இனி தாடி நரைத்து விட்டால். அதற்குச் சாயம் பூசவேண்டியிருக்கிறது எத்தனை விதச் சாயம் அதற்கு? பழுப்பு சிவப்பு, கறுப்பு என்று எத்தனையோ விதம். தாடியும் மீசையும் நரைத்துப் போனுலும் ஆசை என்பது நரைப்பதில்லை மீசை நரைத்துப்போச்சே கிழவா. ஆசை நரைக்கவில்லையே என்று ஏசுகிருர்கள் இது நிற்க.

"இந்துக்களும் முகம்மதியரும் சமரஸமாக வாழப் புதிய மதங் காண விரும்புகிறீகள். அப்புதிய சமயத்துக்கும் மனத் தூய்மையே பிரதானம்! தாடியும் மீசையும் அன்று! இதனை உணராமல் ஏதோதோ பேசுகிருர்கள் பலரும் பல சொல்லி என்ன? அடியேனுக்கு உத்தரவு கொடுங்கள்

"இப்போதோ மயிர் வினைஞனை வரவழைத்து, எல்லாருடைய தாடியையும் சிரைத்துவிடுகிறேன் தாடி இருப்பதனுல் அல்லவா, பற்றும் பிடிவாதமும் தாண்டவம் ஆடுகின்றன. தாடி போய்விட்டால் பேச்சு, மூச்சு இராது"

இவ்விதம் வீரபாலன் பேசியதும். சபையோர் திடுக்கிட்டனர் கட்டாயமாகத் தாடியைச் சிரைத்து விடுவரோ என்று பயப்படாதார் கிடையாது பின்பு வாதமும் தர்க்கமும் அடங்கின.

தாடியைச் சிரைத்துவிடுதல் மேல் என்ருன் அக்பர் அவன் வார்த்தையை மதித்துச் சிலர் அவ்வாறே செய்தனர் செய்தோருக்குச்சிறப்புக் கிட்டியது செய்யாதாருக்குச் சிறுமை கிட்டவில்லை நாளடைவிலே பலரும் தாடியைச் சிரைத்துக் கொள்ள முற்பட்டனர்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா!
உலகம் பழித்தது ஒழித்துவிடின்.

என்பது பொய்யாமொழி.

—❀—

ஜாதகம்! ✯ ஆருடம்!!

இன்றே எழுதுங்கள் பிறந்த ஜில்லா. தேதி. நேரம் அல்லது ஜாதக நகல் தேவை ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்

கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர் காலகேள்விகள் ரூ.2. 3-க்குமேல் கேள்வி 1-க்கு அணா 8 ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ 35 ஜாதகம் கணிக்க ரூபா 3. ஒரு தசாவிற்கு புக்தி வாரியாக எழுத ரூ 12

குறிப்பு:-வெளிநாடுக்கு இரட்டிப்புக் கட்டணம்

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்—தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது எனக்கு திடீரென்று ரூ 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ 35,000 கிடைத்தது

✯

மானேஜர்,
வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,
தெப்பக்குளம், P. O. (தென் இந்தியா)

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்துக்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும் உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்களுபயோகிக்கும்கூந்தல் தைலத்தைப் பொறுத்தே

காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்ட்.)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது பொடுவன்களைப்போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும் ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர் இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள் எல்லா ஸ்டோர்களிலும்விற்கப்படுவது எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட)

இணையற்ற வாசனை நீடித்த நறுமணம் தபால்சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் பெறுங்கள்.

Solo Agent.—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285. Jamma Musjid, P. O. Box 2085. Bombay 2.





சென்ற வாரம் சென்னை எம் எஸ் எம் ரெயில்வே தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் ரயில்வே மந்திரி ஸ்ரீ என் கோபாலஸ்வாமி ஐயங்கார் பேசினர், அவரது பக்கத்தில் வீற்றிருப்பவா அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனக் காரியதரிசி ஸ்ரீ எஸ். குருஸ்வாமி.

✯

(கீழ் படம்)

ஆந்திரமஹிள சபையினருக்குச் சொந்தமான அடையாறில் ஸ்திரிகள் குழந்தைகளுக்கான நர்ஸிங்ஹோம் இலவச வைத்ய சாலையின் அஸ்திவாரக் கல்லை சென்ற வாரம் இந்திய சுகாதார மந்திரி ஸ்ரீமதி ராஜகுமாரி அமிர்தகௌரி நாட்டினர்

6

எனக்கு ஓரே பயமாகப் போய்விட்டது. திருடனே என்னமோவென்று கைகளைத் திமிறிக்கொண்டு ஓடப்போனேன். வந்த 'ஆசாமி' என்னை ஓடவிடாமல் பிடித்துக்கொண்டு 'எதற்காக இப்படி ஓடுகிறுய்? இப்பொழுதுகூட என்னுடன் பேசமாட்டாயா?' என்றுர்

குரலிலிருந்து வந்தவர் யார் என்பது தெரிந்துவிட்டது. எனக்கு ஓரே வெட்கமாய்ப் போய்விட்டது

'என்ன வேடிக்கை இது! என் வாயைமாத்திரம் கையால் அழுத்தாதிருந்தால் நிச்சயம் நான் திருடன் என்றுதான் கூச்சல் போட்டிருப்பேன். கலியாணத்திற்கு வந்திருக்கும் அத்தனைபேரும் தடி தாம்புகளுடன் ஓடிவந்திருப்பார்கள் வரும்பொழுதே குரல் கொடுக்கக் கூடாதோ?' என்றேன்.

'ஆமாம் நீ ஏதாவது சண்டையைக் கிளப்பிவிட்டுக் கொண்டு வேடிக்கை பார்க்கவேண்டுமென்றே தீர்மானித்துவிட்டாயா?' என்றுர் அவர் என் கணவாதான்

சரி; ஏதோ பெரிய பூகம்பத்துக்குத்தான் பூர்வ பீடிகை என்று முடிவு செய்துவிட்டேன்.

'ஏன் இப்படி அனுவசியமாகக் கோபித்துக்கொள்ளுகிறீர்கள்? நான் என்ன செய்துவிட்டேன் இப்பொழுது?' என்றேன்

பதில் சொல்லாமலே வாயை மூடிக்கொண்டு போய்க்கொண்டிருந்தால் அவர் மனதிலுள்ள ஸம்சயம் எப்பொழுதுதான் தெளிகிறது என்று எண்ணிக்கொண்டு அவருடைய கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்லிவிடுவதென்று தீர்மானம் செய்துகொண்டு விட்டேன். எனக்குமாத்திரம் உள்ளுக்குள் திகில்தான். யாராவது வந்துவிடப்போகிறுர்களே. ஏதாவது பரிகாசம் செய்யப்போகிறுர்களே என்ற வெட்கம்தான். பரிகாசத்தோடு மாத்திரமில்லை இதை நாத்தனுர்காரி பாாத்துவிடுகிறுள் என்று வைத்துக்கொள்வோம் அவள் கலியாணத்துக்குக் காரியம் செய்யவா வந்திருக்கிறுள்? அகமுடையானு ன் தனித்துத் தனித்துப் பேசுவதற்குத்தானே அவளுக்குப் பொழுது சரியாக இருக்கிறது உலகத்திலே சிறிசுகள் என்றுல் இதெல்லாம் உள்ளதுதான் இருந்தாலும் இந்தமாதிரி பார்த்ததே இல்லை' என்று நறுக்கென்று நாலுபேர் மத்தியில் சொல்லுவாள். அதற்குப் பார்த்தால் 'இதுவோ' (என் கணவரைத்தான் சொல்லுகிறேன்) ஸர்வ அசடாக இருக்கிறது என்னத்தைச் செய்வது! ஆகவே வந்தது வரட்டுமென்று அவர் கேட்பதற்கெல்லாம் தகுந்த பதில் சொல்லிவிடுவதென்று முடிவு கட்டிவிட்டேன்.

'என் தமக்கை சொல்லுகிறுள், காதுகொண்டு கேட்க முடியவில்லை' என்றுர்.

'என்ன சொல்லுகிறுர்?' என்றேன்.

'நான் வீட்டில் மனுஷ்ய ஸஹாயம் இல்லை நாலு நாள் முன்னதாகவே வந்துவிடும்படி எழுதியிருந்தேனே அந்தக் கடிதம் வந்ததோலியோ?'

'வந்தது'

''அதன்படி ஏன் வரவில்லை? என் வார்த்தை அவ்வளவு அலக்ஷியமாகத்தானே போய்விட்டது உனக்கு?'

உங்கள் வார்த்தையை அல்க்ஷியம் செய்துவிட்டு நான் என்ன செய்யப்போகிறேன்.'

'அடடே! அப்புறம்?'

'பின் எதற்காக இப்படி யெல்லாம் சொல்லுகிறீர்கள்?

'நானு சொல்லுகிறேன்? நாலு நாளாய் கனகா சொல்லுகிறுள் காதுகொண்டு கேட்கமுடியவில்லை. எல்லாரும் வந்தாச்சு உன் அகமுடையாள்தான் வரவில்லை கடிதம் போட்டுவிட்டால் மாத்திரம் போதாது. ஒரு வேளை போய் வெற்றிலைபாக்கு வைத்து அழைக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறுளோ என்னமோ? நான் கலியாணத்தின் பொழுதே பார்த்தேன் அவளுக்கு நெட்டும் கர்வமும் கொஞ்சம் அதிகம்தான். நான் சொல்லுகிறேன் வேண்டுமானுல் பார்த்துக்கொண்டிருங்கள் முகூர்த்தத்துக்கு முதல்நாள் சாயங்காலமோ அல்லது முகூர்த்தத்தன்று காலையிலோ சம்பந்தியம்மா மாதிரி ஜோராக வந்து இறங்கப்போகிறுள் என்று சொல்லிக்கொண்டிருந்தாள் அவள் சொன்ன மாதிரியே இன்று வந்து சோந்தாயா நீ! உடனே என்னைக் கூப்பிட்டாள். பார்த்துக்கொள்ளடா அப்பா. பாாத்துக்கொள் நான் சொன்னுல் விளையாட்டாக இருந்தது உங்களுக்கு. இப்போழுதாவது தெரிந்ததோலியோ அவளுடைய நெட்டும் கர்வமும், என்றுள். எனக்கு அப்படியே நாக்கை அறுத்துக்கொண்டு சாகலாமா வென்றிருந்தது? என்றுர் என் கணவர்.'

இருட்டாக இருந்ததால் அப்பொழுது அவருடைய முகபாவத்தைப் பார்க்கமுடியவில்லை. விளக்கு இருந்திருந்தால் தெரிந்திருக்கும். அவர் சொன்ன மாதிரியில் அவர் கண்களில் நீர்தத்தளித்துக்கொண்டிருந்திருக்கும் போலிருந்தது

'இதற்கெல்லாமே செத்துவிடுவதானுல் அப்புறம் உலகத்தில் மனிதர்கள் எப்படித்தான் ஜீவித்திருப்பது? என்றேன்.

'உனக்கு இது அலக்ஷ்யமாக இருக்கலாம். எனக்கு இது பிரமாதமானதுதான்' என்றுர்.

'வாஸ்தவந்தான். உங்கள் தமக்கை கூடத்தான் நான் வந்ததும் வராததுமாக என்னைக் கேட்டார். ஆமாம்.



அவர்கள் கொண்டுவிட்டு நான் வருவதா? அல்லது நானே தனிமையில் வந்துவிடுவதா?

'அவர்களை ஒருவாரத்துக்கு முன்னதாகவே கொண்டு விடச்சொல்லுவது'

சொல்லாமலா இருந்திருப்பேன்? அவர்களுக்கும் அந்த அக்கரை இல்லாமலா இருந்திருக்கும்? சொல்லிவைத்தமாதிரி அப்பொழுதுதான் அப்பாவுக்கு அவசரமான வேலை ஒன்று வந்துவிட்டது. அதனால் அவர் வர சரிப்படவில்லை. வேறு யாறும் மனுஷயாள் இல்லை. நான் எப்படித்தான் வருவது?' என்றேன்.

இதுமாத்திரம் கொஞ்சம் நிஜக்கலப்பில்லாத பதில்தான். உண்மை என்னவென்றால். ஒரு வாரத்துக்கு முன்னதாக ஒருதரம் என்னைக் கொண்டு விட்டு விட்டு. மறுபடியும் கலியாணத்துக்கு ஒருதரம் போய் வரவேண்டும். இரண்டு பிரயாணமாவதுடன் பணச் செலவு வேறு கையில் காலணா இல்லை கடன் கொடுப்பாரைக் காணோம் ஆகையால் ஒரே தரமாகப் போய் வந்துவிடுவதுதான் யுக்தம். என்று அப்பா இந்தமாதிரி செய்தார். இதை எப்படி அவருடன் சொல்லுவது? இதைச் சொன்னால் 'உங்களுக்குப் பணம்தான் பெரிது ஆபத்து, அவசரம் ஒன்றும் கிடையாது என்னைக் கேட்டால் நான் கொடுக்கிறேனே' என்று பதில் சொல்லப் போகிறார். எதற்காக அந்த வம்பெல்லாம் என்று என்னமோ அந்த சமயத்துக்கு அந்தமாதிரி சொல்ல வேண்டும்போல் தோன்றியது சொன்னேன்.

'இதை எனக்குத் தெரியப்படுத்தி இருந்திருந்தால் நானாவது வந்து அழைத்துக்கொண்டு வந்திருப்பேனே லியோ?' என்றார்.

'நீங்கள்தான் ஒரு வாரத்துக்கு முன்னதாகவே இங்கு வரப்போவதாக எழுதியிருந்தீர்களே?'

'இந்த விலாசத்துக்கு எழுதுகிறது'

'நன்றாக இருக்கிறது நீங்கள் வந்திருந்தால்போயிற்று. ஏதாவது அவசர லேலையாக சென்னையிலேயே நின்றிருந்து. நான் எழுதிய கடிதத்தை இங்கு உங்கள் தமக்கை. யாராவது பிரித்துப் பார்த்து. பார்த்தாயோ லியோ ரகு. வேட்டகத்துக்குப் போடும் தோப்புக் கரணத்தை? துரைசாணியை வந்து அழைத்துக்கொண்டு போகவேண்டுமாம். அகமுடையானுக்கு உத்தரவு அனுப்பியிருக்கிறாள்' என்று எதையாவது சொல்ல, எதற்கு வீண் கலாட்டாவெல்லாம் என்று எழுதாமல் இருந்துவிட்டேன் என்றேன்.

உண்மையிலேயே, இவ்வளவு தைரியமாய் பதில் சொல்ல வரும் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. இங்கு வந்தவுடனே இங்குள்ள சூழ்நிலையைப் பார்த்த பிறகு 'இனி பேசாமடைந்தையாய் இருந்தால் விபரீதத்தில் போய் முடிந்துவிடும்' என்று கேட்டதற்கெல்லாம் தேங்காய் உடைத்தமாதிரி. அவர் மனதிலுள்ள சந்தேகத்தையெல்லாம் போக்கும் ரீதியில் 'பளிச், பளிச்' சென்று பதில் சொல்லிக்கொண்டுவந்தேன் உண்மையிலேயே என்னுடைய பதில்களைக் கேட்டுவிட்டு அவர் கொஞ்சம் அசந்துதான் போய்விட்டார். எப்படித் தெரிந்ததென்றால் மேற்கொண்டுவந்த கேள்விகளில் முதலில் இருந்த வேகத்தையும், கோபத்தையும் காணோம். அதற்குப் பதிலாகக் கொஞ்சம் நயமும் ஆதரவும்கூடக் காணப்பட்டது. அதில் சரி! போனது போகட்டும். இனிமேலாவது புகார் ஒன்றும் வராமல் நடந்துகொள். என்றார்.

எப்படிச் சொல்லுகிறீர்களோ அப்படி நடந்து கொள்ளுகிறேன் எனக்கென்ன, என்றேன்.

இதற்குள் மாமா அந்தப் பக்கமாக வந்தவர் நாங்கள் பேசிய குரலைக் கேட்டுவிட்டு, யாரடா அங்கே? ரகு வாடா? இங்கேயா இருக்கிறாய்? இவ்வளவு நாழியாக ஊர் முழுவதும் தேடியாகிவிட்டது! இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? என்று நாங்கள் இருந்த இடத்துக்கு வந்தார்.

'ஒன்றுமில்லை பந்தலில் பெட்ரோமாக்ஸ் லைட்டைக் கட்டுவதற்குக் கயிறு வேண்டுமென்று கேட்டார்கள் இங்கே ஏதாவது இருக்கிறதாவென்று பார்க்க வந்தேன்' என்று சொல்லிக்கொண்டே என் கணவர் அறையிலிருந்து வெளியே வந்தார்

'அங்கே இன்னும் யார் இருக்கிறது? என்று மாமா உள்ளே எட்டிப் பார்த்தார்.

நான் ஒரு மூலையாக ஒதுங்கி நின்றேன். யார் என்பதைத் தெரிந்துகொண்டு விட்டார் என்றுதான் தோன்றியது உடனே அவர் வெளியே வந்து, 'அரை மணியாக உன் அப்பா உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறா. போ சீக்கிரம்' என்றார் மாமா.

உடனே என் கணவர் அவ்விடத்தை விட்டகன்றார் மாமா அவர் பின்னாலேயே சென்றார்.

எனக்கு ஒரே வெட்கமாய்ப் போய்விட்டது மளமளவென்று புதுப் புடவையை உடுத்திக் கொண்டு கூட்டத்துக்கு வந்து சேர்ந்தேன்.

'ஜான வாஸ்த்துக்குப் போக எல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.' எங்கேயடி போய்விட்டாய் இவ்வளவு நேரம்?' என்றார் நாத்தனார்.

'ரகுவைக்கூடக் காணோம் ரொம்ப நாழியாக சித்தப்பா தேடிக்கொண்டிருக்கிறார்' என்று என்னுடைய பெரிய மாமனார் பெண் சொல்லிவிட்டு ஒரு விஷமச் சிரிப்புச் சிரித்தாள்.

அதைக் கேட்டுவிட்டு அங்கிருந்தவர்கள் எல்லோரும் இடி இடி என்று ஒரு இரண்டு நிமிஷகாலம் சிரித்தார்கள்

ரகு எங்கேயும் போய்விடவில்லை ஸ்நான அறையில் கயிறுதான் தேடிக்கொண்டிருந்தான்' என்றார் இதைக் கேட்டுக் கொண்டிருந்த மாமா.

மறுபடியும் கொல்லென்று ஓர் சிரிப்பு.

எனக்கு அவமானமாய்ப் போய்விட்டது. அது கிடக்கட்டும். கலியாணம் என்றாலே எல்லோருக்கும் ஒரு குஷி கிளம்பிவிடுகிறது குமரர்கள் முதற்கொண்டு கிழவர்கள் வரையில் எல்லோருக்கும் அவர்களை அறியாமலே ஒரு சந்தோஷம், உற்சாகம், குதூகலம். விகாரம் தட்டும் அளவுக்கு காதல் சம்பந்தமான வார்த்தைகள். விளையாட்டு வேடிக்கை 'இங்கே போனால் குசு குசு. அங்கே போனால் குசு குசு என்கிற மாதிரி இளந் தம்பதிகள் மூலை முடுக்குகளில் மறைவில் ரகசியமாகக்கூடிக் கூடிப் பேசுவதும் யாராவது வந்துவிட்டால், அடுப்பங்கரையில் ஒருவரும் இல்லாத சமயமாகப் பதார்த்தங்களை ருசி பார்க்கச் சென்ற பூனை காலடியோசையைக்கேட்டுக் குடு குடுவென்று வெளியே ஓடிவிடுகிறமாதிரி மறைவில்கூடி பேசிக்கொண்டிருக்கும் இளந்தம்பதிகள் அவர்கள் இருக்கும் பக்கமாக யாராவது வரும் காலடியோசை கேட்டால். மூலைக்கொருவராக ஓடிக்கொண்டிருப்பதும், அந்த ஐந்து தினங்களும் (இப்பொழுதுதான் ஒரே வேளை. அப்பொழுதெல்லாம் ஐந்து நாள் கலியாணம். கலியாணத்துக்கு இரண்டு நாள் முன்னதாகவே பந்துக்கள் வந்துவிடுவார்கள். கலியாணம் கழித்து இரண்டு மூன்று நாட்கள்

இருந்துவிட்டுத்தான் போவார்கள்) ஒரே குஷிதான் அதிலும் ஸ்திரீகள் பாடுதான் கன குஷி அவர்கள் இட்டதுதான் சட்டம் அப்பொழுது; மாப்பிள்ளைப் பேர் வழியை அவர்கள் ஆட்டிவைக்கிற ஆட்டம், படுத்திவைக்கிறபாடு, அந்தப் பிள்ளைபாடு உண்டு இல்லை என்றாகிவிடும். கலியாணம் கார்த்திகளில் பணத்தை எதற்காக வீணிற்குச் செலவழிக்க வேண்டும் என்று இந்தக் காலத்துச் 'சீர்திருத்த வாதிகள்' சிலர் சொல்லுகிறார்களே தவிர, உழைத்து உழைத்து ஆயாசமடைந்து அலுத்துப்போயிருக்கும் மனதுக்கு இந்தமாதிரியான சந்தர்ப்பங்கள் ஒரு சிறந்த டானிக் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

இந்தக் கலியாண சந்தர்ப்பத்தை யார் யார் எப்படி உபயோகப்படுத்திக்கொண்டார்களோ எனக்குத் தெரியாது என்னைப்பற்றியவரையில் எனக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்றுதான் சொல்லவேண்டும் என் கணவருக்கு என்மீதிருந்த சந்தேகமெல்லாம் நீங்கி என் மீது அவருக்கு அசைக்கமுடியாத ஒரு பிரீதி ஏற்படுவதற்கு இது ஒரு முக்கிய காரணமாய் இருந்தது ஸ்நான அறையில் எங்களுக்கு ஏற்பட்ட முதல் சந்திப்பிலிருந்து என் கணவர் நான் தனிமையில் இருந்த சந்தர்ப்பத்தை உபயோகப்படுத்திக்கொள்ளத் தவறியதேயில்லை அவர் எங்கேயிருந்துகொண்டு எப்படித்தான் பார்த்துக்கொண்

டிருப்பாரோ ஒருவரும் இல்லாத சமயமாகப் பார்த்து நான் இருக்குமிடத்துக்கு வந்துவிடுவார், காரணமே வேண்டியதில்லை ஏதாவது 'அசட்டுப் பிசட்டென்று' பேசிக்கொண்டிருப்பார். அவருக்கு என்மீது உள்ள பிரீதியை தெரிந்துகொள்வதற்கு இந்தமாதிரியான சந்தர்ப்பங்கள் ரொம்பவும் உதவியாக இருந்தன.

'நான் உன் மீது கோபமாயிருப்பதற்குக் காரணம் இப்பொழுதாவது தெரிந்ததா, இல்லையா?' என்பார் ஒரு சமயம்.

நான் ஒன்றுமே தெரியாததுபோல் மௌனமாய் இருப்பேன்.

கனகா இருக்கிறுளோ லியோ! அவள் சுத்த அசடு யார் யாரிடம் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதே அவளுக்குத் தெரியாது ஏதாவது புகார்செய்துகொண்டே இருப்பாள். அதை மீறி ஏதாவது சொன்னுல், 'சரிதான். அதற்குள்ளாகவே பெண்டாட்டி தாஸனுகிவிட்டாயடா? அப்படியானுல்நான் உன்னுடன் பேச வரவில்லையாயப்பா' என்று 'எக்கச்செக்கமாக' ஏதாவது சொல்ல ஆரம்பித்துவிடுகிறுள் கொஞ்ச நாளைக்கு அவர்கள் இஷ்டப்படிதான் நடந்துகொண்டு விடுவோமே அப்புறம் இருக்கவே இருக்கிறது' என்றுதான் நான் இந்த வேஷம் போடுகிறேன். ஆகையால் உன் மீது எனக்கு எள்ளளவுகூடக் கோபம் கிடையாது என்பதை உறுதியாய் நம்பு' என்று, பாவம், தன் ஹிருதயத்தைத்திறந்து காட்டமுடியாத குறையாகப் பேசுவார். அந்த மாதிரியான சமயங்களில் எனக்கே ஐயோபாவம் என்றிருக்கும்.

அடிக்கடி பட்டு சொல்லுவாள், உலகில் இந்தமாதிரியான 'அம்மா, அக்கா செல்லங்கள் ரொம்ப இருக்கின்றனவென்றும் அதுகளுக்குப் பெண்டாட்டிகள்மீது அசாத்தி ஆசையிருக்குமென்றும், ஆனுல் அம்மா, அக்கா தொந்தரவினுல் அதைப் பகிரங்கமாகக் காட்டிக்கொள்ள சந்தர்ப்பமே இல்லாமல் போய்விடுமென்றும் சிலதுகள் அவர்களைத் திருப்தி செய்து வைப்பதற்காகப் பெண்டாட்டிகளை அவர்களெதிரில் விறகு கட்டையால்கூட அடிக்குங்களென்றும், ஆனுல் உடனே மறைவில்போய் ஆறுதல் மொழிகள்கூறி அடிபட்ட இடங்களில் தடவிக்கொடுக்குங்களென்றும் சொல்லுவாள் அந்தமாதிரியான ரகத்தைச் சேர்ந்தது போலிருக்கிறது 'இது' என்று எண்ணிக்கொண்டேன்.

இன்னெரு சமயம் வருவார்: 'எதற்காக இப்படி மாடு மாதிரி உழைக்கிருய்? இந்த உடம்புஎதற்கு ஆகும்?' என்பார.

'இப்படிச் செய்தும் உங்கள் தமக்கையின் முணுமுணுப்பு நிற்கிற வழியைக் காணுமே' என்று மெதுவாக வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுகிற மாதிரி பொடி வைத்துப் பேசினேன்.

'அது அப்படித்தான் முணு முணுத்துக் கொண்டிருக்கும். நோகாமல் அடிக்கிறேன் ஓயாமல் அழு' என்கிற கதை தெரியாதோ? இதுகளிடமெல்லாம் அப்படித்தான் நடந்துகொள்ளவேண்டும். உண்மைக்குத்தான் காலமில்லையே இது!' என்பார்.

பரவாயில்லை. பிழைத்த மாதிரிதான் என்று அப்பொழுதே தீர்மானித்து விட்டேன்.

அவர் சொன்னதற்கு அவர் மனதை அறிய நான் அந்த மாதிரி பதில் சொன்னேனேயொழிய, நான் கலியாணத்துக்குப் புறப்பட்டுவரும்போது அம்மா என்னி

டம் கிளிப்பிள்ளைக்குச் சொல்கிற மாதிரி சொல்லியனுப்பினுள் ''வேலைக்குக் கொஞ்சமும் சோம்பாதே இட்ட வேலையைப் பணிக்காக, நாலு பேர் புகழ்ந்து பேசும்படியாகச் செய். புக்ககத்து மனுஷ்யாளிடம் பயபக்தியுடனும் மரியாதையுடனும் நடந்துகொள்ளு அவர்களுக்கு இப்பொழுது முதன் முதலில் உன்னைப்பற்றி எந்த மாதிரியான அபிப்பிராயம் ஏற்படுகிறதோ அது தான் கடைசி வரையில் நிற்கும். நாலு பேர் வந்திருக்கிற இடத்தில் நல்லபேர் எடுப்பது என்பது சாதாரணமான விஷயமில்லை. கொஞ்சம் அசட்டுத்தனமாக நடந்து கொண்டால்கூட ஒரு நிமிஷத்தில் தூற்றிவிட்டு விடுவாகள் அத்துடன் நாம் செய்திருப்பது புது சம்பந்தம். ஜாக்கிரதை!' என்று சொல்லியனுப்பினுள். ஆகையால் 'நாளை அல்லது மறுதினம்' என்னைப்பற்றி ஏதாவது அவதூருன வார்த்தைகள் கிளம்பி அதனுல் அவள் மனது நோகக்கூடாது என்று நான் மிகுந்த ஜாக்கிரதையுடனும் பொறுப்புடனும் எனக்கு இட்ட வேலைகளைச் செய்துவந்தேன். மீதிபேர்கள் பாட்டிலும் கும்மாளத்திலும் ஈடுபட்டிருக்கும்போது நான் மாத்திரம் மாடு மாதிரி உழைப்பது அவருக்குத்தாளவில்லை பாவம்!

என்னை அவர் சொன்னுரே தவிர அவர் மாத்திரம் கொஞ்சமாகவா உழைத்தார்! எல்லோரும் நன்ருகச் சாப்பிட்டு விட்டு சீட்டு ஆடிக்கொண்டிருந்தார்கள். வேளா வேளையில் வயிற்றுக்குக் கூடச் சரியாகச் சாப்பிடாமல் கலியாணத்தில் முக்கால் வாசி வேலையை இவர் தான் செய்தார் காப்பியும் டிபனும், பக்ஷணமும் கொள்ளையோ கொள்ளையோவென்று எல்லோரும் சாப்பிட்டார்கள். இவர் மாத்திரம் எங்காவது போய்விடுவிடுவார். எடுத்து வைத்துத் தனியாகக் கூப்பிட்டுக் கொடுக்கலாமாவென்றுகூட மனது அடித்துக்கொள்ளும் 'சே! அல்பம் மாதிரி இதென்ன இது நாம் நல்லதைச் செய்யப் போய் யாராவது எதையாவது சொல்வார்கள் நமக்கேன் அந்த வீண் வம்பெல்லாம்' என்று பேசாமல் இருந்துவிடுவேன் ஆனுல் மனது மாத்திரம் அடித்துக்கொள்ளும். கிடக்கட்டும் இன்றைக்கில்லாவிட்டாலும் பிழைத்திருந்தால் ஒருநாளைக்கு தனிக்குடித்தனம் செய்யத்தான் போகிறோம் அப்பொழுது இஷ்டமானபடி இதற்கெல்லாம் வட்டியும் முதலுமாகச் சோத்துச் செய்துகொடுத்தால் போகிறது' என்று மனதைத் தேற்றிக்கொள்வேன் அப்பொழுது நம்மை யாரும் கேட்கிறவாகள் கிடையாதல்லவா!

ஜானுவாஸத்திலிருந்து சேஷஹோமம் முடிகிறவரை ஐந்து தினங்களும் கலியாணம் ஒருவித தகராறுமில்லாமல் ரொம்பவும் விமரிசையாக நடைபெற்றது. சம்பந்திகள் ரொம்பவும் நல்லவர்கள் நல்லவர்களோடுகூடப் பெருந்தன்மையும் வாய்ந்தவாகளாக இருந்தார்கள். அதனுல் ஏதாவது குறைகள் இருந்தால்கூடப் பொருள்படுத்தாமல் ரொம்பவும் ஸகஜமாக நடந்துகொண்டார்கள்.

வஸந்தாவின் இரண்டாவது நாத்தனுரினுடைய அகமுடையானும் ஒன்று, அதுமாத்திரம் சிறு திருட்டு வேலை ஒன்று செய்யாதிருந்தால் இந்தமாதிரியான கலியாணமே இதுவரை நடந்திராது என்று நிச்சயமாகச் சொல்லிவிடலாம். இதற்கெல்லாம் திருஷ்டி பரிகாரம் மாதிரி திருட்டு வேலை ஒன்றைச் செய்துவிட்டு அங்கு வந்திருந்தவர்கள் பேரிலெல்லாம் அனுவசியமான சந்தேகத்தையும் மனக் குழப்பத்தையும் உண்டாகும்படி செய்துவிட்டது யாரும் நேரில் பார்க்கவில்லை ஆனுல் அதுதான் செய்திருக்குமென்று சொன்னுர்கள் அதிக படிப்பில்லை ஏதோ ஒரு கம்பெனியில் பில் கலெக்டராக இருந்ததாம் பணத்தை மோசடி செய்துவிட்டு உத்யோகம் போய்விட்டதாம். கொஞ்ச நாளாக வேலையில்லாமல் அலைந்துகொண்டிருந்ததாம். பெண்டாட்டியின் கழுத்தில் காதில்' இருந்தவைகளை விற்றுக் கொஞ்ச நாள் காலக்ஷேபம்' செய்ததாம் அதற்குமேல் ஒன்றும் சாத்யமில்லாமல் போகவே பெண்டாட்டியைப் பிறந்தகத்தில் கொண்டுவிட்டுவிட்டதாம் கையில் காலணு என்றுல் காலணு இல்லாமல் அலைந்ததாம் வஸந்தாவின் கலியாணத்திற்குவந்திருந்தது. முகூர்த்தத்தன்று ராத்திரி எல்லோரும் தூங்கிக்கொண்டிருக்கிருாகள் வஸந்தாவின் சிறிய நாத்தனுர் (ஐந்து வயதுப் பெண்) கழுத்திலிருந்த செயினும், கையிலிருந்த வளையலும் காணுமற்போயிருக்கிறது யார்மேல் சந்தேகப்படுவது? இந்தப் பிள்ளையும் (வஸந்தாவின் நாத்தனுரின் அகமுடையான்) அந்தப் பெண்ணின் அருகில் பெஞ்சியின்மேல் படுத்துக்கொண்டிருந்ததாம் ஆகவே அதுதான் எடுத்திருக்குமென்று எல்லோரும் முடிவு கட்டிவிட்டாகள் இருந்தாலும் எல்லோருக்கும் மனதில் ஒரே குழப்பம். இந்தமாதிரியான சந்தர்ப்பங்களில் யாராவது ஒருவர்–உள்ளுக்குள்ளேயே–செய்துவிட்டுப் பல பேருக்குக் கெட்ட பெயர் உண்டாகிறது! கலியாணங்களில் இது ஒரு பெரிய கண்டம் அதனுல்தான் அம்மா அடிக்கடி சொல்வாள் கலியாண வீடுகளில் குழந்தைகளுக்கு நகைபோட்டால் ஸர்வ ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று நகை திருட்டு போவதைப்பற்றிகூட விசாரமில்லை அனுவசியமாக பாபம் ஓரிடமும் பழி ஓரிடமும் போய்ச் சேர்ந்துவிடும்.

இப்படியாக வஸந்தாவின் கலியாணம் ஒருவாருக முடிவடைந்தது

சேஷ ஹோமத்துக்கு மறுநாள் காலையில் சம்பந்திகளுக்கு தாம்பூலம் கொடுத்து ஊருக்கனுப்பிக்கொண்டிருக்கிருர்கள்.

திடீரென்று அடே ரகு! ஓடி வாடா இங்கே, சீக்கிரம் ஓடிவா!' என்று மாமா தோட்டத்திலிருந்து கத்தினுர்

உடனே 'ஐயோ! அப்பா!' என்று கதறிக்கொண்டே நாத்தனுர் தோட்டத்துக்கு ஓடினுர்.

எல்லோரும் அவரைத் தொடர்ந்து ஓடினேம்.

(தொடரும்)

வாழை

வாழைக்கன்றுகள்—நடவு

☆

வாழை நன்றாய் வருவதானது கன்றுகளைத் தேர்ந்தெடுப்பதைப் பொறுத்திருக்கிறது. 'சோர்ட் சக்கர்' என்ற வீர்யமான கன்றுகளைத்தான் நட வேண்டும். 'வாடர் சக்கர்' என்ற பலவீனமானவை தள்ளப்படத் தக்கவை. தண்டுக் குருத்து காயப்படாமல் வெட்டியெடுத்து வேர்களை அறுத்தெடுத்து நாலைந்து நாட்கள் அவற்றை ஒரு மூலையில் அடுக்கி வைக்க வேண்டும். நடுமுன் கன்றின் மேல் பாகத்தை 1½, 2 அடி உயரத்திற்கு மேலில்லாதபடி கோண வெட்டாக அறுத்துக் குழியின் நடுவில் நேராக நட்டுக் கிழங்கு பாகம் முழுதும் மண்ணுக்குள் புதையும்படியும் தாய்ச்செடிகளுடன் இருந்த பொழுது எவ்வளவு ஆழத்திலிருந்தனவோ அவ்வளவில் புதைக்கப்படவேண்டும். பிறகு பொல பொலப்பான மண்ணைக்கொண்டு நிரப்ப வேண்டும் குழிகளின் அடி மண்ணைக்கொண்டு துக்கக்கூடாது பிறகு கன்றைச் சுற்றி மண்ணை நன்றாக அழுத்தி ஜலம் விடவேண்டும் மண் காய்ந்த பிறகு மறுமுறை கெட்டிக்கவேண்டிவந்தால் நன்றாகச் சுற்றிலும் மிதித்து அழுத்த வேண்டும் இப்படிச் செய்தாலன்றி கன்றுகள் சீக்கிரம் வேரூன்றுவதில்லை அப்போதைக்கப்போது ஜலம்விட்டுக் கொண்டிருந்தால் நிலத்தின் காய்ச்சலைப் பொறுத்து சுமார் ஒரு வாரத்தில் கன்றுகள் வேரூன்றி வளரத் தொடங்கும்

குறு மண் நிலங்களில் வாரத்திற்கொருமுறையும், மணல் கலந்த குறுமண் பூமிகளில் மூன்று நாட்களுக்கொருமுறையும் மணல் தரைகளில் பிரதி நாளும் ஜலம் ஊற்றவேண்டும் மாரி காலத்தில் இவ்விதம் தொடுத்து நீர்பாய்ச்ச வேண்டியதில்லை

பின் செய் நேர்த்தி

முதல் மண் வெட்டிக் கொத்து நட்ட பின் ஒரு மாத காலத்தில் செய்யப்பட வேண்டும் இதன் பின் வயலில் களைகள் முளைத்திருப்பதைப் பார்த்து அப்பொழுதப்பொழுது செய்ய வேண்டும். கோரையைக் கிழங்கோடு வெட்டிப் போட வேண்டும் நட்ட பின் பூமியை இடை வெளியில் உழுகிற வழக்கம் சில விடங்களில் இருந்தாலும் அவ்வளவாக நல்லதல்ல களைக் கொட்டால் கொத்துதல் தரம் அப்போதைக்கப்போது செடிகளிலிருந்து உண்டாகும் கன்றுகளை அப்புறப்படுத்த வேண்டும்

உறப்பான களி மண் தரைகளில் நீர் கட்டுக்கடையாக நின்றால் இரண்டு வரிசைகளுக்கூடே ஒரு அடி அகலமும் ஒரு அடி ஆழமுமான கால்களை மழை காலத்தில் வெட்டி நீரை வடியச் செய்யவேண்டும். ஒவ்வொரு மண் வெட்டிக் கொத்து ஆகிறபொழுதும் கால்களைச் சுத்தம் செய்து சிறுகச் சிறுக ஆழமாக்கி வடிகாலைச் சரிக்கட்டிக் கொள்ள வேண்டும்.

வடிகால் வசதி நன்கமைந்த ஜாகைகளில் கால்கள் தேவையில்லை இவ்விடங்களில் 4, 6 செடிகளைச் சுற்றி மண் அணைத்துப் பாத்தி போட்டுக்கொள்வதால் இறைவை நீரைக் குறைத்தும் மழை நீரைத் தேக்கியும் ஆன சௌகரியம் கிடைக்கும் மொத்தத்தில் 6 கொத்துகள் கொடுக்கவேண்டிவரும்.

எருவும்—எருவிடுதலும்

நன்றாய் மட்கின தொழு எரு, பிண்ணுக்குத் தூள் தோல் கிடங்குக் குப்பை பசுந்தழை முதலிய கனத்த இந்திர எருக்கள் சாதாரணமாக இப்பயிருக்குத் தக்கவை சில இடங்களில் சிறிது அம்மோனியம் ஸல்பேட் குணமாகக் காணப்படுகிறது சாம்பல் உபயோகிக்கப்பட்டால் பழம் வெகுநாள் கெடாமல் இருக்கும்.

செடிகள் 5, 6 இலைகள் விட்ட பிறகு, செடியைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் 1½ அடி தூரத்திற்கு மண்ணை வெட்டி வேரமட்டத்தில் வெளிப்பக்கம் போட்டு மக்கின தொழு எருவானால் 2 கூடையும், பிண்ணுக்குத்தூள் 1½ ராத்தல், தோல் கிடங்கு குப்பையானால் 2 ராத்தல். ஒவ்வொரு செடிக்கும் போட்டு வெட்டின மண்ணைக் கொண்டு மூடிவிடவேண்டும். இதையடுத்து முங்கத்தண்ணீர் பாய்ச்ச வேண்டும்

இரண்டாவது முறை எரு விடுவது செடிகள் பூக்க எத்தனிக்கையில், இப்பொழுது செடியைச் சுற்றி உண்டாயிருக்கின்ற கன்றுகளிலும் 6, 8 இலைகள் உண்டாயிருக்கும். தாய்ச்செடி, கன்றுகள் இவையாவும் எருவிடப்பட வேண்டும்

கன்றுகளை அப்புறப்படுத்தல்

ஆறு மாதத்திலிருந்து இளங்கன்றுகள் செடியின் பக்கத்திலிருந்து முளைத்துக் காணப்படும் முதலாவது இரண்டாவது கன்றுகள் வெளிவந்தவுடன் தாய்ச்செடிக்கு யாதொரு கேடும் உண்டாகாதபடி தனித்த கட்டப்பாறையால், சற்றுக் கிழங்குடன் பெயர்த்தெடுப்பார்கள். மூன்றாவது கன்று அடுத்த பயிரின் முதலுக்காக அப்படியே விடப்பட்டிருக்கும் இதற்கப்புறம்உண்டாகிற கன்றுகளை முதலிரண்டை நீக்கின விதமே களைந்தெறியவேண்டும் பின் பயிருக்காக நிறுத்த வேண்டிய தொன்றேயாகையால் மற்றவை யாவும் எடுபடவேண்டியவையே. தாய்ச்செடி குலைபோட்டு முற்றி வெட்டப்பட்ட பின் விடப்பட்ட பக்கக்கன்றே அடுத்த வம்சத்து மூலச்செடி இவ்விதமாக மூன்று வருஷங்களில் நான்கு குலைகள் உண்டாகும் நான்காம் வருஷத்துப் பயிர் இலைகளுக்காக நிறுத்தப்படுவதால் ஒவ்வொரு குத்திலும் நல்ல கன்றுகள் 3 4 நிறுத்தப்படலாம் முதல் வருஷத்துப் பயிரிலிருந்து அவசர நிமித்தம் இலைப்பறி செய்யவேண்டிய தேற்பட்டால் இவ்வகைக்காக வயல் ஓரங்களில் ஒன்றிரண்டு வரிசை மரங்களை ஒதுக்கி இவற்றில் 3.4 திடமான கன்றுகளை நிறுத்திவைக்கலாம்.

முட்டுக்கொடுத்தல்

குலைகள் முற்றுகையில் பலமான காற்று அடித்தாலும் அல்லது பெரிய கனமான குலைகளாக இருந்தாலும் நஷ்ட மேற்படக்கூடும். இதைத் தடுக்க கனமான மூங்கிலோ அகத்திக்கொம்போ செடிக்கு சாய்வாக முட்ட வைக்கப்பட வேண்டும். தனி முட்டோ அல்லது கவையுள்ளபடி இரண்டு கட்டைகளோ இணைத்து முட்டுக்கொடுக்கலாம். மொந்தன். ரஸதாளி தினுசுகள் ஆழமாயும் உறப்பாயுமுள்ள தினுசுகள் ; வாமனகேளி தினுசு குள்ளமானது. இவற்றிற்கு முட்டு தேவை இல்லை.

ஒரு வாழைக்குலை முற்றுவதற்கு அதாவது பூ தள்ளின நாள் முதல் செடியில் இருக்கும் குலையின் காய்கள் பழுக்க ஆரம்பிக்க ஆகிறகாலம் தினுசுக்கு தினுசு மாறுபடும் என்றாலும், புஷ்பித்தபின் ஏற்படுகிற காலநிலை. அக்காலத்து இறைவை வசதிகளையும் பொறுத்ததாகவும் இருக்கிறது

குலை தள்ளும் பருவம் அக்டோபர் மாதமல்லாமல் பிப்ரவரியிலானால் ஒரு மாதத்திற்கு முன்பே முற்றும். இச்சமயத்தில் இறவையைக் குறுக்கினாலும் துரிதமாகக் குலை முற்றும். அதிக நாள் பயிர் தினுசுகள் குலை முற்றுவது நீண்ட காலம் அல்ல. தட்டைக் காய் தினுசுகள் உருண்டைப் பழ தினுசுகளைவிட அதிக நாள் பிடிக்கின்றன.

குலையில் உள்ள சீப்புகளின் எண்ணிக்கையும் தனிப் பழத்தின் எடையும் ஜாதிக்கு ஜாதி வெகுவாக வித்தியாசமுள்ளன. செய் நேர்த்திகளுக்கொத்தவாறும் மாறுபாடடையக் கூடியவை.

பூவன்

பெயர்கள்:—மைசூர் வாழை. பங்களூர் பழம். பாளையங்கோடன். கர்ப்பூர சக்கரகேளி. வாசனசெட்டு, கின்னி, அடுக்கு நவரை—இன்னும் இடத்திற்கிடம் வேறு வேறு பெயர்கள்

இது பெருவாரியாக செலவாகிற தினுசு கறிக்கும் உபயோகப்படும். கன்றுகள் ஈரோடு. கோயமுத்தூர். திருச்சி, தலைச்சேரி. இராஜமஹேந்திரவரம். சாமல்கோட்டை மற்றும் பல இடங்களில் கிடைக்கும் எல்லா பூமிகளிலும் எல்லா இடங்களிலும் உண்டாகும். மாகாணம் பூரா இப்பழத்திற்கு நல்ல கிராக்கி உண்டு.

இரசதாளி

பெயர்கள்:—பூவாழை. ரஸபாளை, ஆனைபூவன். அரிபூவன், பூவன். நாட்டுப்பூவன், தேசி, மொகிரி, அமிர்தபாணி

பழத்திற்கேற்ற சிரேஷ்டமான ஜாதி நல்ல வாசனையும் ருசியுமுள்ள பழங்கள். எங்கும் நல்ல கிராக்கி தணுகுதாலுகா கந்தவல்லி, ஈரோடு, திருச்சி, தலைச்சேரி முதலிய இடங்களில் கன்றுகள்கிடைக்கும். எங்கும் நன்றாக உண்டாகும்.

வாமனகேளி

பெயர்கள்:—பச்சைவாழை, காபூல் பாளை, குஜபாளை, குழிகேந்திரன், கூளி வாழை, கூனி வாழை, நில வாழை, கண்டி வாழை, மோரீஸ் வாழை

இது பழமாக உட்கொள்ள ஏற்ற தினுசு. நல்ல வாசனை உண்டு அதிக இனிப்பும் ருசியும் சென்னையில் நல்ல கிராக்கி. எல்லா பூமிகளிலும் நன்கு வளரும். ஏராளமான எருதேவை இது குள்ளமானது பழுத்த பழமும் பச்சை நிறமாக இருக்கும். கன்றுகள் சாமல்கோட்டை, ஈரோடு. திருச்சி, கூடலூர், சதுரங்கப்பட்டணம், திருச்சூர் முதலிய இடங்களில் கிடைக்கும்

சக்கரகேளி

பெயர்கள்:—தெல்ல சக்கரகேளி, தேன்கதலி, ஷாஹாஜா, சக்கரை கதலி, கோதாவரி சக்கரைகேளி. ராஜவாழை.

மழங்களில் அதிசிரேஷ்டமானது வாழைப்பழ தினுசுகளின் அரசன். எனப்படலாம். நல்ல வாசனையும் ருசியுமுடையது. பழுத்த பழங்கள் அப்படியே வாயில் உருகிவிடும். இராஜமஹேந்திரம், சாமல்கோட்டை, சென்னபட்டணம் முதலிய இடங்களில் அமோகமான கிராக்கி இது எல்லா இடங்களிலும் எல்லா நிலங்களிலும் பயிராக்கப்படலாம் கன்றுகள்சாமல்கோட்டை திருச்சூர் முதலிய இடங்களில் கிடைக்கும்.

விருபாக்ஷி

பெயர்கள்:—வெள்ளைவாழை, மலைவாழை இது மலை ஜாதி 3000-5000 அடி உயரத்தில் நன்கு உண்டாகிறது நல்ல மேலான பழம் வாசனையும் ருசியும் அதிகம். பழங்கள் நீர் கோத்தவை அல்லர் நீண்டகாலம் கெடாமல் வைக்கலாம். தென்ஜில்லாக்களில் சதா கிராக்கி அதிகம் சமவெளிப் பிரதேசத்தில் பயிர் செய்யப்பட்டால் பழங்கள் சிலாக்கியமாவதில்லை

கன்றுகள் கொடைக்கானல் ரோடு ஸ்டேஷன் பக்கம் பண்ணைக்காட்டில் கிடைக்கும்.

சிறுமலை

பெயர்கள்—:உதிரன் வாழை, சிறுமலை, மலைவாழை. இதுவும் மலை ஜாதியே. ஆனாலும் விருபாக்ஷியைப் போல் அவ்வளவு உயரமில்லாத மலைச்சரிவுகளில் உண்டாவது மதுரை ஜில்லா சிறுமலையில் 2000-2500 அடி உயரத்தில் வளருகிறது நல்ல ரஸமுள்ளவும், ருசியும், வாசனையுமுடைய பழங்கள் இவையும் நாள்பட வரும் தென் ஜில்லாக்களிலும் சென்னையிலும் தக்க கிராக்கி உண்டு. சமவெளிப் பிரதேசத்தில் ஆகிற பழங்கள் அவ்வளவாக நல்லவையாக இல்லை. கன்றுகள் திண்டுக்கல் சமீபம் சிறுமலையில் கிடைக்கும்,

நெய்மன்னன்

பெயர்கள்:—வயக்காட்டு காய், நாட்டு வாழை, தியன்மன்னன், கல்லுவண்ணன், நெய்வண்ணன், மலமுண்டி.

இது கறிக்கும் வேளா வேளைகளில் பழமாகவும் உபயோகப்படுகிறது. கறிக்காக மதுரை, இராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் வெகுவாக உபயோகிக்கிறார்கள். பழங்கள் அவ்வளவாக சிலாக்கியமல்ல

கன்றுகள் திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலியில் கிடைக்கும்.

நேந்திரன்

பெயர்கள்:—நேந்திரவாழை, திருவோணன், ஏத்தக்கா, செங்கழிக்கோடன்.

மேல்கரை ஜில்லா ஊர்களில் அதிகப் பிரசித்திபெற்ற பழ தினுசு. இதில் இரண்டு உப தினுசுகள் உண்டு. ஆற்று நேந்திரன், மைந்தோளி—கறிவகைக்கும் பழமாகவும் பயன்படுகிறது. பழுத்த பழம் தோல்போல் உறப்பானதாகையால், ஆவியில் வேகவைத்து உண்பார்கள். வெகுகாலம் வைக்கப்படலாம். காய்களும் பழமும் பலவிதமான உபயோகத்திற்கு வருவன. தற்காலம் இந்தத் தினசு மேற்குக்கரைப் பிரதேசத்தில்தான் அதிகமாகப் பயிராகிறது மற்ற இடங்களிலும் இது விளைக்கப்படலாம்

கன்றுகள் கள்ளிக்கோட்டை, தலைச்சேரி, திருச்சூர் முதலிய இடங்களில் கிடைக்கும்

நல்லபொந்த

பெயர்கள்:—பச்சபொந்த, பொந்தன், நாட்டுக்காய், கட்டபொந்த—இது முக்கியமாகக் கறிக்கே உதவுகிறது சென்னையிலும், வட ஜில்லாக்களிலும் இக்காய்க்கு அதிக கிராக்கி எல்லா நிலங்களிலும் எல்லா இடங்களிலும் உண்டாகும்.

கன்றுகள் இராஜமஹேந்திரவரம், சாமல்கோட்டை. பொன்னேரி திருவள்ளூர் முதலிய இடங்களில் கிடைக்கும்.

மொந்தன்

பெயர்கள்:—சிலந்தி. மாங்கா பாளை, ஔந்தபாளை. மாங்காகாய், சோதரி. தெமுதணி, தெனுளி, பொந்தன். செட்டிகாய, நாதாங்கி மொந்தன், மொந்தன், ஏந்தாள மொந்தன்—இதன் காய்கள் முக்கியமாகக் கறிக்கே ஆவன. சிலசமயம் பழுத்த பழங்களும் உட்கொள்கிறார்கள் இராஜதானி முழுமையும் கறிவகைக்கு இந்த ஜாதி வெகுவாய் உபயோகப்படுகிறது பழம் ருசியும் வாசனையுமற்றது. எங்கும் நன்றாக விளையும்.

கன்றுகள் ஈரோடு, திருச்சி, கோயமுத்தூரில் கிடைக்கும்.



6

தலைசுற்றல் மயக்கம்

☆

மூத்திரத்தில் சர்க்கரை-மதுமேகம் என்றும் டயாபிடிஸ் என்றுஞ் சொல்லும் ரோகத்திலும் தேஹத்திற்கு அவசியமான ஸத்துப் பொருள்கள் நஷ்டமாவதாலும், இரத்தத்திலுங்கூட விஷ ஸ்வபாவமுள்ள சில வஸ்துக்கள் உண்டாவதாலும். சரீர தத்வத்திலேயே அனேகவிதமான ப்ரதிகூல பாவங்கள் ஏற்படுவதாலும் ரத்த ஓட்டத்தின் வேகமும் கூடுதலாகிறது இதனாலும், மேலே சொன்ன விஷஸ்வபாவமுள்ள வஸ்துக்களின் வகையாலும் கொடுமையான தலை சுற்றலும் அடிக்கடி மயக்கமும் உண்டாகும். படுத்துக்கொண்டிருக்கும் பொழுதே இத்தலைசுற்றல் இருக்கும். தலையைத் தலையணியிலிருந்து சற்று உயர்த்தினாலும் ஆளையே கீழே தள்ளிவிடுமோவென்று பயப்பட வேண்டிய ளவு. பயங்கரமாகத் தலையைச் சுற்றும் நிற்கும்போதும் நடக்கும் போதும் என்னவாயிருக்குமென்று சொல்லவேண்டாமல்லவா? இந்நிலையிலிவர்கள் பட்டினிதாளமாட்டார்கள் பட்டினியால் பலஹீனமேற்படுவதன்றி, தலை சுற்றல் அதிகமாகும் இவரில் சிலருக்கு அகோரமான பசியும் எவ்வளவு சாப்பிட்டாலும் போதாதென்றும் மேலும்மேலும் கேட்டலும்—அதேபோல தாகமும் இருக்கும் அமிதமானதும் ஊட்டம் மிக்கதுமான ஆகாரங்கள் மதுமேஹத்தை அதிகமாக்கும் மதுமேஹத்திற்கு உபவாஸமிருத்தல் தேஹத்தில் ஆயாசம் வருத்தும் வகையில் நடத்தல், குளம் குட்டை கிணறு இவற்றைத் தோண்டல் போன்ற வேலைசெய்தல், மனதிற்கும் கொஞ்சம் விசாரங்களை ஏற்படுத்தல்போன்றவை தக்க சிகிச்சைகளாகும். கொடூரமான பசியுள்ள மதுமேகிக்கு ஆகாரம் அளவில்லாமல் கொடுப்பது வியாதியை விருத்தி செய்யும். ஆகாரம் கொடுக்காமல் விட்டாலோ தேகத்தில் உயிர்தரிப்பதே கூடாத வகையிலாகிவிடும். இங்கு சிகிச்சிப்பது ரொம்பவும் கஷ்டமானது ஆயினும், பச்சை நெல்லிக்காயின் ரஸம் 1 முதல் 2 ஔன்ஸ்வரை (கிடைக்காதபக்ஷம் நெல்லி முள்ளியின் கஷாயத்தையாவதுஎடுத்துக்கொள்ளவும்) இத்துடன்—நல்ல தேன் ½ ஔன்ஸ் இவ்விரண்டையும் கலக்கிக்கொண்டு, இதில் மஞ்சளின் பொடி ½ஸ்பூனளவு கூட்டிக் குழைத்துக் காலையில் ஒரு நேரம் குடிப்பிக்கவும் இதனால் அதிகமாகப் போகும் மூத்திரம் குறைவுபடும். சரீரத்திலிருந்து தண்ணீரின் அம்சமும் சர்க்கரையாகிற ஸத்தின் அம்சமும் வெளியே போவது ஓரளவு குறைவதால், தாகமும் பசியும் கொஞ்சம் குறைவதன்னியில் சரீரத்தில் கொஞ்சம் திரடமும் ஏற்படும்

கடுக்காய்த் தோல் நெல்லிமுள்ளி, தானிக்காய்த்தோல், மூங்கிலின் இலை, கோரைக் கிழங்கு, பாடைக்கிழங்கு (சிலர் வட்டத்திருப்பியையுங் கூட்டிக்கொள்கின்றனர்) இவற்றின் கஷாயத்தில் (ஆறின பிறகு) 2 ஔன்ஸ் இதில் நல்ல தேன் 2 ஸ்பூனளவு கூட்டி, தினம் 2 3 முறை ஸேவிப்பதாலும் மேற்சொன்ன குணம் கிடைக்கும்

இதேபோல்கொம்பு பாகற்காயின் சூரணத்தில் ½ முதல் 1 ஸ்பூனளவு வரையில் தினம் 2 வேளையுட்கொண்டு, வெள்ளாட்டின் பாலை அனுபானமாகக் குடிப்பதும் ஹிதம் இதனால் ரத்தத்தில் சேர்ந்திருக்கக்கூடிய விஷ ஸ்வபாவமுள்ள வஸ்துக்களாலேற்படும் விபத்துகளும் விலகும்.

தண்ணீர்தாகம் அதிகமாயிருப்பின், மரமஞ்சள் கொஞ்சம் தட்டிப்போட்டுக் காய்ச்சிய வெந்நீரை ஆறியபின் குடிப்பதால் நலமுண்டாகும்.

மஞ்சள், விலாமிச்சன்வேர், சித்தாமுட்டிவேர். இவற்றின் கஷாயத்தில் நல்லெண்ணெயும் அமுக்கிரான் கிழங்கு, மஞ்சள் தேவதாரு, காட்டு மிளகு கோஷ்டம். கோரைக்கிழங்கு கடுகுரோஹிணி சித்தரத்தை சதகுப்பை, அதிமதுரம் ஆகியவற்றைக் கல்கமாய்க் கூட்டிக் காய்ச்சிய தைலத்தில் அப்யங்கம் செய்வித்தலால் விசேஷ நலமுண்டாகும்

கோமூத்ர சிலாஜது என்றொரு மருந்துண்டு சுத்திசெய்து உட்கொள்ளத்தக்க வகையில் பக்வஞ் செய்தது பல விடத்திலும் கிடைக்கும் இதில் வேளைக்கு ஒரு மிளகளவு முதல் ஒரு சிறிய சுண்டையளவுவரையில் தினம் 1-2 வேளை நெடுநாட்கள் உட்கொள்வது மது மேகத்தில் சிறந்த மருந்தென்றும், மற்றைய மருந்துகளெல்லாம் பயனற்றுப் போனவிடத்தும் இது பயன்தரத்தக்கதென்றுஞ் சிலாகித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்விதமேதான் வந்தரக்ருதம், ஆரக்வதாதி கிருதமிவையும் ரொம்பவும் பயன் தருவதாகும். ஆகாரத்திற்குக் கோதுமையே மிகவும் சிறந்த உணவாகும் கேழ்வரகும் நல்லதென்பர்.

காப்பி, டீ முதலிய வழக்கத்தைப் பெருக்கும் சாதனங்களை நீக்க வேண்டும்.

மேலே சொன்னபடி அப்யங்கத்தைப்போலவே தலைக்கும் பிசு, மற்று நஸ்யம் (மூக்கில் மருந்தொழித்தல்) அஞ்ஜனம் (கண்ணில் மருந்தெழுதல்) இவையும் ஹிதமாகும். ஆனால்,

இவ்வுபாயங்கள் வைத்தியர்கள் மட்டுமே கையாளத்தக்கவை.

பிஷ்டமேகம் என்று ஒருவித மூத்திராசய ரோகமுண்டு மூத்திரத்தில் மாவு கரைத்துவிட்டதுபோல் ஒருவகை வண்டல் தங்கும் கிரமப்படி மூத்திரத்தைப் பரிக்ஷித்து, "இது ஆல்புமின் யூரியா" என்பர் வைத்தியம் படித்தவர்கள் இவ்வியாதியிலும் தலை சுற்றலும், மயக்கமும் உண்டாகும் ரத்த ஓட்டத்தின் வேகத்திலும் கோளாறு இருக்கும் எழுந்து நடக்கும்போதெல்லாம் கீழே விழுந்துவிடுவோமோ என்ற பயம் ஏற்படும் தடியையாவது பிடித்துக்கொள்ளாமல் நடக்க முடியாது அப்பொழுதுங்கூட பத்தடி நடப்பதற்குள் சற்று நிற்பதும்—கண்ணை மூடிச் சற்று சமாளிப்பதுமாகத்தான் நடப்பா சற்று குனிந்த வகையிலுள்ள பார்வையைக் கண்ணை உயர்த்தி ஒருதரம் பார்ப்பதாலும் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களோடு தானும் ஒருதரம் வானத்திற்கும் பூமிக்குமாய்ச் சுற்றப்படுவது போல் ஒரு தோற்றமும், மனதில் ஒரு திகிலுமுண்டாகும்.

ஆகாரத்தில் உப்பை அறவேநீக்கி, —அரிசிக்குப் பதில் கோதுமையை உட்கொள்ளுவது நல்லது. மற்றும் பார்லிகஞ்ஜிபோன்ற திரவமான ஆகாரங்களும், மூத்திரத்தைப் போக்கக்கூடியவைகளும் நல்லது திராதபட்சம், இந்துப்புவை வறுத்துப் பொடி செய்து வைத்துக்கொண்டு கொஞ்சமாகவாவது கூட்டிக்கொள்ளவும் தானிக்காயின் கொட்டையின் உட்பருப்பை, அரைத்துக் கல்கமாக்கி ஸுரை என்னும் மத்யத்தில் கலந்து குடிப்பதால் மூத்திரத்திலுள்ள இக்கோளாறும், அதனால் உண்டான உபத்திரவங்களும் குறைய ஹேதுவாகும் இதே கல்கத்தைக் கொஞ்சம் கருப்பஞ்சாற்றுடனும் குடிக்கலாம்.

நெறிஞ்சலின் முள்ளைச் சூரணமாகவோ, கஷாயமாகவோ சாப்பிடுவதும் நல்லது.

தண்ணீர் விட்டான் கிழங்கின் ரஸம், பால், நெய், தண்ணீர் விட்டான் கிழங்கே கல்கம் என்றிப்படிக் காய்ச்சிய நெய்யை சேவித்தலும் நல்லது. 2 அவுன்ஸ் சூடான பாலில் இரண்டு ஸ்பூன் மேற்படி நெய்யைக் கலக்கிக் குடிப்பிக்கலாம். நெறிஞ்சல் முள் கஷாயத்தில் நெய்யும் பாலும் கூட்டி ஏலரிசி. கோமூத்ர சிலாஜது என்று ஏற்கெனவே சொன்ன மருந்து, கல்லூர் வஞ்சி (இதைச் சிலர் சிறு பீளை என்றுஞ் சொல்வர்) யின்வேர், அதிமதுரம். தண்ணீர் விட்டான் கிழங்கு, தர்ப்பைப்புல்லின் வேர், திராக்ஷை. குருவேர் (இதைத் தென் நாட்டில் வெட்டி வேர் என்பர்) திப்பிலி, யானைத் திப்பிலீ. கரும்பு. பொன்னாங்கண்ணியின் வேர் இவற்றைக் கல்ககமாகக்கூட்டிக் காய்ச்சிய நெய்யையும் மேற்சொன்ன முறையில் சாப்பிடலாம்.

நெல்லிக்காய் இடித்து பிழிந்த ரஸம் ஒரு ஆழாக்கு—பச்சை நெல்லிக்காய் கிடைக்காதபக்ஷம், நெல்லி முள்ளி 8 பலம், நிலப்பூசணிக் கிழங்கு (இது கடையில் கிடைக்கும் ஒரு சரக்கு) 8 பலம் இவ்விரண்டையும் ஒன்றிரண்டாய் இடித்து 4 படி ஜலத்திலிட்டு 1 படியாகச் சிறுதீயால் வற்றவைத்தெடுத்துக் கொண்ட கஷாயம், கருப்பஞ்சாறு, தண்ணீர் விட்டான் கிழங்கின் சாறு, கலிப்பூசணிக்காயின் சாறு இவை வகைக்குக் கால்படி வீதமும் கூட்டிக் கொண்டு (கலியாணப் பூசணிக்காயைச் சிறிய துண்டுகளாக நறுக்கி ஒரு ஆவி வேகவிட்டபின் ஆறவிட்டுப் பிழிந்து ரஸம் எடுக்கவம்) பால் படி 1-ம் நெய் 1 வீசையும் கூட்டி இதில் திராக்ஷை, அதிமதுரம், சந்தனம் இவை வகைக்கு 2 தோலா வீதம் கல்ககமாய் அரைத்துக் கூட்டிக் காய்ச்சி. மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டிய நெய்யுடன்—அஸ்கா (நன்ருய்ப் பொடித்து ஜலித்தது) 5 தோலாவைச் சிறிது சிறிதாகக் கூட்டி, மத்தினால்நெய்யுடன் மர்த்தித் தெடுத்துக்கொள்ளவும். இந்த நெய்யை மேற்சொன்னபடி கொஞ்சநாள் ஸேவிக்க மூத்திரத்திலுள்ள மாவின் சத்து அறவே போவதன்றியும் தலைசுற்றல் மயக்க மிவையும் குணமாகும் தலைக்குத் தேய்க்கவும் அப்யங்கத்திற்கும் இது வரையில் சொன்ன தைலங்களில் யாதாயினு மொன்றையுபயோகிக்கலாம்.

முக்கியமாக மனதிற்குத் திடீரென்று உத்வேகங்களை வருத்தவே கூடாது அதிலும் வயோதிகருக்கு மனதின் அதிர்ச்சி கூடவே கூடாது. இது ஸர்வத்ர முக்கியமாகவும் நினைவிலிருக்க வேண்டியது அப்யங்காதிகளால் சரீரத்திற்கும் மனதிற்கு முள்ள பலத்தை நன்ருகக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்.

இந்த மட்டோடு இத்தலை சுற்றல் ஒழிந்ததென்று நிறுத்திக் கொள்ளட்டுமா?

நண்:—ரொம்ப நல்லது. ஏதோ ஸாதாரணமாக நான் இவ்விஷயத்தைப் பிரஸ்தாபிக்கப்போய், இது ஒரு பெரிய புராணமாக முடிந்துவிட்டது இதனிடையில் எத்தனையோ வியாதிகளைப்பற்றிச் சுருக்கமாக நீங்கள் விளக்கியுள்ள விஷயம் ரொம்பவும் உபயோகமானது. வேறொரு ஸமயம் விஸ்தாரமாகச் சொல்வதாய்ச் சொல்லிவிட்டிருக்கும் விஷயங்கள் ஐந்தாறு போலும் உண்டு. இனி அவற்றை ஒவ்வொன்ருய் ஒய்வுள்ளபோது வந்து கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த தலை சுற்றல் விஷயமாகவும், ஏதாவது புரியாத பக்ஷம் விளக்கம் தேவையாயிருக்கும் பக்ஷத்தில் தெரிவிக்கிறேன். நேரில் வர முடியாத பக்ஷம் சீட்டில் எழுதியனுப்புகிறேன். அவற்றிற்கும விளக்கங்கள் தெரியப்படுத்துங்கள்.

நான்:—ஆஹா! ஸந்தோஷமாகச் செய்கிறேன். விஷயத்தை ரொம்ப வளர்த்தி விட்டதற்காக மன்னிக்கவும்.

நியாயமாய்ச் சொல்லப்போனல். இன்னும் எவ்வளவோ விவரங்களைச் சொல்லவேண்டி இருக்கிறது வைத்தியத் தொழிலில் ஈடுபட்டிருந்தால் அவ்விவரங்களை ரஸிப்பீர்கள். ஆகவே இந்த மட்டோடு.........

[அடுத்த கட்டுரை—"மூளை—ஒரு சுயகாரியப்புலி"]

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

☆

சந்தா விவரம்

(சந்தாவை முன்னதாக கட்டவேண்டும்)

	இந்தியா, சிலோன்		வெளிநாடு	
1 வருஷம்	13	0	18	0
6 மாதம்	7	0	9	8
3 மாதம்	3	12	5	0

தனிப் பிரதி அணு 4:

3-மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப் படமாட்டாது.

மானேஜர்,
"சுதேசமித்திரன்" ஆபீஸ்,
விக்டரி ஹவுஸ், மவுண்ட்ரோட்,
மதராஸ்.



சமீபத்தில் இந்தியாவுக்கும் ஆப்கானிஸ்தானத்துக்கு மிடையே சிநேக உடன்பாடு ஒன்று வகுக்கப்பட்டு அதில் பண்டித நேருவும், டில்லியில் உள்ள ஆப்கான் பிரதிநிதியும் கையொப்பமிட்டனர்.



திருவாவடுதுறை ஆதீனம் மடாலயத்தில் பழங் கலைகளை உயிர்ப்பிப்பதற்கான மகாநாடு சென்ற 2—1—50ல் கூடி முடிந்த பிறகு ஸ்ரீலஸ்ரீ மகா சன்னிதானமவர்களோடு மகாநாட்டுத் தலைவர்களுடன் எடுக்கப்பட்ட படம்.

கையெழுத்துப் பிரதி

பி. வி. எஸ்.

சில நாட்களுக்கு முன்பு சென்னையிலிருந்து வெளியாகும் பிரபல பத்திரிகை ஒன்றில் நான் கதை எழுதியிருந்தேன் அதனுடைய ஆசிரியரும் பிரபல ஹாஸ்ய எழுத்தாளருமான 'வால்மிளகு' அவர்களை தமிழர்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டிய அவசியமில்லை சிறு குழந்தைகளுக்குக்கூட அவருடைய பெயர் நன்ருகத் தெரியும் நல்ல ஹாஸ்யம் எது என்று கண்டுபிடிப்பதில் அவரைவிடச் சிறந்தவர் எவருமில்லை ஏனென்ருல் ஏதாவது ஒரு கட்டுரையை நீங்கள் அனுப்பி வைத்தால் அதில் உள்ள சிறந்த ஹாஸ்யப் பகுதிகளை தோந்தெடுத்து அகற்றிவிட்டு, பாக்கியுள்ளதை பிரசுரித்து விடுவார். இதற்கு ஹாஸ்யச் சுவை இல்லாவிட்டால் அப்படிச் செய்ய முடியுமா? ஸ்ரீ வால் மிளகு அவர்களிடம் அப்படிப்பட்ட அபூர்வசக்தி இருப்பது எனக்கு சமீபத்தில்தான் தெரிந்தது. ஆரம்பத்தில் கூறிய எனது கதையைப் படித்த நண்பர் அதைப்பற்றிப் பாராட்டிவிட்டு தனக்கு ஒரு இடத்தில் சந்தேகம் ஏற்பட்டதாகக் கூறினுர்.

அப்படி ஒன்றும் சிக்கலான விஷயம் அதில் இல்லாததால் எந்த இடத்தில் தங்களுக்கு சந்தேகம் வந்தது.' என்று கேட்டேன்.

என்னுடைய கதை வந்த பத்திரிகையை எடுத்து, குறிப்பிட்ட பகுதியை அவர் படித்துக் காட்டினுர் அதைக் கேட்டவுடன் எனக்கு தூக்கிவாரிப்போட்டது ஏனென்ருல் அந்த இடம் எனக்கே புரியவில்லை

உண்மையிலேயே இது பிரச்னையை ஓரளவு சிக்கலாகத்தான் ஆக்கிவிட்டது. நண்பர் என்னை ஒருவித சந்தேக நோக்குடன் பார்த்துவிட்டு, "இது நீங்கள் எழுதின கதைதானே" என்று கேட்டார்.

கதை எழுதியது நான்தான் என்று ஊர்ஜிதம் செய்தேன் நான் எழுதியிருந்த ஹாஸ்யத்தின் பிற்பகுதிதான் அதில் காணப்பட்டது. அதனுடைய முதலாவது பகுதி காணப்படவில்லை. அதனுல்தான் எனக்கே சந்தேகம் வந்துவிட்டது அதைப் பற்றி 'வால் மிளகு' அவர்களைக் கேட்டேன். நிலைமையை அவர் விளக்கிவைத்தார். பிற்பகுதியில்தான் ஹாஸ்யம் இருக்கிறதென்றும் எனவே முற்பகுதி அவசியமில்லை என்று நினைத்துத் தாம் அதை எடுத்துவிட்டதாகவும் கூறினுர் ஆனுல் அதை என்னுடைய ரசிக நண்பருக்கு எப்படி விளக்குவது என்று எனக்குத் தெரியவில்லை சில நாட்கள் தேடிய பிறகு பிரசுரமான மேற்படி கதையின் கையெழுத்து நகல் ஒன்று என் பெட்டியிலிருந்து அகப்பட்டது அதை எனது சிநேகிதருக்கு படித்துக் காட்டினேன் ஹாஸ்யத்தின் முற்பகுதி பிற்பகுதி இரண்டுமே இருந்ததால் அதை அவர் புரிந்துகொண்டார். 'இப்போது அது என்ன என்று தெரிகிறது' என்று கூறி சந்தோஷப்பட்டார் நானும் ஒருவாறு விஷயத்தை தெளிவாக்கிவிட்டது பற்றி திருப்தி அடைந்தேன்.

கதைகளை எழுதும்போது படிப்பதைத் தவிர பிரசுரமான பிறகு நான் என்னுடைய கதைகளைப் படிப்பதில்லை. அதனுல்தான் மேற்கண்ட எக்கச்செக்கமான நிலைமை ஏற்பட்டது இல்லாவிட்டால் நண்பருக்கு சந்தேகம் ஏற்பட்டவுடன், நான் என்ன எழுதினேன் என்பதை சாங்கோபாங்கமாக எடுத்துரைத்து, சந்தேகத்தை தெளிய வைத்திருப்பேன் பிரசுரமான பிறகுகூட எனது கதைகளை நான் படிக்கவேண்டிய அவசியம் அதிலிருந்து தெரிந்தது. அதன் மூலமாக அடுத்த நெருக்கடியிலிருந்து நான் தப்பமுடிந்தது.

சென்ற மாத ஆரம்பத்தில் நான் எழுதின கதையை ஒரு பத்திரிகை பிரசுரித்திருந்தது அதைப் படித்து முடித்தவுடன் எனக்கு ஏற்பட்ட திகைப்பு எல்லை கடந்துவிட்டது. அந்தக் கதையில் வரும் கதாநாயகன் வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பின் காரணமாக உயிரை விடுவதாக முடிக்கப்பட்டிருந்தது. ஆனுல் பிரசுரிக்கப்பட்டிருந்த கதையில் கதாநாயகன் ஒரு பெண்ணை கலியாணம் செய்துகொண்டு சுகமாக இருந்ததாக பிரசுரமாகி இருந்தது அதைப் படித்தவுடன் என் கண்களையே நம்ப முடியவில்லை பரந்த நோக்கத்தில் பார்க்கப்போனுல் நான் எழுதியதற்கும், ஆசிரியர் திருத்தியிருந்ததற்கும் இடையில் வித்தியாசம் எதுவும் இல்லாமலிருக்கலாம். அதாவது கலியாணமும் ஒருவித தற்கொலை என்று அவர் கருதியிருக்கக்கூடும். ஆனுல் அவ்வளவு பரந்த மனப்பான்மையை வாசகர்களிடத்தில் அவர் எதிர்பார்க்க முடியுமோ? எனவே என்னை சந்தித்த ஒரு சிநேகிதர் அதைப்பற்றிக் குறிப்பிட்டார் "கதாநாயகன் விவாகம் செய்து கொள்ளுவதாக எழுதியிருக்கிறீர்கள் ஆனுல் அவன் உயிரிழப்பதாக முடித்தால்தான் கதையின் போக்குக்கு பொருத்தமாக இருக்கும்" என்ருர்.

நல்ல வேளையாக நான் எழுதிப் பிரசுரித்திருந்த அந்தக் கதையின் கையெழுத்துப் பிரதி ஒன்று என்னுடைய பையிலிருந்து அதை எடுத்து நண்பருடைய கையில்கொடுத்து, "இதோ பார்த்தீர்களா நீங்கள் சொன்னபடிதான் நான் செய்திருக்கிறேன் கதாநாயகன் தற்கொலை செய்து கொள்ளுவதாக நான் கதையை முடித்திருக்கிறேன் ஆனுல் பத்திரிகாசிரியர் அதை மாற்றி அமைத்திருக்கிருர்" என்று காட்டினேன்.

"இப்போதுதான் கதையே சற்று நன்ருக விளங்குகிறது' என்று சொல்லி விட்டு, நண்பர் பின் வருமாறு கூறினுர்:—

“நானும் வேறு சில சிநேகிதர்களும் இந்தக் கதையைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். கலியாணத்துடன் கதையை முடிக்கவேண்டுமென்று நினைத்து ஆசிரியர் இந்தக் கதையில் சிறு சிறு மாறுதல்களைச் செய்திருக்கிறார் எனவே கதை எங்களுக்குச் சரியாகப் புரியவில்லை உங்களுடைய கை எழுத்துப் பிரதியைப் படித்த பிறகு கதை மிகவும் நன்றாகப் புரிகிறது. எனவே என்னுடைய நண்பர்களிடமும் போய் இதை இப்படியே கை எழுத்துப் பிரதியிலிருந்து படித்துக் காட்டினால் அவர்களும் இதைப் புரிந்து கொள்ளுவார்கள்.”

அப்படியாக என்னுடைய கதை பிரசுரமானவுடன் ஒவ்வொரு தடவையிலும் தீவிரமான வேலை எனக்கு ஏற்பட்டது கதையில் சில இடங்கள் கத்திரிக்கோலுக்கு இறையானதுபோல் தோன்றுகிறதே என்று சிலர் கேட்பார்கள், அவர்களுக்கு என்னுடைய கோயமுத்தூர் பிரதியை படித்துக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. சில இடங்களில் வரும் ஹாஸ்யம் புரியவில்லை என்று சொல்லுவார்கள். அவாகளுக்கு நான் எழுதிய கையெழுத்துப் பிரதியைக் கொடுப்பேன். அவர்கள் படித்துவிட்டு “ஓஹோ அப்படியா? இப்போது புரிகிறது சார்” என்று கூறுவார்கள். இப்படி என்றால் தொல்லையடைந்த வாசகர்களுடைய கஷ்டத்தை எப்படிப் போக்குவது என்று தெரியவில்லை. நீண்டநாள் ஆலோசனைக்குப் பிறகு ஒரு திட்டம் தயாரித்தேன் என்னிடம் ஒருவர் வந்து தம்முடைய பத்திரிகைக்கு விஷயதானம் செய்யவேண்டுமென்றுகேட்டவுடன் மேற்படி திட்டத்தை நான் அமுல் நடத்திவிட்டேன். ‘நான் உங்களுடைய பத்திரிகைக்கு கதை எழுதுவதில் ஆட்சேபனை இல்லை ஆனால் உங்களுடைய பத்திரிகை எவ்வளவு பிரதிகள் விற்பனையாகின்றன’ என்று கேட்டேன்.

‘சந்தாதார்கள் மட்டும் ஆயிரத்துக்குமேல் இருக்கிறார்கள்” என்று அவர் பதிலளித்தார். அவருடைய பத்திரிகையின் பெருமையை நான் குறைந்து மதிப்பிட்டு விட்டேன் என்று நினைத்து அவருடைய முகம் சிறிது வருத்தத்தை எடுத்துக் காட்டிற்று. ஏன் அதை கேட்டீர்கள்’ என்றார்.

‘பத்திரிகையில் கதைகளைப் படித்தபிறகு அவற்றிற்கு என்ன அர்த்தம் என்று தெரியாமல் திண்டாடுகிறார்கள் அல்லவா? அதைப் போக்க ஒரு திட்டம் கண்டுபிடித்திருக்கிறேன். என் கதையைப் பிரசுரித்தவுடன் உங்களுடைய வாசகா ஒவ்வொருவருக்கும் ஷை கதையின் கையெழுத்துப் பிரதியையும் ஒன்று அனுப்பிவிட்டால் அவாகள் திண்டாட மாட்டார்கள். உங்களுடைய பத்திரிகையில் கதையைப் படிப்பார்கள். அப்புறம் என் கையெழுத்துப் பிரதியை படிப்பார்கள் உடனே அவர்களுக்கு கதை புரிந்துவிடும் இது மிகவும் சுலபமான வழி அல்லவா’ என்றேன்

ஏன்? இந்தக்கட்டுரையில் சில விஷயங்கள் உங்களுக்குப் புரியவில்லையோ? கையெழுத்துப் பிரதியை சீக்கிரம் அனுப்பிவைக்கிறேன்!

இழந்த பலத்தை மீண்டும் பெற விரும்புகிறீர்களா?
நரம்பு தளர்ச்சி என்னும் ஆபத்திலிருந்து மீள விரும்புகிறீர்களா?
ஆனல்! இன்றே
டாக்டர் K. A. பிள்ளை R. I. M. P. அவர்களின்
மனோரமா
வாங்கி சாப்பிடுங்கள்.
சரவணாலய சித்த ஆயுர்வேத பார்மஸி,
530, திருவொற்றியூர் ஐரோட,
வண்ணாரப்பேட்டை, சென்னை-21.

சரும & தோலை நோய்களை

உலகப் புகழ் பெற்ற
ஜாம்-பெக் குணப்படுத்தும்
ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகை மருந்து வஸ்துக்கள் சருமத்தினூடே புகுந்து வேலை செய்வதால் நமைச்சல், ரணம் போய், ரத்தக் கசிவு நின்று நோய் கிருமிகள் நாசமாகி பாதிக்கப்பட்ட சருமத்தை ஜாம்-பெக் சீக்கிரம் குணப்படுத்தி ஆரோக்கியமாகவிருக்கவும் செய்யும். மிருக கொழுப்பில்லாததற்கு உத்தரவாதம்.
எப்பொழுதும் உபயோகியுங்கள்
சருமநோய்கள் காயங்கள். பூச்சிகடிகள், புண்ணாகி வலிக்கும் கால்கள், தசை வலி தேக குளிர்ச்சி இவற்றிற்கு சிறந்தது.
Zam-Buk
சமனமுட்டி நிவாரணமளிக்கும் கிருமிநாச மருந்து
ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்.

ஜும்ம கர்ஜனை’ பள்ளிக்கூடத்தில் இரண்டாம் வகுப்பில் உள்ள மிருகக் குட்டிகள் ‘செய்யுள்’ என்னும் பதத்தைப் போர்டில் பார்த்தன. அவ்வளவே. எல்லாவற்றின் முகத்திலும் விளக்கெண்ணெய் சாப்பிட்ட சாயல் காணப்பட்டது. ஓரோரு மிருகம் குறட்டைவிடவும் ஆரம்பித்தது. வாத்தியார் குரங்கார் உள்ளே நுழைந்து அதற்கு வந்தனம் சொல்லக்கூட குட்டிகளுக்கு அருவருப்பாய் இருந்தது.

“குட்டிகளே இப்பொழுது என்ன பாடம்?” என்று குரங்கார் மூக்குக்கண்ணாடியைத் தூக்கிக்கொண்டே கேட்டது. ஒரு குட்டியாவது பதில் சொல்லவில்லை.

குரங்கார் சிரித்துக்கொண்டது. “ஓஹோ, செய்யுள் பாடம் போலிருக்கிறது. அதான் உங்கள் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறதே. அது சரி, நான் இப்பொழுது ஒரு கதை சொல்லப் போகிறேன்” என்று கூறிக்கொண்டே தொண்டையை கனைத்துக்கொண்டது.

கதை என்றவுடனேயே குட்டிகளின் முகம் பஞ்சாமிருதம் சாப்பிட்டதுபோல் ஆயிற்று குறட்டைவிட்ட குட்டிகள் சுறுசுறுப்பாய நிமிர்ந்து உட்கார்ந்தன.

கதை ஆரம்பமாயிற்று

ஒரு காட்டில் இரண்டு கரடிகள் இருந்தன. ஒன்றின் பெயர்

2

ஆறுவது சினம்

☆

ஜாம்பவான். மற்றொன்றின் பெயர் குணவான். இரண்டும் இணை பிரியா சிநேகிதர்கள். அதோடுமட்டுமல்லாமல் நன்றாகப் படித்த பண்டிதர்கள். சகல சாஸ்திரத்திலும் நிபுணர்கள். இருவரும் கல்வியில் ஏற்றத்தாழ்வுள்ளவர்கள். ஜாம்பவானின் சிற்றப்பா பிள்ளை குணவான்.

இருவரும் அத்யந்த சிநேகிதர்களாதலால் அவைகளை தனித்து பார்ப்பது மிகவும் கஷ்டம். எங்கு சென்றாலும் ஒன்றோடொன்று சேர்ந்தே இருக்கும். அதோடுமட்டுமல்லாமல் சதா இரண்டும் ஏதாவது கல்வி விஷயத்தைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கும்.

ஒருநாள் இரண்டும் ஒரு குளக்கரையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தன. அப்பொழுது ஒரு நரி அங்கு வந்தது. அது அவை இரண்டையும் பார்த்து “நீங்கள் இருவரும் யார்?” என்று கேட்டது.

“நாங்கள் தான் வனப்பிரசித்தி பெற்ற ஜாம்பவானும், குணவானும்” என்றது ஜாம்பவான்.

“ஓஹோ அப்படியா நீர் ஜாம்பவானா, குணவானா?”

“நான்தான் ஜாம்பவான்”

“ஓஹோ, நீர் ஜாம்பவான். அவர் குணவானோ” என்று மறுபடி கேட்டது நரி.

“ஆமாம் அவர் குணவான், நான் ஜாம்பவான்” என்றது சிறிது கோபம் கலந்த குரலில் ஜாம்பவான்.

“அப்படி என்றால் அவர் பெயர் குணவானோ?” என்று மறுபடி கேட்டது நரி.

ஜாம்பவானுக்குக் கோபம் கோபமாக வந்தது. அது உரத்த குரலில் “ஆமாம் ஐயா, ஆமாம். எவ்வளவு தடவைகள் உமக்குச் சொல்வது.. நான் ஜாம்பவான், அவர் குணவான்” என்று கூறியது.

“ஓஹோ அப்படியா, உம்ம பெயர்தானே ஜாம்பவான்” என்று நிதானமாகக் கேட்டது.

ஜாம்பவானுக்குக் கோபம் தலைக்கேறி விட்டது. ஒரு தடி எடுத்து நரியை அடிக்கவே போய் விட்டது. “எவ்வளவு தடவை ஐயா உமக்குச் சொல்வது எதற்காக ஐயா எங்கள் நேரத்தை வீணாக்குகிறீர்கள்” என்று சொல்லிக்கொண்டே தடியை ஓங்கியது. உடனே குணவான் வந்து நடுவில் தடுத்தது.

நரியோ சிரித்துக்கொண்டே “என்னமோ தெரியாத்தனமாக உம்ம குணத்தை அறியாமல் கேட்டுவிட்டேன்.” என்று கூறியது. பிறகு குணவானைப் பார்த்து,

"உமக்கு விவாகம் ஆகிவிட்டதா?" என்று கேட்டது

"ஆகிவிட்டது" என்றது குணவான்.

"குழந்தைகள் உண்டா?"

உண்டு. ஒரு பெண் ஒரு பிள்ளை.

பெயர் என்னவோ?

ஜாம்பி. ஜாம்பன்.

பெண்ணின் பெயர் என்ன?" என்று கேட்டது நரி

பெண்ணின் பெயர் ஜாம்பி என்றது குணவான் பொறுமையுடன்.

பெண்ணின் பெயர் ஜாம்பி என்ருல் பிள்ளையின் பெயர் என்ன? என்று நரி மறுபடி கேட்டது.

அருகிலிருந்த ஜாம்பவானுக்கு மறுபடி கோபம் வந்தது. "ஏய் மூட நரியாரே. இந்த அசட்டுக் கேள்விகளை நிறுத்திவிட்டு தூரப் போகப் போகிறீர்களா அல்லது நிஜமாகவே அடித்து விரட்டட்டுமா?" என்று கூறிக்கொண்டே எழுந்தது.

அதற்குள் குணவான் குறுக்கிட்டு "ஜாம்பவனே அப்படி எல்லாம் செய்யாதேயும். ஏதோ அறியாத்தனத்தால் நரி அவ்விதம் கேட்கிருர். நாம் தான் கோபத்தை அடக்கிப் பொறுமையாக இருக்க வேண்டும்" என்றது.

இதைக் கேட்ட நரி ஒரே குதியாய் குதித்தது. குணவானின் கைகளைப் பிடித்துக்கொண்டு "ஆமாம், நீரே அப்பதவிக்கு தகுதியானவர்" என்றுகூறிகூத்தாடிற்று. பிறகு குணவானைத் தர தரவென்று இழுத்துக் கொண்டு சிங்கராஜா தர்பாரில் நிறுத்தியது. ஜாம்பவானும், கூடவே சென்றது.

நரி சிங்கராஜாவைப் பார்த்து "அரசே, இதோ கண்டுபிடித்துவிட்டேன். இந்தகுணவான் தான் அப்பதவிக்கு லாயக்குள்ளவர் என்று சொல்லி குணவானின் கழுத்தில் மாலே போட்டது. சிங்கராஜாவின் மகன்சிம்மக் குட்டியை அழைத்து வந்து குணவானுக்கு நமஸ்காரம் செய்யச் செய்தது.

குணவானும் ஜாம்பவனும் ஒன்றும் புரியாமல் விழித்தன. உடனே நரி சொல்லிற்று:— 'சபையோர்களே! நம் அரசர் தம் குட்டிக்குப்பாடம் போதிக்க நல்ல உபாத்தியாயரைத் தேடிக் கொண்டிருந்தார். இந்த காட்டிலேயே பிரசித்தி பெற்ற கல்விமான்கள் இந்த ஜாம்பவானும் குணவானும்தான். இவ்விருவர்களில் யாரை அமர்த்துவதென்று ராஜாவிற்குப் புரியவில்லே. மேலும் நம் ராஜாவின் குட்டியோ கொஞ்சம் நச்சுப் பேர்வழி. எதாவது தொணதொணவென்று கேட்டுக் கொண்டிருப்பான், ஆகையால் இவ்விருவரையும் பரீட்சை செய்துப் பார்த்ததில் குணவான்தான் கோபத்தை அடக்கிப் பொறுமையுடன் இருப்பவர் என்று நிரூபித்துவிட்டார். ஆகையால் இவருக்கே உபாத்தியாயர் பதவி என்று முடித்தது.

சபையிலிருந்த எல்லா மிருகங்களும் கை தட்டின. ஜாம்பவான் அவமானத்தால் தலே குனிந்தது. குணவானுக்கு பொறுமை குணத்தால் உயர்ந்த பதவி கிட்டியது அன்றய தினத்திலிருந்து ஜாம்பவான் கோபத்தை அறவே விட்டொழித்தது. சிங்க ராஜாவிற்கு மற்ருெரு குழந்தை பிறந்தது. தன்னே உபாத்தியாயராக வைக்க மாட்டார்களா என்று ஏங்கித் தவித்தது.

ஆகையால் குட்டிகளே, ஆறுவது சினம் என்ற செய்யுளை மனதில் வைத்துக்கொண்டு பொறுமையைக் கடைபிடியுங்கள். இப்பொழுது எழுதிக்கொள்ளுங்கள் ஆறுவது—தணிக்கவேண்டியது, சினம்—கோபம் (ஆகும்) கோபத்தை அடக்கு' என்று கூறி முடித்தது குரங்கு வாத்தியார்.

குட்டிகளின் கைகள் தாமாகவே செய்யுளை எழுதின. இதற்குள டிங், டிங் என மணியும் அடித்தது.



198557